வருடாந்த அறிக்கை
2022



தேநீரின் கலை வண்ணம்...
அரு சலோன் தேயிலை...

இலங்கை தேயிலை சபை

வருடாந்த அறிக்கை 2022

இலங்கை தேயிலை சபை

அஞ்சல் முகவரி : இலங்கை தேயிலை சபை, 574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
தொலைபேசி : +94-11-2587814/2582121/2583687
தொலைநகல் : +94 112587341/2589132
ஈ மெயில் : teaboard@pureceylontea.com
இணையத்தளம் : www.srilankateaboard.lk
www.pureceylontea.com

பொருளடக்கம்

தூரநோக்கு மற்றும் குறுநோக்கு - 03
இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்கள்- 04
கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் - 05
சிரேஷ்ட நிர்வாக அலுவலகர்கள் - 05
ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் உறுப்பினர்கள் - 06
தலைவரின் செய்தி - 07
முக்கிய சிறப்பம்சங்கள் - 09
பெருநிறுவனப் பின்னணி - 10
கட்டமைப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் - 11
- தேயிலை ஆணையாளரின் பிரிவு - 12
- தேயிலை ஏற்றுமதிப்பிரிவு - 22
- தேயிலை ஊக்குவித்தல் பிரிவு - 26
- தேயிலை சுவைத்தல் பிரிவு - 48
- பகுப்பாய்வு ஆய்வுகூடம் - 50
- நிர்வாகப்பிரிவு - 51
- உள்ளக கணக்காய்வுப் பிரிவு - 52
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு - 53

தொழிற்துறையின் சுயவிபரம்- 54
நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான அணுகுமுறை - 69
நிதி மீளாய்வு - 71
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 106
இலங்கை தேயிலை சபையின் அலுவலகங்கள் - 112

தூரநோக்கு

உலகச் சந்தையில் சிலோன் தேயிலையினை
“மிகவும் விரும்பத்தக்க பானமாக” நிலைநிறுத்துவதாகும்

குறுநோக்கு

நிலையான அபிவிருத்தியினூடாக, நாட்டில்
வெளிநாட்டு அந்நிய செலவாணிப் பரிமாற்றத்தினை
அதிகரித்தல் மற்றும் அதனூடாக தோட்டத்தொழிற்
சமூகத்தின் பொருளாதார வளர்ச்சியை உறுதி
செய்வதாகும்.

இலங்கை தேயிலை சபையின் உறுப்பினர்கள் -2022

தலைவர்

தலைவர், இலங்கை தேயிலை சபை
திரு. ஜயம்பதி மொல்லிகொட
திரு. நிராஜ் டி மெல், *ஜூலை தொடக்கம் திசம்பர் வரை*

உறுப்பினர்கள்

மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), தோட்டத்தொழிற்துறை அமைச்சு
திரு. ஹர்ஷ இழுப்பிட்டிய, *ஜூலை வரை*
திருமதி. டபிள்யூ. எம்.டி.ரி. விக்கிரமசிங்க, *ஒக்டோபர் தொடக்கம் திசம்பர் வரை*
பணிப்பாளர் (பதில்கடமை), நிதி அமைச்சு
திருமதி. கே. ஏ. டபிள்யூ. பெர்னாண்டோ, *சன. தொடக்கம் பெப். வரை*

மேலதிக பணிப்பாளர் நாயகம் (பதில்கடமை), நிதி அமைச்சு,
திரு. எம்.எம்.சி.பி. மொஹோட்டிஹெதர *மே தொடக்கம் ஜூலை வரை*

பணிப்பாளர், பொது நிறுவனங்கள் திணைக்களம், நிதி அமைச்சு
திருமதி.ஜே.பி.பி. லியனகே *ஆகஸ்ட் தொடக்கம் திசம்பர் வரை*

மேலதிக செயலாளர், வர்த்தக அமைச்சு
திரு. டி. ஜீவநாதன் *ஜனவரி தொடக்கம் திசம்பர் வரை*

செயலாளர் நாயகம், சிலோன் தோட்டத்தொழிலாளர் சங்கம்
திரு. லலித் ஒபேசேகர, *செப்டம்பர் வரை*

தலைவர், சிலோன் தோட்டத்தொழிலாளர் சங்கம்
திரு. சேனக்க *அலவத்தேகம, அக்டோபர் தொடக்கம் திசம்பர் வரை*

தலைவர், கொழும்பு தரகர்கள் சங்கம்
திரு. கிஷாந்த டீ மெல், *மார்ச் வரை,*
திரு. யசான் பெர்னான்டோ, *ஜூலை தொடக்கம் திசம்பர் வரை*

தலைவர், கொழும்பு தேயிலைத் தரகர்கள் சங்கம்
திரு. ஜயந்த கருணாரத்ன, *செப்டம்பர் வரை,*
திரு. ஜஷான் பெர்னான்டோ, *செப்டம்பர் தொடக்கம் திசம்பர் வரை*

தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்
திரு. சஞ்சய ஹேரத், *செப்டம்பர் வரை,*
திரு. கணேஷ் தெய்வநாயகம் *செப்டம்பர் தொடக்கம் திசம்பர் வரை*

இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம்
திரு. லயணல் ஹேரத், *ஜனவரி தொடக்கம் திசம்பர் வரை*

இலங்கை தேயிலை சிறுதொழில் அபிவிருத்தி சமூகங்களின் கூட்டமைப்பு
கே.எல்.குணரத்தன *ஜனவரி தொடக்கம் திசம்பர் வரை*

அமைச்சரின் பிரதிநிதி
திரு. டபிள்யூ. எச்.எஸ். *சமரசேன ஜனவரி தொடக்கம் திசம்பர் வரை*

தேயிலை சிறுதொழில் அபிவிருத்தி அதிகாரசபை
கலாநிதி. துஷார பிரியதர்ஷன, *ஜனவரி தொடக்கம் திசம்பர் வரை*

கண்காணிப்பாளர்

திரு. அணில் அல்விஸ், *சனவரி தொடக்கம் திசம்பர் வரை*

செயலாளர்

பணிப்பாளர் நாயகம்
திரு. எஸ். ஏ. சிறிவர்த்தன

கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்கள் மற்றும் கண்காணிப்பளர்கள் - 2022

தலைவர்

பதில் கடமை, பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சு
திருமதி. கே.ஏ.ஈ. பெர்னாண்டோ, *சனவரி தொடக்கம் மார்ச் வரை*
பணிப்பாளர் நாயகம், நிதி அமைச்சு
திருமதி. ஜே.பி.பி. லியனகே, *ஆகஸ்ட்டிலிருந்து*

உறுப்பினர்கள்

மேலதிக செயலாளர், தோட்டத்தொழிற்துறை அமைச்சு
திரு.ஹர்ஷ இழுக்பிட்டிய, *சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரை*
திருமதி. டபிள்யூ. எம்.டி.தி. விக்கிரமசிங்க, *அக்டோபரிலிருந்து*
மேலதிக செயலாளர், வர்த்தக அமைச்சு
திரு. டி. ஜீவநாதன்

தலைவர், கொழும்பு தேயிலை வர்த்தகர்களின் சங்கம்,
திரு. ஜயந்த கருணாரத்ன, *ஜூலை தொடக்கம் செப்டம்பர் வரை*
திரு. சஞ்சய ஹேரத், *செப்டம்பரிலிருந்து*
தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்,
திரு. கணேஷ் தெய்வநாயகம், *செப்டம்பரிலிருந்து*

கண்காணிப்பாளர்

பிரதம உள்ளக கணக்காய்வாளர், தோட்டத்தொழிற்துறை அமைச்சு
திரு. கே. ஏ. சி. சமந்த

கணக்காய்வாளர்களின் மேற்பார்வையாளர், தேசிய கணக்காய்வு அலுவலகம்
திருமதி. எச். ஏ. டி. சந்தானி, *சனவரி தொடக்கம் அக்டோபர் வரை*

கணக்காய்வாளர் நாயகம்
திருமதி. வீ.டி. சீத்தா, நொவம்பர் *தொடக்கம் திசம்பர் வரை*

இணைப்பாளர்

பணிப்பாளர் நாயகம்,
திரு. எஸ் ஏ. சிறிவர்த்தன,

சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர்கள்- 2022

பணிப்பாளர் நாயகம் — திரு. எஸ். ஏ. சிறிவர்த்தன

தேயிலை ஆணையாளர் — திரு. ஈ. ஏ. ஜே. கே. எதிரிசிங்க

பணிப்பாளர் (ஊக்குவித்தல்) — திரு. எச். எல். பவித்திரி பீரிஸ்

பணிப்பாளர் (பகுப்பாய்வு சேவைகள்) — கலாநிதி. கே.ஆர். டபிள்யூ. அபேவிக்கிரம

பணிப்பாளர் (நிதி) — திரு. குழனு ரணசிங்க

ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குழுவின் உறுப்பினர்கள் - 2022

தலைவர்

தலைவர், இலங்கை தேயிலை சபை
திரு. ஜயம்பதி மொல்லிகொட , *(சனவரி - ஏப்பிரல்)*
திரு. நிராஜ் டி மெல், *(மே - திசம்பர்)*

உறுப்பினர்கள்

பணிப்பாளர் நாயகம் , இலங்கை தேயிலை சபை
திரு. எஸ். ஏ. சிறிவர்த்தன, *(சனவரி - திசம்பர்)*

மேலதிக செயலாளர், தோட்டத்தொழிற்துறை அமைச்சு
திரு. ஹர்ஷ இழுக்பிட்டிய, , *(சனவரி - ஆகஸ்ட்)*
திருமதி. தரங்கி விக்கிரமசிங்க, *(நொவம்பர் - திசம்பர்)*

பிரதிநிதி, தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம்
திரு. முபாதல் ஜெபர்ஜி, *(சனவரி - திசம்பர்)*

பணிப்பாளர் அக்பார் பிரதர்ஸ்
திரு. தாயிப் அக்பரலி, *(சனவரி - திசம்பர்)*

முன்னைநாள் தலைவர், பிரதிநிதி, கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம்
திரு. சஞ்ஜய ஹேரத், *(சனவரி - திசம்பர்)*

பணிப்பாளர், எம் ஜே எப் குரூப்
திரு. டில்ஹான் சி. பெர்னாண்டோ *(சனவரி - திசம்பர்)*

பிரதம நிறைவேற்று அதிகாரி, அமசோன் ரேடிங்
திரு. சுரங்க ஹேரத், *(சனவரி - ஜூலை)*

குழாம் முகாமைத்துவ பணிப்பாளர்,
சன்சயின் ஹோல்டிங்க் தனியார் நிறுவனம்
திரு. விஷ் கோவிந்தசாமி, *(சனவரி - ஜூலை)*

முகாமைத்துவ பணிப்பாளர், லும்பினி தேயிலைத் தொழிற்சாலை,
திரு. சமிந்த ஜெயவர்த்தன, *(சனவரி - திசம்பர்)*

நிபுணர், யுனிலீவர் சிலோன் தனியார் நிறுவனம்,
திரு. அவி டீ சில்வா, *(நொவம்பர் - திசம்பர்)*

முகாமைத்துவ பணிப்பாளர், லும்பினி தேயிலைத் தொழிற்சாலை,
ந திரு. விஷ் கோவிந்தசாமி, *(சனவரி - ஜூலை)*

தலைவர், தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கம்,
திரு. கணேஷ் தெய்வநாயகம், *(நொவ - திசம்பர்)*

நிபுணர், பின்லேஸ் தனியார் நிறுவனம்,
திரு. ரொமேஷ் மொறாயஸ், *(நொவம்பர் - திசம்பர்)*

தலைவரின் செய்தி



நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், 2021 ஆம் ஆண்டில் நிலவிய தேயிலை விலைகளை விட மிகவும் அதிகமான மட்டத்துக்கு அதிரித்தமையினால் நம்பிக்கையுள்ள ஆண்டாக ஆரம்பித்தது. நிறைவுற்ற ஆண்டின் மார்ச் மாத நடுப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கணிசமானளவு வீழ்ச்சியடைந்திருந்தமையினால், விலை அதிகரிப்புக்கு மேலும் ஊக்கமளிப்பதாக அமைந்தது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளின் அளவு, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாய்க்குரிய மதிப்பு வீழ்ச்சியின் அளவைவிட அதிகமாகக் காணப்பட்டது. தேயிலையின் விலைகள் மாதந்தோறும் உயர்வடைந்து சென்று, செப்டம்பர் மாதத்தில் அதியுயர் தேயிலை விலை பதிவானதுடன், அதன் பின்னர் அவ்விலையானது ஆண்டின் இறுதிவரை தொடர்ந்தது. இவ் அதீத வளர்ச்சியின் நேரடி விளைவாக, சிறு தேயிலைத்தொழிற்துறை உரிமையாளர்களுக்கு, குறிப்பாக ஆண்டின் இரண்டாவது பாதியில் வருமானம் சாதனையை எட்டியது. தேயிலை பயிர்ச்செய்கையாளர்கள், செப்ரெம்பர் மாதத்திலிருந்து பச்சை இலை கிலோகிராமுக்கு ரூபா 250 முதல் அதற்கு அதிகமான தொகையை அறவிடுவதுடன், இது கடந்த 2021ஆம் ஆண்டில், ரூபா 80 க்கும், ரூபா 90 க்குமிடையில் காணப்பட்டது. நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டு, இலங்கையின் தேயிலைத் தொழிற்துறையின் வரலாற்றில், அனைத்து உயர மட்டங்களிலும் உற்பத்தியாகும் தேயிலைகளுக்கும் அதியுயர் விலைகளை பதிவுசெய்த ஆண்டாகவும், தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளில் பாரிய பின்னடைவைச் சந்தித்த ஆண்டாகவும் திகழ்கின்றது.

தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற ஆண்டுக்கான வருடாந்த உற்பத்தி, ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 16% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தியானது 251.5 மில்லியன் கிலோகிராம்காளாக அமைந்திருந்ததுடன், இது கடந்த வருடத்தினை விட 48 மில்லியன்கள் மாத்திரம் குறைவானதாகும். கடந்த 1995 ஆம் ஆண்டில் தேசிய உற்பத்தி 246 மில்லியன் கிலோகிராம்காளாக அமைந்திருந்ததுடன், இது 26 ஆண்டுகளுக்குப் பின்னரான அதிகூடிய வீழ்ச்சியாகும். இலங்கையின் புராதன தேயிலை உற்பத்தியானது மொத்த கொள்ளளவில் 90% ஆக அமைந்திருந்ததுடன், CTCs 9% ஆகப் பதிவாகியது.

தேயிலை ஏற்றுமதிகள்

கடந்த 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் ரூபா 411 பில்லியன்களாகும். அமெரிக்க டொலர்களில் நாட்டுக்குரிய வருமானம் 1.26 பில்லியன் டொலர்களாக அமைந்ததுடன், கடந்த 2021ஆம் ஆண்டின் வருமானமான 1.26 பில்லியன் டொலர்களுடன் ஒப்பிடுகையில், 65.7 மில்லியன் டொலர்களினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த தேயிலை தேயிலை ஏற்றுமதி அளவானது 250.2 மில்லியன் கிலோகிராம்களாகக் காணப்பட்டதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 12.5% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டிலிருந்து அதிகளவான பங்குகள் முன்னோக்கி எடுத்துச்செல்லப்படுவதனால், ஏற்றுமதிச் சரிவானது உற்பத்தியை விடக் குறைவாகும்.இவ்வாண்டின் குறைவான வழங்கல் நிலைமையினைக் கருத்திற்கொண்டு, வருடாந்த FOB அலகு விலையானது 5.03 அமெரிக்க டொலர்களாக அமைந்ததுடன், இது கடந்த 2021 ஆம் ஆண்டு 4.63 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. சிலோன் தேயிலைக்கான அதிக விலையானது, இறக்குமதி நாடுகளில் சிலோன் தேயிலைக்கான அதிக கேள்வியை உறுதிப்படுத்துகின்றது. நிறைவுற்ற ஆம் ஆண்டுக்குரிய ஏற்றுமதியின் அளவானது கடந்த 25 வருடகாலத்தில் மிகவும் குறைவானதாகும். கடந்த 2014 ஆம் ஆண்டு, இலங்கை அதியுயர் தேயிலைத்தொகையான 327 மில்லியன் கிலோகிராம்களை ஏற்றுமதி செய்தது.

நிறைவுற்ற ஆண்டின், ஜூன் தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் நிலவிய உரப்பிரச்சனை, சில விவசாய உள்ளீடுகளின் பற்றாக்குறை மற்றும் போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாக பாரிய பின்னடைவுகளைச் சந்தித்தது.

தொழில்துறையின் சீரான செயல்பாடுகள், குறிப்பாக உற்பத்தியாளர்களின் செயல்பாடுகள் பாரியளவில் பாதிக்கப்பட்டன. இவையனைத்தும் தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவுக்கு பெரிதும் பங்களித்தன. எவ்வாறாயினும், தேயிலை ஏற்றுமதி வருமானமானது முந்திய ஆண்டினை விட ஒரு பகுதியே குறைவடைந்திருப்பது சிறப்பை அளிக்கிறது.

சர்வதேச நிகழ்வோட்டத்தில் சிலோன் தேயிலையின் செயல்திறன்

உலகின் மொத்த தேயிலை உற்பத்தியில் இலங்கை 5% க்குக் குறைவான பங்கினைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், உலகின் முதல் இரண்டு நிலையிலுள்ள தேயிலை உற்பத்தி நாடுகளான சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றில், அதிகளவான உள்நுகர்வு காரணமாக உற்பத்தியில் ஏறக்குறிய 75 - 80% மான பங்கினை தக்கவைத்துக் கொண்டுள்ளது, இலங்கை, ஒரு வழங்குனராக உலகளாவிய ஏற்றுமதியில் 15% பங்கைப் பேணுகின்றது. ஆபிரிக்க நாடுகளில் தொடர்ந்தும் அதிகரித்துவரும் தேயிலை உற்பத்தியானது, இலங்கைக்கான பாரிய அச்சுறுத்தலாக அமையப்பெற்றுள்ளது.

இலங்கை, சிலோன் தேயிலையினால் பல வருடங்களாக பெற்றுக்கொண்ட நற்பெயரின் காரணமாக, தேயிலைக்கான போட்டிகள் நிறைந்த சர்வதேசச் சந்தையில் தொடர்ந்தும் சிறப்பானதொரு இடத்தைப் பிடித்துள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகள்

தேயிலைத்தொழிற்துறையின் மிகவும் மந்தமான செயல்திறனை கவனத்திற்கொண்டு, உற்பத்திகளின் அளவு வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், TSHDA இன் "சஹகம்பனயா" முயற்சிகளுக்கு இணையாக "B60" திட்டத்தை மீள் ஆரம்பிப்பதானது, பச்சை இலைகளின் தரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், தற்போதைய நிலையில் மாதத்திற்கு 2 சுற்றுக்களாக பறிக்கப்படும் இலைகளை, 4 சுற்றுக்களாக அதிர்வெண்ணை அதிகரிப்பதற்கும் இதுவொரு சிறந்த உத்தியாக அமைகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களினால், முதற்கட்ட பிரதிபலிப்புக்கள் கலப்புடையதாக அமைந்தாலும், நடுப்பகுதியில் விளைவுகளின் அளவு மற்றும் தரம் போன்றவற்றில் அதிகரிப்புக்கள் ஏற்படுமெனும் நமபிக்கையில் இலங்கை தேயிலை சபை தொழிற்படுகின்றது. அத்துடன், இம்முயற்சிகளுக்கு மேலதிகமாக, முறையான மீள் மரணடுகை மற்றும் உள்நிரப்புதலை முன்னெடுப்பதற்கான போதுமானளவு தேயிலை நாற்றுக்கள் காணப்படுவது கடந்த 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலை நாற்றுமேடைத் திட்டத்தினூடாக உறுதிப்படுத்தப்படும். பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் திட்டங்கள் மற்றும் மூலோபாயங்கள் மற்றும் கொழும்பு தேயிலை வர்த்தகசங்கத்தின் சிலோன் தேயிலைக்கான சாலை வரைபடம் 2030 (CTRM 2030) ஆகிய இரண்டும் உற்பத்தியை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவதுடன், இவற்றின் பங்களிப்புகளின்றி சர்வதேச தேயிலைச்சந்தையில் தரமான உற்பத்தியாக நிலைத்துநிற்பாத்து மிகவும் கடினமாகும்.

ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் மூலோபாயம்

தற்போதைய காலகட்டத்தில், நாட்டில் நிலவுகின்ற அந்நிய செலாவணி நெருக்கடியைக் கவனத்திற்கொண்டு, சிலோன் தேயிலைக்கான ஊக்குவிப்புப் பிரச்சாரங்களை முழுமையான எதிர்பார்ப்புக்களுடன் முன்னெடுப்பது சாத்தியமற்றதாகும். இதன் விளைவாக, ரஷ்யா தவிர்ந்த ஏனைய வர்த்தக கண்காட்சிகளில் இலங்கை தேயிலை சபை பங்கேற்பது இடைநிறுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தெரிவு செய்யப்பட்ட வர்த்தக கண்காட்சிகளில் இலங்கை தேயிலை நிறுவனங்களின் பங்குபற்றலை உறுதிப்படுத்தும் வகையிலும், தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு தனது ஆதரவினை தொடர்ந்தும் வழங்கும் வகையிலும், இலங்கை தேயிலை சபையினால் 50% ஊக்கத்தொகை வழங்கப்படுகின்றது. அத்துடன், சந்தைகளில் வளர்ச்சியை வெளிப்படுத்திய தேயிலை ஏற்றுமதி நிறுவனங்களும் இலங்கை தேயிலை சபையினால் ஊக்குவிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டிலும், சிலோன் தேயிலையை சர்வதேச சந்தைகளில் நிலைநிறுத்தல் அல்லது தொடர்ந்தும் தக்கவைக்கும் நோக்குடன், இலங்கை தேயிலை சபையினால் சிலோன் தேயிலைக்கான விளம்பரப் பிரச்சாரங்களை மீண்டும் ஆரம்பிக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நிறைவுற்ற 2022 இல், இலங்கைக்கே உரித்தான தனியார் வியாபாரக் குறிகளுக்கான ஆதரவினை வழங்கும் வகையில், இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்பட்ட 3ஆம் கட்ட சிலோன் தேயிலையின் வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டத்தினூடான நிதியுதவியாக ஒரு பில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இலங்கை நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் தேசிய அறிவுசார் சொத்து அலுவலகத்தில் (NIPO) பதிவுசெய்யப்பட்ட சிங்க இலட்சணையுடன் தூய சிலோன் தேயிலை வர்த்தக நாமத்தை விளம்பரப்படுத்துவதற்கான மொத்த செலவில் 50% ஐ சீரமைப்பதற்கான ஆதரவினை இத்திட்டம் வழங்குகின்றது. இத்திட்டத்தின் கீழ், நிறைவுற்ற 2022 இல், 45 நாடுகளை உள்ளடக்கியதாக 80 திட்டங்கள் பயனடைந்துள்ளன.

அங்கீகாரம்

சிலோன் தேயிலையின் கொடியினை உயரப் பறக்கவிடுவதற்கு, இக்கடினமான சூழ்நிலையிலும் இலங்கை தேயிலை சபையின் உத்தியோகத்தர்கள் ஒன்றிணைந்து, தங்களது அயராத உழைப்பினை வழங்கியமைக்காக பாராட்டப்பட வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வருடம் முழுவதுமாக, இலங்கை தேயிலை சபையின் பிராந்திய அலுவலகங்களை நிர்வகிப்பவர்கள் உள்ளடங்களாக, இலங்கை தேயிலை சபையின் அனைத்து திணைக்கள அதிகாரிகளுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக நின்று உழைத்த அனைத்து ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துகளையும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Niraj De Mel
Chairman
Sri Lanka Tea Board

பிரதான சிறப்பம்சங்கள

வகை	அலகு	2020	2021	2022	மாற்றங்கள் (%) 2021Vs 2022
தேயிலை உற்பத்தி					
மொத்த தேயிலை உற்பத்தி	மில்லியன் கி.கிராம்	278.85	299.49	251.50	(16.02)
உயரத்தின் வகைப்படுத்தல்					
உயர்	மில்லியன் கி.கிராம்	62.24	65.33	56.30	(13.82)
நடுத்தரம்	மில்லியன் கி.கிராம்	46.73	50.99	40.20	(21.16)
தாழ்நிலை	மில்லியன் கி.கிராம்	169.88	183.18	155.00	(15.38)
செயலாக்க முறையினால் வகைப்படுத்தல்					
பழைமைவாத (உயிரியல் உள்ளடங்கலாக)	மில்லியன் கி.கிராம்	252.72	270.72	227.10	(16.11)
சிதிசி	மில்லியன் கி.கிராம்	24.10	26.19	22.60	(13.71)
பச்சை	மில்லியன் கி.கிராம்	2.03	2.57	1.80	(29.96)
(உடனடி தேயிலை தவிர்ந்த உற்பத்தி அளவுகள்**)					
உடனடி தேயிலை உற்பத்தி	மில்லியன் கி.கிராம்	3.06	3.64	4.47	22.95
தேயிலை விற்பனைகள் (பொது, நேரடி, தனியார்					
மொத்த விற்பனை அளவுகள்	மில்லியன் கி.கிராம்	268.24	295.79	248.64	(15.94)
உயர்	மில்லியன் கி.கிராம்	56.46	63.52	53.72	(15.43)
நடுத்தரம்	மில்லியன் கி.கிராம்	48.05	52.34	42.08	(19.60)
தாழ்நிலை	மில்லியன் கி.கிராம்	163.72	179.94	152.84	(15.06)
மொத்த விற்பனை அளவுகள்	ரூபா/கி.கிராம்	628.21	615.44	1,234.24	100.55
உயர்	ரூபா/கி.கிராம்	580.90	587.13	1,093.10	86.18
நடுத்தரம்	ரூபா/கி.கிராம்	553.94	550.80	1,030.82	87.15
தாழ்நிலை	ரூபா/கி.கிராம்	666.32	644.23	1,339.86	107.98
தேயிலை ஏற்றுமதிகள்					
தேயிலை ஏற்றுமதிகள் கொள்ளளவு (மீள் ஏற்றுமதி தவிர்ந்த)	மில்லியன் கி.கிராம்	256.58	276.00	241.65	(12.45)
வகைகளின் படி ஏற்றுமதியின் அளவு					
கறுப்பு	மில்லியன் கி.கிராம்	251.78	270.76	236.77	(12.55)
பச்சை	மில்லியன் கி.கிராம்	1.99	2.27	1.85	(18.41)
உடனடி	மில்லியன் கி.கிராம்	2.81	2.97	3.02	1.81
தேயிலை ஏற்றுமதிகள் பெறுமதி (மீள் ஏற்றுமதி தவிர்ந்த)	ரூபா/கி.கிராம்	218.80	249.10	389.50	56.36
வகைகளின் அடிப்படையில் ஏற்றுமதி வருமானம்					
கறுப்பு	ரூபா/கி.கிராம்	210.62	238.86	374.22	56.67
பச்சை	ரூபா/கி.கிராம்	4.11	5.07	7.25	42.97
உடனடி	ரூபா/கி.கிராம்	4.07	5.16	8.04	55.76
மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் அளவு	**மில்லியன் கி.கிராம்**	265.57	285.87	250.17	(12.49)
மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி	**ரூபா/கி.கிராம்**	230.17	263.35	411.05	56.09

மூலம்: இலங்கை தேயிலை சபை மற்றும் இலங்கை சுங்கம்

1.நிறுவனப் பின்னணி

“இலங்கை தேயிலை சபையானது, 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி, தேயிலை கட்டுப்படுத்தல் சபை - தேயிலை கட்டுப்படுத்தல் சட்டம் இல 51, 1976, தேயிலை ஏற்றுமதி ஆணையாளர் திணைக்களம் - தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தல்) சட்டம் இல 16, 1959, சிலோன் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் - தேயிலை ஆராய்ச்சி சட்டம் 1925 மற்றும் இலங்கை தேயிலை சபையின் சட்டம் இல 14,1975 மற்றும் அதன் திருத்தங்கள் இல 17, 1985, இல 44,1990, இல 29, 2003, இல 44, 2006 மற்றும் இல 13, 2018 போன்றவற்றின் கீழ் சிலோன் தேயிலை பரப்புரை சட்டம் ஆகியன ஒன்றிணைந்து நிறுவப்பட்டது. தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் 1993ஆம் ஆண்டு தேயிலை ஆராய்ச்சி சட்ட இல 52, 1993, முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இலங்கை தேயிலை சபையின் சட்டம் மற்றும் தேயிலை கட்டுப்பாட்டு சட்டத்திலான திருத்தங்கள், தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைய, தொழிற்துறைத் தேவைகளை அடிப்படையாகக்கொண்டு சர்வதேச தேவைகளைப் பூரணப்படுத்தும் வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை தேயிலை சபையை நிறுவுவதற்கு முன்னர், இலங்கை தேயிலையின் (சிலோன் தேயிலை) சர்வதேச ரீதியிலான விற்பனையை ஊக்குவித்தல் செயற்பாடுகள், தேயிலை பரப்புரை சபையினால் கையாளப்பட்டதுடன், இது தனியார்த் துறையினால் முன்னெடுக்கப்பட்டது. தேயிலை பரப்புரையானது, பாராளுமன்றத்தில் வாக்களிப்புக்குட்படுத்தப்பட்டு, தேயிலைத் தொழிற்துறையின் சகல அதிகாரங்களுடனும், 1976 ஆம் ஆண்டு, இலங்கை தேயிலை சபையாக மாற்றியமைக்கப்பட்டது.


இலங்கை தேயிலை சபை, ஒழுங்குபடுத்தும் அமைப்பாக, தேயிலைத் தொழிற்துறையின் உற்பத்தி, பயிர்செய்கையை மேலும் அதிகரித்தல், மீள்நடுகை, பழைய தோட்டங்களை மீளக்கட்டியெழுப்புதல், தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக செயற்படுகின்றது. அத்துடன், தேயிலைத்தோட்டங்களை நிர்வகிப்பதுடன் தொடர்புபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் கட்டுப்பாடுகள் மற்றும் இயக்கங்களை ஒழுங்குபடுத்துவதுடன், தேயிலை உற்பத்தி, உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலான சந்தைப்படுத்தலையும் ஒழுங்குபடுத்துகின்றது. “சிலோன் தேயிலையின் தரத்தினைப்” பேணும் வகையில், தொழிற்சாலையிலிருந்து, கப்பலில் ஏற்றும் வரைக்குமான அனைத்து செயற்படிமுறைகளும் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன. மேலும், விற்பனை இடம், கப்பலுக்கு முன்னரான கட்டம், தரகர்களின் களஞ்சியசாலைகள், கலவையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர் ஆகிய கட்டங்களின் போது தேயிலையின் தர நியமங்களுக்கான கண்காணிப்பைத் தீவிரப்படுத்த பல செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சுகாதார முறையிலான கலப்பு மற்றும் களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளுக்கான ஆலோசனை சேவைகளும் வழங்கப்படுகின்றன.

அபிவிருத்தி தொழிற்பாடுகளின் கீழ், தொழிற்சாலைகளை தரமுயர்த்தல் மற்றும் தேயிலை மீள்நடுகை, அறுவடையின் பின்னரான பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றுக்கான மானிய வசதிகள் இலங்கை தேயிலை சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், புலன்சார் மற்றும் இரசாயன பகுப்பாய்வுகள் மூலமாக, தேயிலையின் தரத்துக்கான சான்றுதழ்களை வழங்குவது, தேயிலை அபிவிருத்தியின் கீழான பிரதான பொறுப்பாக அமையப்பெற்றுள்ளது.

சர்வதேச ரீதியில் சிலோன் தேயிலையை சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல், தேயிலை தொடர்பான புள்ளிவிவரங்களை சேகரித்தல் மற்றும் விபரித்தல், நிலையான சந்தைகளில் போட்டியிட்டு, முன்னணிச் சந்தைகளில் சிலோன் தேயிலையின் வியாபாரத்தினை மேலும் விஸ்தரித்தல் போன்றவற்றினைக் கொண்டதாக ஊக்குவித்தல் செயற்பாடுகள் விளங்குகின்றன.

பெருந்தோட்டத் தொழிற்துறை அமைச்சினால், இலங்கை தேயிலை சபையின் தொழிற்பாடுகள் அனைத்தும் மேற்பார்வை செய்யப்பட்டு, அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். நிதித் தொழிற்பாடுகள் தொடர்பான விடயங்கள் பொது நிறுவனங்கள் திணைக்களத்தினால் கண்காணிக்கப்படுவதுடன், விசேடமாக, திறைசேரி மானியங்களை பெறுவதற்கான பரிந்துரைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.

2. கட்டமைப்பு மற்றும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள்



2.1 தேயிலை ஆணையாளரின் பிரிவு

இலங்கை தேயிலை சபையின் பிரதானமானதொரு பிரிவாக, தேயிலை ஆணையாளரின் பிரிவு திகழ்வதுடன், இலங்கை தேயிலை சபை சட்டத்தின் இல 14, 1975 இன் கீழ், நியமிக்கப்பட்ட "தேயிலை ஆணையாளரின்" தலைமையின் கீழ் வழிநடத்தப்படுகின்றது.

இப்பிரிவினால் தேயிலைத்தொழிற்துறையின் அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் வெளியகற்றல்களுக்கான இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல. 14, 1975 மற்றும் தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டம் இல 51, 1957 களின் பிரகாரம் ஒழுங்கமைத்தல் மற்றும் அபிவிருத்தி தொழிற்பாடுகளுடன் தொடர்புபட்ட அனைத்து செயற்பாடுகளும் நிர்வகிக்கப்படுகின்றன. இலங்கையில் தேயிலைத் தொழிற்துறையை ஒழுங்கமைத்தல் மற்றும் அபிவிருத்தி தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாக தேயிலை ஆணையாளர் தொழிற்படுகின்றார். தேயிலை ஆணையாளரின் தொழிற்பாடுகள், ஒழுங்கமைத்தல், அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதிகள் என மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

தேயிலை ஆணையாளர் பிரிவின் தொழிற்பாட்டு அலகுகள், ஏழு பிராந்திய அலுவலகங்களாகப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவை கம்பளை, பண்டாரவளை, இரத்தினபுரி, மாத்தறை, பந்துரலிய, காலி மற்றும் நுவரேலியா ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளன. தேயிலைத் தொழிற்துறையின் நிலையான அபிவிருத்திக்காக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான பதிவுகள்/ அனுமதிப்பத்திர புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- பச்சைத் தேயிலை கொழுந்து முகவர்களுக்கான புதிய பதிவுகள் மற்றும் புதுப்பித்தல்கள்
- நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க மையங்களுக்கான புதிய பதிவுகள் மற்றும் புதுப்பித்தல்கள்
- தொழிற்சாலைகள் மற்றும் முகவர்கள் மட்டத்தில் பச்சை இலை வழங்குனர்களுக்கான நியாயமான விலைகள் வழங்கப்படுவதை கண்காணித்தல்
- சிறந்த உற்பத்தி செயற்பாடுகள் (GMP) குறித்து விசேட கண்காணிப்புக்களை முன்னெடுத்தல்
- தேயிலைத் தொழிற்துறையுடன் தொடர்புடைய தரவுகளை சேகரித்தல்
- தேயிலைத் தொழிற்துறையில் முறைகேடான செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் வகையில், தேயிலைத் தொழிற்சாலைகள், முகவர் நிலையங்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க மையங்களில் விசேட ஆய்வுகளை முன்னெடுத்தல்
- தேயிலை உற்பத்தி நடவடிக்கைகள், பச்சைத் தேயிலைக் கொழுந்து முகவர்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களை கண்காணித்தல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- தேயிலை நடுகைக்கான புதிய தொழில்நுட்பம் மற்றும் தேயிலைக் காணிகளை பொறியியல்மயமாக்கல் போன்றவற்றுடனான அறிவுப் பகிர்வு நிலையங்களாக "மாதிரி தேயிலைக் காணிகளை" அபிவிருத்திசெய்தல்
- பச்சை தேயிலை இலை தரநியமங்களை விருத்திசெய்தல் மற்றும் B60 திட்டத்தினை தொடர்வதன் மூலமாக அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை தணித்தலுக்கான திட்டங்களை அமுல்படுத்தல்
- தொழிற்சாலை நவீனமயமாக்கல் திட்டத்துக்கான மானியங்களை தொடர்ச்சியாக வழங்குதல்
- தேயிலை மீள்நடுகை, புதிதாக பயிரிடல், உள்நிரப்புதல், தொகுதி உள்நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்கான மானியங்களை வழங்குவதன் மூலமாக தேயிலைத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை அறிமுகப்படுத்தல், தொடர்ச்சியாக வழங்குதல்
- தேயிலைத் தோட்டங்களை பொறியியல்மயப்படுத்த புதிதாக பயிரிடல் மற்றும் தேயிலை மீள்நடுகைக்கான மானியத்திட்டங்களை அறிமுகப்படுத்தல்
- முழு உலக வெப்பமுறலினால் ஏற்படக்கூடிய நீடித்த வறட்சியான காலநிலையிலிருந்து மீண்டெலழுவதற்கும், சமனாகப் பரந்த பயிர்களை உருவாக்கும் வகையிலும் நீர்தெளிப்பு நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை நிறுவ ஊக்குவித்தல்
- "மாதிரி தேயிலைக் காணி" திட்டத்தின் கீழ் தேயிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கான மானியங்களை வழங்குதல்
- தேயிலைக்கன்று நாற்றுமேடை மானியத்திட்டங்களை தொடர்ச்சியாக அமுல்படுத்தல்
- களத்துக்கான புதிய நியாயமான விலைச்சுட்டியினை அறிமுகம்செய்தல்
- உயிரியல் உரத்திட்டத்துக்கான மானியத்திட்டத்தினை ஆரம்பித்தல்
- சூரிய மின்சக்தி உருவாக்கத் திட்டத்துக்கான மானியத்திட்டத்தினை தொடருதல்
- ஈரப்பதன் மானிக்குரிய மானியத்திட்டத்தினை தொடருதல்
- உணவுப்பாதுகாப்பு சான்றுதலுக்கான மானியத்திட்டத்தினைத் தொடருதல்
- பச்சைக் கொழுந்து வழங்குனர்களுக்கான உரங்களை தேயிலைத் தரகர்களினூடாகக் கொள்வனவு செய்வதற்காக, 8 % வருடாந்த வட்டியுடனான மென் கடன் திட்டம் இலங்கை தேயிலை சபையினால் ஆரம்பிக்கப்பட்டது
- ஏலவிற்பனை மற்றும் ஏற்றுமதி, தேயிலை சுவையார்களுக்கு மற்றும் ஆய்வுகூடத்துக்கு அனுப்பமுன்னர் தேயிலை மாதிரிகளை மேற்கொள்வதுடன், சிலோன் தேயிலையின் தரத்தினைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- ஒழுங்குபடுத்தல் பணிகளில் இலங்கை சுங்கம், இலங்கை பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு உதவுதல்
- தேயிலைக் காணிகளை பதிவுகளை தொடருதல் மற்றும் பதிவுகளைப் புதுப்பித்தல்

பிரதான சாதனைகள்

- தேயிலைத்தோட்ட நவீனமயமாக்கல் மானியத் திட்டத்துக்காக 33 தொழிற்சாலைகளுக்கு ரூபா. 19.76 மில்லியன் வழங்கப்பட்டது
- மீள்மரநடுகைக்காக 413.32 ஹெக்டயர்களுக்கான மானியமாக ரூபா 62.1 மில்லியன் வழங்கப்பட்டது.
- தேயிலைக்காணிகளைப் பதிவுசெய்தலுடன் தொடர்புடைய நவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன (தரவுகளை புதுப்பித்தல்).
- "தேயிலைக்கன்று நாற்றுமேடை நிலையத்துக்கான" மானியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 49 நாற்றுமேடை நிலையங்களுக்காக 24.5 மில்லியன் ரூபாய்கள் மானியமாக

வழங்கப்பட்டன.

- சூரிய மின்சக்திக் கலங்களைப் பொருத்துவதற்கான மானியத் திட்டத்தின் கீழ் 2022 இல் ரூபா 20.99 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டது.
- GMP திட்டத்தின் கீழ், ஈரப்பதன் மானிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான தரச் சான்றுதழைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 16.55 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டது.
- பச்சைத் தேயிலை இலைகளின் மற்றும் தயாரிக்கப்பட்ட தேயிலையின் இறுதி உற்பத்தியின் தரத்தினை அதிகரிக்கும் பொருட்டு, இலங்கை தேயிலை சபையினால், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாக சிட்டி எப்எம், ருஹுனு எப்எம் மற்றும் கந்துரட்ட சேவய போன்ற ஒலிபரப்பும் சேவைகளினூடான பிரச்சாரத்துக்காக 2022 இல் ரூபா 4.6 மில்லியன் செலவு செய்யப்பட்டது.
- நிறைவுற்ற 2022 இல், உரத்தினை கொள்வனவு செய்யும் பொருட்டு, பச்சை தேயிலை இலை வழங்குனர்களிடையே பகிர்ந்தளிப்பதற்காக, உர மென்கடன் திட்டத்தினூடாக 259 தொழிற்சாலைகளுக்கு ரூபா 2.44 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது.

உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்

அட்டவணை 2.1: தொழிற்பாடுகளின் அடிப்படையில் தேயிலைத் தொழிற்சாலைகளை வகைபிரித்தல்

	தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை			
நிலைமை	அதிகம்	நடுத்தரம்	குறைவு	மொத்தம்
சொந்தக் கொழுந்துகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டவை தொழிற்சாலைகளின் எ+கை)	56	17	5	78
சொந்த மற்றும் கொள்வனவு செய்யப்படும் கொழுந்துகள் (தொழிற்சாலைகளின் எ+கை): அ) மொத்த உற்பத்தியில் 50% க்கும் குறைவான சொந்தக் கொழுந்து	11	26	84	121
ஆ) மொத்த உற்பத்தியில் 50% க்கும் அதிகமான சொந்தக் கொழுந்து	64	29	13	106
கொள்வனவு செய்யப்பட்ட கொழுந்துகள் மாத்திரம்	11	40	262	313
தேயிலை தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யவில்லை	32	63	105	201
தொழிற்பாட்டிலுள்ள பதியப்பட்ட தொழிற்சாலைகள்	174	175	470	819
தொழிற்பாட்டில் இல்லாத பதியப்பட்ட தொழிற்சாலைகள்	28	28	71	127
பதியப்பட்ட மொத்த தேயிலைத் தொழிற்சாலைகள்	202	203	542	946

மூலம்: இலங்கை தேயிலை சபை

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் இல 51, 1957 இன் கீழ், தேயிலை உற்பத்தியுடன் தொடர்புடைய, தேயிலை உற்பத்தியாளர்களின் பதிவேடொன்று தேயிலை ஆணையாளர் பிரிவினால் பேணப்படுவதுடன், தேயிலைத் தொழிற்சாலை மற்றும் உற்பத்தியாளர்களுடன் தொடர்புடைய விடயங்களும் பதியப்படுதல் வேண்டும். கொழும்பு ஏலத்தினூடாக தேயிலையை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக தேயிலை ஆணையாளரின் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்படுதல் அவசியமாகும்.

தேயிலையை உற்பத்திசெய்யும் அனைத்து தொழிற்சாலைகளும், அவற்றின் கட்டடங்கள், கருவிகள் மற்றும் தரமான தேயிலையை உற்பத்தி செய்யும் வகையிலான தொழிற்சாலையின் தொழிற்பாடுகள், தொழிற்சாலையில் தரமான தேயிலை உற்பத்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் அமைதல் அவசியமாகும்.

கொள்வனவு செய்யப்படும் இலைகளுக்கு செலுத்தத்தக்க நியாயமான விலைகள்

தேயிலைக் கட்டுபாட்டு சட்டத்தின் பிரிவுகளை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தி செயற்பாடுகளுக்காக தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு தொழிற்சாலைகள், தேயிலை ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட விலைச்சுட்டிகளுக்கமைவாக, அத்தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட தேயிலைகளை அடிப்படையாகக்கொண்டு நியாயமான கட்டணத்தை வழங்கக் கடமைப்பட்டுள்ளன. பச்சை இலை வழங்குனர்களுக்கு மாதாந்த அடிப்படையில் நியாயமான விலைகள் வழங்கப்படுவது குறித்து தேயிலை ஆய்வாளர்களினால் உறுதிசெய்யப்படுவதுடன், இச்செயற்பாடுகள் உதவி தேயிலை ஆணையாளரினால் கண்காணிக்கப்படும். செலுத்தத்தவறிய அல்லது காலம் தாமதனான கொடுப்பனவுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில், இலங்கை தேயிலை சபையின் அதிகாரிகளினால் அப்பெறுமதி ஏலத்திலிருந்து மீளப்பெறப்பட்டு, உரிய தேயிலைக்கொழுந்து வழங்குனரிடம் திருப்பிக் கையளிக்கப்படும்.

செலுத்தத்தவறிய கட்டணங்கள்

மீளாய்வு ஆண்டில் 2022 ஜனவரி, 1வரையான காலப்பகுதியில், பச்சை தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்காக செலுத்தத்தவறிய மொத்தக்கட்டணம் ரூபா 871.468 மில்லியன்களாகக் கணிக்கப்பட்டது. இதில் ரூபா 59.62 மில்லியன் மீளப்பெறப்பட்டு இலை வழங்குனர்களிடம் திருப்பியளிக்கப்பட்டது.

அட்டவணை 2.1.2: நிலுவையிலுள்ள கட்டணங்களின் நிலைமை (ரூபா)

பிராந்தியம்	2022.01.01 லான தொகை	2021 இல் சேர்க்கப்பட்ட தொகை	மீட்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகை (ரூபா)	சிறுதொழிலாளர் காரணமாக 31.12.2022 அன்று மிகுதித்தொகை	தொழிற்சாலைகளை தொழிற்படுத்துவதனாலான தொகை	தொழிற்சாலைகளை மூடுவதனாலான தொகை
பந்துரலிய	47,868,679.49	-	-	47,868,679.49	30,990,709.60	16,877,970.89
பண்டாரவளை	6,131,070.08	17,723,256.60	4,275,341.28	19,578,985.40	19,495,393.85	83,591.55
காலி	184,245,153.83	24,583,447.45	-	208,828,601.28	154,619,130.36	54,209,470.92
கம்பளை	187,289,653.36	25,781,625.70	46,267,168.39	168,027,586.23	149,314,266.72	18,713,319.51
மாத்தறை	74,219,027.97	3,993,544.06	8,732,536.48	75,548,096.51	68,352,653.39	7,195,443.12
நுவரெலியா	18,833,080.55	25,067,444.36	349,622.35	43,550,902.56	34,860,597.80	8,690,304.76
இரத்தினபுரி	352,881,733.51	1,880,497.00	-	354,762,230.51	181,274,386.61	173,487,843.90
மொத்தம்	871,468,398.79	99,029,815.17	59,624,668.50	918,165,081.98	638,907,138.33	279,257,944.65

மூலம்: இலங்கை தேயிலை சபை

அ) பச்சைத் தேயிலை இலை விநியோகிஸ்தர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்

தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி, பச்சைத் தேயிலை இலைகளுடன் தொடர்புடைய வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் வழங்கப்படுவதுடன், வருடாந்தம் அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பிப்பது அவசியமாகும். பதிவுகளுக்கு முன்னர் பதிவுகளைப் புதுப்பித்தல் வேண்டும். தேயிலை சேகரிப்பு மையங்கள் மற்றும் பச்சைத் தேயிலைக் கொழுந்துகளை எடுத்துச் செல்லும் வகானங்களின் தரநியமங்கள் இலங்கை தேயிலை சபையினால் மிகவும் நெருங்கிய வகையில் கண்காணிக்கப்படும்.

அட்டவணை 2.1.3: கடந்த 2022 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட பச்சைதேயிலை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை

பிராந்தியம்	01.01.2022 லான அனுமதிப்பத்திர விநியோகிஸ்தர்கள்	அனுமதிப்பத்திர புதுப்பித்தல்கள்	விநியோகிக்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்கள்	31.12.2022 இல் பச்சைத்தேயிலை இலைகளை கையாள்வதற்கான அனுமதிப்பத்திரம்
பந்துரலிய	250	220	12	232
பண்டாரவளை	179	175	10	185
காலி	242	224	15	239
கம்பளை	191	174	5	179
மாத்தறை	265	251	7	258
நுவரெலியா	107	106	0	106
இரத்தினபுரி	598	464	40	504
மொத்தம்	1832	1614	89	1703

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஆ) பச்சைத் தேயிலை இலை விநியோகிஸ்தர்களுக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்

பச்சைத் தேயிலைக் கொழுந்துகள் மாத்திரமே தேயிலை உற்பத்திக்கான மூலப்பொருளாகக் காணப்படுகின்றது. தரமான பச்சைத் தேயிலைக் கொழுந்துகளிலிருந்து சிறந்த தரமுள்ள தேயிலை உற்பத்திசெய்யப்படுகின்றது. பச்சைத் தேயிலைக் கொழுந்துகளுக்குரிய தர நியமங்களுக்கான அரச வர்த்தமானி அறிவித்தல் கடந்த 2021 ஆம் ஆண்டு திசம்பர் 14 ஆம் திகதி இலங்கை தேயிலை சபையினால் வெளியிடப்பட்டது. அவ் அரச வர்த்தமானியின் பிரகாரம், தேயிலைக் கொழுந்துகளை கையாளும் மையத்தில், குறைந்தது 60% மான தேயிலை இலைகள் சிறந்த தரமுடையவையாக அமைதல் அவசியமாகும். இதற்கமைய, தேயிலை சிறு முயற்சியாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்துடன் ஒன்றிணைந்து நிறைவுற்ற 2022 இல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள், கலந்துரையாடல்கள், பத்திரிக்கைக் கட்டுரைகள், சமூக ஊடகங்கள் மூலமாக தகவல்களை பிரசுரித்தல் மற்றும் விளம்பரப்படுத்தல், தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலைக் கொழுந்து சேகரிப்பாளர்கள் மற்றும் தேயிலை வளர்ப்பாளர்களை இலக்காகக் கொண்ட கூட்டங்களை முன்னெடுத்தல் போன்ற பரந்துபட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொழிற்சாலை மற்றும் விநியோகிஸ்தர் மட்டங்களில் பச்சைத் தேயிலைக் கொழுந்துகளின் தரத்தினை மதிப்பீடு செய்யும்வகையில் THSDA மற்றும் TRI இன் ஆதரவுடன் பிராந்திய தணிக்கைக்குழுக்கள் நிறுவப்பட்டன. தொழிற்சாலை மட்டத்தில் அவதானிக்கப்பட்ட பச்சைத் தேயிலை இலைகளின் தரங்கள் தொடர்பான அறிவித்தல்கள் பதியப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களுக்கு வழங்க ஆரம்பிக்கப்பட்டன.

அட்டவணை 2.1.4: பிராந்திய அடிப்படையில் பச்சை இலை தரநியமங்கள்

பிராந்தியம்	சிறப்பானது	சிறப்பைவிட சற்றுக்குறைவு	குறைவு
பந்துரலிய	37	17	46
பண்டாரவளை	20	32	48
காலி	37	14	49
கம்பளை	32	20	48
மாத்தறை	43	17	40
நுவரெலியா	33	25	42
இரத்தினபுரி	29	22	49

மூலம்: இலங்கை தேயிலை சபை

இ) களியாட்டக் காலங்களில், அவசர பயிர் முகாமைத்துவத் திட்டம்

களியாட்டக் காலங்களில் தேயிலைத் தொழிற்சாலைகள் தற்காலிகமாக நீண்ட காலத்துக்கு மூடப்படுவதனால், அக்காலத்தில் அறுவடையில் ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டமானது கடந்த 2005 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டதுடன், இத்திட்டத்தின் கீழ் பல்வேறு நடவடிக்கைகள் அறிமுகம் செய்தப்பட்டதன் காரணமாக தேயிலை ஆணையாளரின் பிரிவினால் அறுவடை இழப்பினை முற்றாக கட்டுப்படுத்தக்கூடியதாக அமைந்தது.

இ) "மாதிரி தேயிலை காணித்திட்டம்"

இத்திட்டம், இலங்கையிலுள்ள பகுதியளவில் இயந்திரமயமாக்கப்பட்ட நிலையான தேயிலைத் தோட்டங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகம்செய்யப்பட்டது. குறிப்பிட்ட திட்டமானது இவ்வருடத்திலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதுடன், முந்திய வருடத்தில் ஒத்துக்கப்பட்ட ரூபா 7.49 மில்லியன் நிதியினைப் பயன்படுத்தி 24 காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

இத்திட்டமானது, பின்வரும் நோக்கங்களை அடையும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது..
- தேயிலைத்தொழிற்துறையில் தேயிலைக்காணிகள் மற்றும் ஊழியர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- நிலையான மற்றும் சீரான அறுவடையினை வருடம் முழுவதுமாக முன்னெடுத்தல்
- தேயிலைத்தோட்ட தொழிற்துறையின் அதியுச்ச பொருளாதார வாழ்வுக்காலத்தினை அதிகரித்தல்
- உற்பத்திச்செலவைக் குறைத்தல் (தேயிலைக்கொழுந்து பறித்தலுக்கான செலவை 60% ஆல் குறைக்க எதிர்பார்க்கப்படுகின்றது)
- இலைகளின் தரத்தினை நடுத்தரமான மட்டத்தில் பேணுதல்
- சன்றுதழ்களை பெறும்பொருட்டு, தேயிலை தொழிற்துறைக்கான குறைபாட்டு தரநிலைகளை அறிமுகம் செய்தல் (உ+ம்; மழைக்காட்டு உடன்பாட்டுச் சான்றுதழ்)

அட்டவணை 2.1.5: மாதிரி தேயிலைக் காணிகளுக்கான மானியக் கொடுப்பனவுகள்

பிராந்தியம்	கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள்	செலுத்தப்பட்ட காணிகளின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா)
பந்துரலிய	2	2	550,000
பண்டாரவளை	4	4	1,050,000
காலி	2	2	1,050,000
கம்பளை	4	4	1,440,000
மாத்தறை	9	9	2,597,570
நுவரெலியா	3	3	800,000
இரத்தினபுரி	-	-	-
மொத்தம்	24	24	7,487,570

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஈ) மீள்நடுகைக்கான மானியத்திட்டம்

தேயிலை மீள்நடுகை, புதிய கன்றுகளை நடுதல் மற்றும் தேயிலை மீள்நிரப்புதல் போன்ற செயற்பாடுகளினூடாக தேயிலைப் பிரிவினை அபிவிருத்தி செய்யும்பொருட்டு, இலங்கை தேயிலை சபையினால் ரூபா 122 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இதனடிப்படையில், இம்மானியங்கள் பத்து ஏக்கர்களுக்கு அதிகமான காணிகளைக் கொண்ட கூட்டுறவுப்பிரிவு மற்றும் தனியார் எஸ்டேட்டுகளுக்கு வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கான இலக்குகளும் விதிக்கப்பட்டன.

அட்டவணை 2.1.6: மீள்நடுகைக்கான மானியக்கொடுப்பனவுகள்

பிராந்தியம்	கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா)	விஸ்தீரம் (ஹெக்.)	நிறைவேற்றப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை
பந்துரலிய	27	5,371,200.00	28.67	89
பண்டாரவளை	7	1,447,500.00	18.23	33
காலி	16	2,518,100.00	16.36	46
கம்பளை	80	15,586,000.00	77.25	106
மாத்தறை	13	11,250,000.00	44.55	138
நுவரெலியா	69	18,510,800.00	197.56	118
இரத்தினபுரி	39	7,419,000.00	30.7	104
மொத்தம்	251	62,102,600.00	413.32	634

மூலம்: இலங்கை தேயிலை சபை

இத்திட்டத்தின் நோக்கங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன;

i. தேயிலை உற்பத்திகளை அதிகரித்தல்
ii. தேயிலைக் காணிகளின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
iii. தேசிய தேயிலை மீள்நடுகை வீதத்தினை 3% ஐப் பேணுதல்

நிறைவுற்ற 2021 ஆம் ஆண்டின் மீள்நடுகை நடவடிக்கைகளுக்கான நிதிகள் கூட்டுறவு மற்றும் தனியார்த் துறையினரிடம் காணப்பட்டன.

உ) தேயிலைகாணிகளைப் பதிவுசெய்வதற்கான திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்காக நாட்டிலுள்ள அனைத்து தேயிலைக் காணிகளும் பதிவுசெய்யப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய 485000 தேயிலைக் காணிகள் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான அனைத்துத் தரவுகளும் கணணிமயப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவற்றுக்கான சீராக்கல் அறிவித்தல்கள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படலாம்.

ஊ) தேயிலை நாற்றுப்பண்ணை மானியத் திட்டம்

கூட்டுறவுப் பிரிவுகள் மற்றும் 10 ஏக்கர்களுக்கு அதிகமான தேயிலைக் காணிகளைக் கொண்டுள்ள உரிமையாளர்களுக்கு நியமமான நாற்றுப்பண்ணைகளை அமைப்பதற்காக, ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வரியினூடான ஒதுக்கப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படும். இம்மானியத் திட்டமானது ஒரே நேரத்தில் குறைந்தது 100,000 தேயிலைக்கன்றுகளைக் கொண்ட, நிலையான நிழற்குடையமைப்பு மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களைக் கொண்ட நாற்றுப்பண்ணைகளுக்கு மாத்திரம் பொருத்தமானதாகும். மானியத்தொகையின் பெறுமதி ரூபா 1.5 மில்லியன்களாகும். அனைத்து நாற்றுப்பண்ணை செயற்பாடுகளும் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வழிகாட்டல்களுக்கமைவாக முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை 2.1.7: தேயிலை நாற்றுப்பண்ணையை அமைப்பதற்கான மானியக் கொடுப்பனவுகள்

பிராந்தியம்	கொடுப்பனவு வழங்கப்பட்ட நாற்றுப்பண்ணைகளின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட கொடுப்பனவு (ரூபா)
பந்துரலிய	7	2,750,000.00
பண்டாரவளை	13	6,250,000.00
காலி	10	5,850,000.00
கம்பளை	6	4,400,000.00
மாத்தறை	8	2,250,000.00
நுவரெலியா	5	3,000,000.00
இரத்தினபுரி	49	24,500,000.00

மூலம்: இலங்கை தேயிலை சபை

எ) சேதன உரத்துக்கான மானியத் திட்டம்

அரசின் கொள்கை தீர்மானத்துக்கிணங்க, தேயிலைப்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படும் பகுதிகளில் சேதன உரத்தினை உற்பத்திசெய்வதற்கான ஆதரவினை வழங்கும் திட்டமானது இலங்கை தேயிலை சபையினால் ஆரம்பிக்கப்பட்டதுடன், மண்ணின் நலம் மற்றும் மண்ணிலுள்ள சேதன கனிப்பொருட்களின் அளவினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றது. மண்ணில் சேதனப் பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலமாக, இரசாயன உரங்கள் மீள் உறிஞ்சப்படுவது அதிகரிக்கப்படுவதனால், தேயிலைக் காணிகளின் உற்பத்தித்திறன் அதிகரிக்கின்றது. முந்திய வருட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி, இவ்வருடத்துக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அட்டவணை 2.1.8: சேதன உரத்துக்கான மானியத்திட்டம்

பிராந்தியம்	கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட கட்டணம் (ரூபா. மில்லியன்)	அலகுகளின் எண்ணிக்கை
பந்துரலிய	32	4.6	17
பண்டாரவளை	41	2.10	7
காலி	25	0.9	3
கம்பளை	19	3.50	12
மாத்தறை	36	1.8	6
நுவரெலியா	33	1.1	3
இரத்தினபுரி	30	0.90	3
மொத்தம்	**216**	**14.9**	**51**

மூலம்: இலங்கை தேயிலை சபை

i) Other projects

தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் ஏற்றுமதி தேயிலை களஞ்சியசாலைகளில் சூரிய மின்கட்டமைப்பினை நிறுவுவதற்காக கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரபிக்கப்பட்ட திட்டத்துக்கான மானியத்தொகை கொடுப்பனவுகள் இவ்வருடத்தில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் (இம் மானியத்திட்டத்தின் கீழ் 31 தொழிற்சாலைகள் மற்றும் 3 களஞ்சியசாலைகளுக்காக ரூபா 20.99 மில்லியன் மானியமாக வழங்கப்பட்டது). ஈரப்பதன்மானி பகிர்ந்தளித்தல் (இத்திட்டத்தின் கீழ் 145 தொழிற்சாலைகள்), HACCP/ ISO உணவுப்பாதுகாப்பு சான்றுதழ் மற்றும் ஏற்றுமதியாளர் களஞ்சியசாலையில் புதிய இயந்திரங்களைப் பொருத்துதல் போன்ற புதிய மானியத் திட்டங்கள் இவ்வருடத்தில் அறிமுகம் செய்யப்பட்டன.

தேயிலைத்தோட்ட மட்டத்திலான தேயிலைத் தரவிருத்தி செயற்பாடுகள்

சிறந்த தரத்தினை பேணும்பொருட்டு, கட்டடங்கள், கருவிகள், இயந்திரங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மைகள் ஆகியன பொருத்தமான நிலைமைகளில் பேணப்படுவது அவசியமாகும். மேலும், தேயிலைத் தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தினால் நியமிக்கப்பட்ட தரநியமங்களைப் பின்பற்றுதல் அவசியமாகும். ஏதாவது தேயிலைத் தொழிற்சாலை, தேயிலை ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட தேவைப்பாடுகள் அல்லது தரநியமங்களைப் பின்பற்றத்தவறும் நிலையில், அத்தொழிற்சாலையின் பதிவுகள் இடைநிறுத்தப்படும் அல்லது நீக்கப்படும். மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகள் மற்றும் கள நடவடிக்கைகளின் பின்னரான பரிந்துரைகள் பிராந்திய உதவி தேயிலை ஆணையாளர்களினால் கண்காணிக்கப்படும். மேலும், மேற்குறிப்பிட்ட தேவைகளை பேணும்வகையில் பிராந்திய அலுவலக உத்தியோகத்தர்களினால் வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

அ) தொழிற்சாலைகள் நாவீனமயப்படுத்தல் மானியத்திட்டம்

அட்டவணை 2.1.9: தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மானியத்திட்டம்

பிராந்தியம்	கிடைக்கபெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட கட்டணம் (ரூபா)
பந்துரலிய	15	4	3,308,333.33
பண்டாரவளை	2	2	1,396,666.67
காலி	12	9	7,001,198.00
கம்பளை	17	5	2,051,437.07
மாத்தறை	12	4	1,332,949.17
நுவரெலியா	53	4	2,190,500.00
இரத்தினபுரி	22	5	2,481,354.00
மொத்தம்	**133**	**33**	**19,762,438.24**

மூலம்: இலங்கை தேயிலை சபை

Development Programs memories



Factory leaf transporting agents awareness program - Matara



Awareness meeting for growers - Kalawana



Factory owner awareness meeting - Galle



Awareness meeting for growers - Galle



Dealer awareness meeting - Kalawana



Awareness meeting for growers - Gampola



Quality operating officer awareness meeting - Matara



SLTB officials visit for Model tea land inspection - Galle



Model tea land project- Gampola



SLTB officials visit for Model tea land inspection - Galle



Tea nursery program - Gampola



Tea nursery program - Galle

தேயிலைத் தொழிற்சாலைகளின் நவீனமயப்படுத்தல் செயர்பாடுகளுக்காக இலங்கை தேயிலை சபையினால் நிதிகள் ஒதுக்கப்பட்டன. தரமான தேயிலை உற்பத்தியை அதிகரித்தல், தேயிலைத்தொழிற்துறைக்கான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் தேயிலைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கங்களாக அமையப்பெறுகின்றன..

ஆ) தேயிலைத்தொழிற்சாலைகளுக்கான சிறந்த உற்பத்திப் செயற்பாட்டினை (GMPs) நிறுவுதல்

தேயிலைத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் தொழிற்பாடுகளின் தரத்தினை விருத்திசெய்யும் பொருட்டு தேவையான வழிகாட்டிகளை வழங்குவதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 536 மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், உற்பத்தித் தொழிற்பாட்டின் தரத்தினை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அட்டவணை 2.1.10: பிராந்திய அடிப்படையிலான GMP மதிப்பாய்வுகள்

பிராந்தியம்	GMP களை மதிப்பாய்வு செய்தல்	தரநிலையிலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை			
		மிகச்சிறந்தது	சிறந்தது	சராசரி	குறைவு
பந்துரலிய	49	25	21	3	0
பண்டாரவளை	112	34	71	7	0
காலி	88	55	32	1	0
கம்பளை	77	37	30	10	0
மாத்தறை	44	22	22	0	0
நுவரெலியா	78	40	34	4	0
இரத்தினபுரி	88	37	43	8	0
மொத்தம்	536	250	253	33	0

மூலம்: இலங்கை தேயிலை சபை

இ) முன்னறிவிப்பின்றிய மதிப்பாய்வுகள் (செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் - TTO)

தேயிலைத்தொழிற்துறையிலான பிழையான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும், ATC யினால் தலைமைதாங்கப்படும் அணியினால் தொழிற்பாடுகள் கையாளப்படுகின்றன.

நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், தேயிலை ஆணையாளரின் பிரிவின் கள உத்தியோகத்தர்களினால், தேயிலைத் தொழிற்சாலைகளில் 168 அவசரநிலைமை மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அட்டவணை 2.1.11: செயற்பாட்டு அணி தொழிற்பாடுகள்

பிராந்தியம்	நடாத்தப்பட்ட மதிப்பாய்வுகளின் எண்ணிக்கை
பந்துரலிய	17
பண்டாரவளை	36
காலி	13
கம்பளை	37
மாத்தறை	10
நுவரெலியா	60
இரத்தினபுரி	14
மொத்தம்	187

மூலம்: இலங்கை தேயிலை சபை

ஈ) குறைவான NSA மூலோபாயம்

இத்திட்டமானது, NSA படிநிலையில் கீழ் மட்டத்திலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு உருவாக்கப்பட்டதாகும். பச்சைத் தேயிலை இலைகளின் தரம் மற்றும் உற்பத்தித்தரத்தினை விருத்திசெய்வதனூடாக இத்தொழிற்சாலைகளின் NSA ஐ உயர் மட்டங்களுக்கு உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

உ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டாளர்களுக்கான ஏலவிற்பனை உரிமைகள்

நிராகரிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்பாட்டாளர்களுக்கான ஏலவிற்பனை உரிமைகளை வழங்குவதற்கான கட்டமைப்பு அறிமுகம்செய்யப்பட்டது. ஏலவிற்பனை உரிமைகளைப் பெறுவதற்குத் தகுதிபெறும்பொருட்டு மிகக்குறைந்தது 80% GMP தரத்தினைக்

கொண்டிருத்தல் அவசியமாகும். நிறைவுற்ற 2022 இல் புதிய நிராகரிக்கப்பட்ட தேயிலைத் தொழிற்பாட்டாளர்களுக்கான ஏலவிற்பனை உரிமைகள் வழங்கப்பட்டன.

ஊ) நிராகரிக்கப்பட்ட தேயிலை தொழிற்பாட்டு மையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் அவற்றில் சிறந்த உற்பத்தி செயற்பாடுகளை (GMP) விருத்திசெய்தல்

அழிக்கப்படாத நிராகரிக்கப்பட்ட தேயிலையிலிருந்து நுகரக்கூடிய தேயிலைகளை பிரித்தேடுப்பதே நிராகரிக்கப்பட்ட தேயிலையின் செயற்படுத்தலாகும். நிராகரிக்கப்பட்ட தேயிலை நிலையங்களின் தரத்தினை விருத்திசெய்யும் வகையில் தேவையான வழிநடத்தல்களை வழங்கும்பொருட்டு GMP திட்டம் முன்னெடுக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட தேயிலையை கொண்டுசெல்வதற்குப் பிரயாண அனுமதிப்பத்திரம் அவசியமானதாக அமைவதுடன், இது இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படும்.

அட்டவணை 2.1.12: நிறைவுற்ற 2021 லான நிராகரிக்கப்பட்ட தேயிலை செயலாக்க நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட அளவுகள்

பிராந்தியம்	01.01.2021 இல் பதிவுசெய்யப்பட்ட செயற்பாட்டாளர்கள்	வருடத்திலான புதுப்பித்தல்கள்	வருடத்தில் புதிதாக விநியோகிக்கப்பட்டவை	31.12.2021 லான செயலாக்க நிலையங்களின் எ+கை	31.12.2021 இல் விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள்	அனுமதிப்பத்திரத்தினுடாக விநியோகிஸ்தர்களினால் கொள்வனவு செய்யப்பட்ட நிராகரிக்கப்பட்ட அளவுகள் (Kg)
பந்துரலிய	9	9	0	9	1,423	5,905,935
பண்டாரவளை	1	1	0	1	977	3,796,804
காலி	3	2	0	2	608	1,852,372
கம்பளை	120	113	3	116	2,030	8,627,025
மாத்தறை	4	3	1	4	269	868,524
நுவரெலியா	2	2	0	2	1,824	11,005,444
இரத்தினபுரி	4	2	2	4	1,294	5,045,703
மொத்தம்	**143**	**132**	**6**	**138**	**8,425**	**37,101,807**

மூலம்: இலங்கை தேயிலை சபை

எ) தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான உணவுப் பாதுகாப்புச் சான்றுதழ் (HACCP & ISO 22000)

தொழிற்பாட்டிலுள்ள அனைத்துத் தேயிலைத் தொழிற்சாலைகளுக்குமான உணவுப்பாதுகாப்புச் சான்றுதழ்களைக் கொண்டிருப்பது மிகவும் அவசியமானதாகும். இலங்கை தேயிலை சபையின் பதிவுகளைப் புதுப்பிக்கும்போது இது தொடர்பில் ஆராயப்படுவதுடன், சபையினால் சான்றுதழ்களைப் பெறுவதற்குத் தேவையான வழிகாட்டல்களும் வழங்கப்படும்.

அட்டவணை 2.1.13: தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான சர்வதேசச் சான்றுதழ்கள்

பிராந்தியம்	HACCP (தொழிற்சாலைகளின் எண்ணிக்கை)	ISO 22000 (தொழிற்சாலைகளின் எண்ணிக்கை)	ஏனைய சர்வதேச சான்றுதழ்கள் (RA/CQC) (தொழிற்சாலைகளின் எண்ணிக்கை)
பந்துரலிய	10	18	6
பண்டாரவளை	51	16	9
காலி	49	49	16
கம்பளை	29	29	0
மாத்தறை	33	50	14
நுவரெலியா	51	16	9
இரத்தினபுரி	46	47	7
மொத்தம்	**269**	**225**	**61**

மூலம்: இலங்கை தேயிலை சபை

2.2 தேயிலை ஏற்றுமதிகள் பிரிவு

தேயிலைச் சட்டம் இல 16, 1959 (வரி மற்றும் ஏற்றுமதிகளைக் கட்டுப்படுத்தல்) மற்றும் இலங்கை தேயிலை சபைச் சட்டம் இல 14, 1975 போன்றவற்றிலான அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் ஆகியன, இலங்கை தேயிலை சபையின், தேயிலை ஏற்றுமதிப்பிரிவினால் நிர்வகிக்கப்படுகின்றன. தேயிலை ஏற்றுமதியாளர்கள், தேயிலைப் பொதியாளர்கள், சேமிப்பிடங்கள், இறக்குமதியாளர்கள், தேயிலைப் பொதிகளின் வகை, தேயிலையை மீளமைத்தல், தேயிலைக்கான மிகக்குறைந்த தரநிர்ணயத்தினை கண்காணித்தல், தேயிலை ஏற்றுமதிக்கான அங்கீகாரத்தினை வழங்குதல், தேயிலை ஏற்றுமதியின் புள்ளிவிபரங்களை தொகுத்தல் மற்றும் இலங்கையின் இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் (FTAs) கீழ், தேயிலை ஏற்றுமதியினைக் கண்காணித்தல் போன்றவற்றினைப் பதிவு செய்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் முன்னெடுக்கப்படும். மேலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பிரதான தொழிற்பாடுகளும் 2022 முழுவதுமாக முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையில் தேயிலை ஏற்றுமதி செயன்முறையின் செயல்திறன் மற்றும் வினைத்திறனை விருத்தியடையச்செய்யும் பொருட்டு, 2022 ஆம் ஆண்டிலும் விசேட திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன,

1. தேயிலை ஏற்றுமதிகளுக்கான GMP சான்றுதழ்களை வழங்குதல்
2. இலங்கை தேயிலை சபை - இலங்கை சுங்கத்துடன் இணைந்த ஆய்வுகளை முன்னெடுத்தல்

தேயிலை ஏற்றுமதியின் மேன்மைத்தன்மையினை நிலைநிறுத்தும் பொருட்டு, இலங்கை சுங்க ஏற்றுமதி செயற்பாட்டு நிலையத்திலுள்ள (EFC) தேயிலைக் கொள்கலன்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.
மேலும், அனைத்து ஏற்றுமதியாளர் களஞ்சிய நிலையங்களிலும், தேயிலை செயற்படுத்தலின் தரத்தினைப் பாதுகாத்தல் மற்றும்

விருத்தியடையச்செய்யும் பொருட்டு, அவற்றின் தொழிற்பாடுகள் மற்றும் சிறந்த
உற்பத்தி செயல்முறைகளுக்காக அனைத்து களஞ்சிய நிலையங்களுக்கும் HACCP தர சான்றுதழ்கள் மிகமுக்கியமானவையாகத் திகழ்கின்றன. அத்துடன், அனைத்து ஏற்றுமதியாளர் களஞ்சியசாலைகளுக்குமான சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்கான ஆய்வுகளும் (GMP) முன்னெடுக்கப்பட்டன.

நிறைவுற்ற 2021 இல், சர்வதேச தேயிலைச் சந்தையில், நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றும்பொருட்டு, தயாரிப்பினை பன்முகப்படுத்தல், தர விருத்திகள், அதிக பெறுமதி சேர்த்தல் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தக்கூடிய நவீன தொழிநுட்பங்களில் முதலீடுகளை முன்னெடுக்கும் வகையில் ஏற்றுமதி பொதியிடல் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும்முகமாக, இலங்கை தேயிலை சபையினால் வட்டி மானியத்திட்டமொன்று அறிமுகம் செய்யப்பட்டது.

மிகமுக்கியமானவையாகத் திகழ்கின்றன. அத்துடன், அனைத்து ஏற்றுமதியாளர் களஞ்சியசாலைகளுக்குமான சிறந்த உற்பத்தி நடைமுறைகளுக்கான ஆய்வுகளும் (GMP) முன்னெடுக்கப்பட்டன.

மேற்கொள்ளுதல்

பதிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஏற்றுமதியாளர்கள், பொதியாளர்கள், சேமிப்பிடங்கள் மற்றும் இறக்குமதியாளர்களை புதுப்பித்தல் ஆகியன தேயிலை ஏற்றுமதிப் பிரிவின் பிரதான பணிகளாக விளங்குகின்றன.

செல்லுபடியாகும் வியாபாரப்பதிவு, பதிவுசெய்யப்பட்ட தேயிலை களஞ்சியசாலை (களஞ்சியப்படுத்தல், அரைத்தல் மற்றும் பொதியிடல்), தேயிலை சுவைத்தல் வசதிகளுடனான தேயிலை சுவையாளர் மற்றும் மிகக்குறைந்த மூலதனமாக ரூபா. ஒரு மில்லியன் (மூலதனமாக்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட) போன்றன பூரணமாக்கப்படும் பட்சத்தில் தேயிலை ஏற்றுமதியாளராக பதிவுசெய்துகொள்வதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்.

கடந்த 1986, ஜனவரி 28 இல் வெளியிடப்பட்ட விசேட அரச வர்த்தமானி இல 386/13 இன் படி, இலங்கை தேயிலை சபை ஈடுபடுவாராயின், இலங்கைத் தேயிலை சபையில் பதிவுசெய்தல் அவசியமாகும். ஒவ்வொரு பதிவும் ஒரு வருடத்துக்கு மாத்திரம் செல்லுபடியானதாக அமைவதுடன், வருடாந்தம் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.

தேயிலை சட்டத்தின் (வரி மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாடு) சட்டம் இல 16, 1959 இன் கீழ், ஏற்றுமதியாளராக பதிவுசெய்யப்பட்ட எந்த நிறுவனமும் தேயிலை இறக்குமதியாளராகவும் பதிவுசெய்யப்பட தகுதியுடையவர்களாவர்.

கடந்த 1986 டிசம்பர், 5 இல், விசேட அரச வர்த்தமானி இல 326/17 ஊடாக பிரசுரிக்கப்பட்டு, பின்னர் திருத்தியமைக்கப்பட்டு கடந்த 1986 செப்டம்பர் 10 இல் பிரசுரிக்கப்பட்ட விசேட அரச வர்த்தமானி இல 410/11 மற்றும் கடந்த 2003 மார்ச் 20 இல் பிரசுரிக்கப்பட்ட விசேட அரச வர்த்தமானி இல 1280/8 களில் வெளியிடப்பட்ட இலங்கை தேயிலை சபையின் விதிமுறைகளுக்கமைய, (தேயிலையை களஞ்சியப்படுத்தல்) குறிப்பிட்ட நேரத்தில், 1000 கிலோகிராம்களுக்கு அதிகமாக தேயிலை களஞ்சியப்படுத்தப்படுவதாயின், இலங்கை தேயிலை சபையின் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின் பிரிவுகளுக்கமைய, அவற்றுக்கான நோக்கம் திருப்திகரமானதாக அமைவதுடன், இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்யப்படுதல் அவசியமாகும்.

இலங்கை தேயிலை சபை விதிமுறைகளின் 1981 (இறக்குமதி மற்றும் ஏற்றுமதி) கீழ், இலங்கை தேயிலையுடன், ஏனைய விசேட உற்பத்தித் தேயிலைகளைக் கலந்து, சில்லறைக் கொள்கலன்களின் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இக் கொள்கலன்கள் அல்லது பொதிகள் "இலங்கையில் பொதியிடப்படும் சிலோன் தேயிலை மற்றும் ஏனைய தேயிலை உற்பத்திகளின் கலப்பு" அல்லது இலங்கையில்

பொதியிடப்படும் சிலோன் தேயிலை மற்றும் ஏனைய தேயிலை உற்பத்திகளின் கலப்பு" அல்லது இலங்கையில் பொதியிடப்படும் ஏனைய உற்பத்தித் தேயிலைகள்" எனும் குறிப்பினைத் தாங்கி நிற்பதுடன், அனைத்துக் கொள்கலன்களும் இலங்கைத் தேயிலை சபையில் பதிவு செய்யப்படும்.

தேயிலை ஏற்றுமதிக்கான அனுமதியினைப் பெறும்பொருட்டு, பதிவு செய்யப்பட்ட அனைத்து ஏற்றுமதியாளர்களும், தேவையான அறிக்கைகளுடன், ASYCUDA அமைப்பினூடாக, CUSDEC க்களை தேயிலை ஏற்றுமதிப் பிரிவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்றுமதிக்காக தயார் நிலையிலுள்ள தேயிலைப் பொருட்கள், அவற்றுக்குரிய நியாயமான தரநிர்ணயத்துடன் இணங்கும் தன்மைகள் தொடர்பில் இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்களினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

விதிமுறைகளுக்கமைய, 1986 (தேயிலைப் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்), எவராவது உள்ளூர்ப் பாவனைக்கான வியாபார செயற்பாடுகளுக்காக தேயிலைப் பொதியிடல் நடவடிக்கைகளில் அல்லது ஏதாவது பொதியிடல் செயற்பாடுகளில்

அட்டவணை 2.2.1 தேயிலை ஏற்றுமதியாளர்கள், பொதியாளர்கள், உற்பத்தித் தரகர்கள் மற்றும் இறக்குமதியாளர்களை பதிவுசெய்யும் புள்ளிவிபரவியல் (2022)

பதிவுகள்	க்கமைய 01.01.2022	2022 ஆம் ஆண்டு காலப்பகுதியிலான புதிய பதிவுகள்	31.12.2022 க்கமைய மொத்தம்
ஏற்றுமதியாளர்கள்	369	புதிய பதிவுகள் : 40	401
பொதியாளர்கள்	691	ஏற்றுமதியாளர்கள்/ உள்ளூர் பொதியாளர் புதிய பதிவுகள் : 108	703
களஞ்சியசாலை	194	களஞ்சியசாலை புதிய பதிவுகள் : 20	283
இறக்குமதியாளர்கள்	102	இறக்குமதியாளர் புதிய பதிவுகள் : 02	103
உற்பத்தித் தரகர்கள்	8		08

மூலம்: இலங்கை தேயிலை சபை

தேயிலையை இறக்குமதி செய்தல்

இலங்கை தேயிலை சபையினால் 5,886,131.70 கிலோகிராம் தேயிலையை இறக்குமதி செய்வதற்காக, 441 இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட காலப்பகுதியில் பௌதீகளவில் இறக்குமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 5,931,242 கிலோகிராம்களாக அமைந்ததாக மீளாய்விலிருந்து அறியமுடிகின்றது.

அட்டவணை 2.2.2: பௌதீகளவிலான இறக்குமதிகள் - ஜனவரி - திசம்பர் 2022

நாடு	வகை	இறக்குமதி செய்யப்பட்ட நிறை(Kgs)	CIF பெறுமதி (ரூபா)	பெறுமதி (ரூபா)
சீனா	பச்சைத் தேயிலை	2,025,066	779.89	1,579,328,412
	விசேட வகை	118,940	1,465.35	174,289,034
	வெள்ளைத் தேயிலை	49,986	1,614.20	80,687,490
	கபின் நீக்கப்பட்ட தேயிலை	431	8,720.61	3,758,583
	உப மொத்தம்	**2,194,423**	**837.61**	**1,838,063,518**
இந்தியா	CTC	1,833,931	524.51	961,917,328
	விசேட வகை (கறுப்புத் தேயிலை)	700,582	1,245.02	872,241,606
	பச்சைத் தேயிலை	37,799	579.16	21,891,522
	உப மொத்தம்	**2,572,312**	**721.55**	**1,856,050,456**
ஜேர்மனி	பச்சைத் தேயிலை	421	2,267.75	954,723
	விசேட வகை	85	7,550.34	641,779
	உப மொத்தம்	**506**	**3,155.14**	**1,596,502**
ஜப்பான்	பச்சைத் தேயிலை	200	5,912.50	1,182,500
	விசேட வகை	151,120	1,754.89	265,198,526
	உப மொத்தம்	**151,320**	**1,760.38**	**266,381,026**
கென்னியா	CTC	976,564	735.16	717,931,015
	உப மொத்தம்	**976,564**	**735.16**	**717,931,015**
தாய்வான்	விசேட வகை	155	11,720.05	1,816,608
	உப மொத்தம்	**155**	**11,720.05**	**1,816,608**
ஐக்கிய இராட்சியம்	பச்சைத் தேயிலை	285	630.00	179,550
	விசேட வகை`	3,027	375.00	1,135,125
	உப மொத்தம்	**3,312**	**396.94**	**1,314,675**
மியான்மார்	பச்சைத் தேயிலை	1,400	64,482.60	90,275,640
	CTC	600	29,619.58	17,771,748
	உப மொத்தம்	**2,000**	**54,023.69**	**108,047,388**
இந்தோனேசியா	CTC	24,200	714.04	17,279,768
	உப மொத்தம்	**24,200**	**714.04**	**17,279,768**
வியாட்நாம்	பச்சைத் தேயிலை	6,450	595.70	3,842,265
	உப மொத்தம்	**6,450**	**595.70**	**3,842,265**
இறுதி மொத்தம்		**5,931,242**	**811.35**	**4,812,323,221**

மூலம்: இலங்கை தேயிலை சபை

தயாரிக்கப்பட்ட தேயிலைக்கான மிகக்குறைந்த ISO 3720 தரநியமத்தினை பேணுதல்

வழங்கப்பட்ட அனைத்துவிதமான தேயிலை மாதிரிகள், தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்ட மாதிரிகள், இறக்குமதிகளின் பின்னரான தொகைகள், இறக்குமதியாகிய தேயிலைத் தொகைகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கு தயார் நிலையிலுள்ள தேயிலைத்

தொகைகள் ஆகியன உத்தரவு வழங்கப்பட்ட வகைப்பிரிவுகளுக்குள் காணப்படுகின்றமை, ISO 3720 தரநிர்ணயத்தினை ஒத்திருத்தல் மற்றும் மாசுற்றிருத்தல் குறித்து, இலங்கை தேயிலை சபையினால் நியமிக்கப்பட்ட தேயிலை சுவையாளர் நிபுணர் குழாமினால் ஆய்வுகள் மேற்கொண்டு பொருத்தமான தயாரிக்கப்பட்ட தேயிலைகளுக்கு மாத்திரம் ஏற்றுமதிகளுக்கான அனுமதி வழங்கப்படும்.

அட்டவணை 2.2.3: ஒவ்வொரு மாதிரியாக்கல் மட்டங்களிலுமான தரக் குறைபாடுகளின் எண்ணிக்கை

மாதிரிகளின் வகைகள்	பெறப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	ISO தரநிர்ணயத்துக்கு கீழான மற்றும் மாசுற்றவற்றின் எண்ணிக்கை
ஏற்றுமதிப் பிரிவினால் ஏலத்துக்கு முன்னர் எடுக்கப்பட்ட மாதிரிகள்	2081	331
ஏலத்துக்கு முன்னரான பின்வாங்கல்கள் (வாரியத்தினால்)	2907	
கப்பலுக்கு முன்னர்	10103	3

மூலம்: இலங்கை தேயிலை சபை

நுகர்வுக்குப் பொருத்தமற்ற தேயிலைகளை அழித்தல்

ஏலத்துக்கு முன்னர், கப்பலுக்கு ஏற்ற முன்னர் மற்றும் விசேட ஆய்வுகளின்போது மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற தயாரிக்கப்பட்ட தேயிலைகள், ஏற்றுமதிப் பிரிவின் விசேட கண்காணிபின் கீழ் அழிக்கப்படும். இதனடிப்படையில் நிறைவுற்ற 2022 ஆம் வருடத்தில், மொத்தமாக 160,844.34 கிலோகிராம் தராரிக்கப்பட்ட தேயிலைகள் அழிக்கப்பட்டன.

FTA களின் கீழ் ஏற்றுமதிகளின் செயற்திறன்

இலங்கை, இந்தோ- இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் (PSFTA) கீழ் தேயிலைக்கான விசேட வரி விகிதப் பங்கினை (TRQ) அனுபவிக்கின்றது. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2022 ஆம் வருடத்துக்கான TRQ இன் குறிப்பிடத்தக்க நுகர்வுகள் பதியப்படவில்லை.

அட்டவணை 2.2.4: FTA இன் கீழான TRQ இன் நுகர்வு (2022)

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA)	வருடத்துக்கான பங்கு (கிலோகிராம்)	மொத்த ஏற்றுமதிகள் (கிலோகிராம்)
இந்தியா- இலங்கை	15,000,000.00	50,410.68
பாகிஸ்தான் - இலங்கை	10,000,000.00	0

மூலம்: இலங்கை தேயிலை சபை

தேயிலை ஏற்றுமதி பொதியிடல் தொழிற்சாலைகளை தரமுயர்த்தல் அல்லது நவீனமயப்படுத்தலுக்கான வட்டியுடனான மானியத்திட்டம்

நுகர்வோர் மற்றும் சர்வதேச தேயிலைச் சந்தையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், உற்பத்திகளின் பன்முகத்தன்மைகள், தர விருத்திகள் மற்றும் அதிக பெறுமதி சேர்ப்புக்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கங்களுடன் வட்டியுடனான மானியத்திட்டம் இலங்கை தேயிலை சபையினால் அறிமுகம்செய்யப்பட்டது. மானியத்திட்டத்துக்கு தகுதியடைய ஏற்றுமதியாளர் ஒருவருக்கு ஐந்து வருட காலத்துக்கு அதியுயர் 50% வட்டியாக, வருடமொன்றுக்கு ரூபா ஐந்து மில்லியன் வரை செலுத்தக்கூடிய வகையில் மற்றும் அதியுயர்வாக 10% வட்டி விகிதின் அதிகபட்ச உச்சவரம்புடன் பெறத் தகுதியுடையவராவர். குறிப்பிட்ட வருடத்தில், இமானியத்திட்டத்தின் கீழ் எட்டு ஏற்றுமதியாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

தேயிலை மீட்டெடுப்புக்கள்

அதிகளவான நார்ச்சத்துக்களைக் (16.5%) ஐ விட அதிகம்) கொண்ட தேயிலைத் தொகைகள், தோட்டங்களுக்கான கூட்டுக் கட்டண திரும்பலை அடிப்படையாகக்கொண்டு, தரமுயர்த்தலுக்காக விடுவிக்கப்படுவதுடன், தரமுயர்த்தலின் பின்னர், உற்பத்தியாளரினால் அதே விலைப்பட்டியல் எண்ணிலிருந்து மறுபட்டியல் செய்யமுடியும். நுண்ணுயிரியல் ரீதியாகப் பாதிப்புக்குள்ளான தேயிலைத்தொகைகளை பதிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களின் ஒப்புதலுடன் உடனடித்தேயிலைத் உற்பத்திக்கு அனுப்பக்கூடியதாக அமையும்.

2.3. தேயிலை ஊக்குவித்தல் பிரிவு

உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில், சிலோன் தேயிலை ஊக்குவித்தல் திட்டங்களுக்குப் பொறுப்பாக இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவு தொழிற்படுவதுடன், இது கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான பிரிவுகளினுள் வகைபிரிக்கப்பட்டுள்ளது;

- சமூக ஊடகங்கள், PR மற்றும் TTL ஊடாக சிலோன் தேயிலைக்கான ஒரே தேசிய ஊக்குவித்தல் பிரச்சாரம்
- தேயிலைக்கான பொதுவான ஊக்குவிப்பு
- இலங்கைக்கு உரித்தான சிங்க இலட்சணை உரிமம் பெற்ற உற்பத்திகளுக்கான உக்குவித்தல்
- சர்வதேச ரீதியிலான உணவு மற்றும் பானங்களுக்கான வர்த்தகக் கண்காட்சிகளில் பங்குபற்றுதல்
- மிகமுக்கியமான அனைத்து தேயிலை நுகர்வு நாடுகளிடையே, முலோபாய சந்தை சுயவிபரங்களைத் தொகுத்தலும், பரப்புதலும்
- தேயிலைப் பிரிவுகளுக்கான கொள்கைகளை உருவாக்குவதற்கு தோட்டத்தொழிற்துறை அமைச்சுக்கு உதவுதல்
- போட்டியாளர்களின் செயற்பாடுகளை பகுப்பாய்வு செய்தல்
- சிங்க இலட்சணை வர்த்தக்குறிகளை பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல், தனியார்ப்பிரிவு பொதியாளர்களுக்கான உரிமங்களை வழங்குதல்
- சிலோன் தேயிலை மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை வளர்ப்பு நாமங்கள் அல்லது இலட்சனைகளை புவியியல் சுட்டிக்காட்டிகளாகப் பாதுகாப்பதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்தல்
- ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலை இலட்சணையைப்பதிவுசெய்தல் மற்றும் தனியார்ப்பிரிவு பொதியாளர்களுக்கான உரிமங்களை வழங்குதல்
- சிலோன் தேயிலைக்கான புவியியல் சுட்டிக்காட்டி - AFD, CIRAD மற்றும் SLTB ஆகிய மூன்று தரப்பிரனருடனான திட்டம்
- பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் வருமானத்தை அதிகரிப்பதற்காக 05% ஊக்கத்தொகைத்திட்டம்
- உள்ளூர் தேயிலைத் ஊக்குவிப்புக்கள்

சிலோன் தேயிலைக்கான ஒரே தேசிய ஊக்குவித்தல் பிரச்சாரம்

இலங்கைத் தேயிலையை ஏனைய தேயிலை வகைகளிடையே பிரபல்யமடயச் செய்தல் மற்றும் விளம்பரப்படுத்தும் நோக்குடன் தொடர்புடையதாக "சிலோன் தேயிலைக்கான" ஒரே தேசிய ஊக்குவித்தல் பிரச்சாரம் அமையப்பெறுகின்றது. வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவுகளினூடாக சர்வதேச சந்தையில் "சிலோன் தேயிலைக்கான" ஒரே தேசிய ஊக்குவித்தல் பிரச்சார நிகழ்வுகள் இலங்கை தேயிலை சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டன. இதன் பிரதான கூறுகளாக, ஊடக விளம்பரங்கள் (TTL மற்றும் சமூக/ டிஜிட்டல்), வெளியக விளம்பரங்கள், தேநீர் சேவைகள், தேயிலை செயலமர்வுகள் மற்றும் பயிற்சிப்பாசறைகள் மற்றும் ஏனைய பொதுமக்களுடனான செயற்பாடுகள் போன்றன அமையப்பெறுகின்றன.

சர்வதேச ஊடகப் பிரச்சாரம் - சர்வதேச தேயிலை தினம்

தேயிலையின் பொருளாதார, உயிரியல் மற்றும் பௌதீக நன்மைகளை வெளிப்படுத்தும் வகையில், சர்வதேச தேயிலை தினம் வருடாந்தம் மே மாதம் 21 இல், இலங்கை தேயிலை சபையினால் கொண்டாடப்படுகின்றது.

இதனடிப்படையில், இவ்வருடம் 2 வது சர்வதேச தேயிலை தினம், மே மாதம் 21 இல் சர்வதேச ரீதியில் "தேயிலை மற்றும் நியாயமான வர்த்தகம்" எனும் தலைப்பில் கொண்டாடப்பட்டது.


விசேடமாக தேயிலை வளரும் பகுதிகளில் பொருளாதார வளர்ச்சியைப் போற்றுதல் மற்றும் வறுமையை நீக்குதல் போன்றன இக்கருப்பொருளின் அடிப்படை நோக்கங்களாக அமையப்பெற்றதுடன், இதன் நியாயமான வர்த்தகம், வளங்களை அதிகரிப்பது மாத்திரமல்லாமல், சர்வதேச சந்தைக்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதுடன், வறுமையை ஒழிக்கவும் உதவியாக அமைகின்றது.

சர்வதேச தேயிலை தினக் கொண்டாட்டத்துக்கு இணையாக, இலங்கை தேயிலை சபையினால் சமூக மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் உள்ளடங்களாக பல்வேறு ஊக்குவித்தல் நிகழ்வுகள், சீனா, சவூதி அரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு இராட்சியம், ஈரான், ஜேர்மனி, ஜப்பான், அமெரிக்கா, ஐக்கிய இராட்சியம், அவுஸ்திரேலியா, சிலி மற்றும் இலங்கை ஆகிய 12 நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டதுடன், சிலோன் தேயிலை தொடர்பான வீடியோக்கள் மற்றும் பதிவுகளும் வெளியிடப்பட்டன.

கடந்த காலத்தில், நிலவிய கோவிட் - 19 நோய்த்தொற்றுக்கு மத்தியிலும், தேயிலைத் தொழிற்துறையில், உலகளாவிய ரீதியில் தேநீர் ஆர்வலர்களை திருப்திப்படுத்தும் வகையிலான சேவையினை வழங்கிய இலங்கை தேயிலை சகோதரர்களின் துணிச்சலைப் பாராட்டுவதுடன், மரியாதையும் செலுத்தப்படுகின்றது.



சமூக ஊடகப் பிரச்சாரத்தின் விளம்பரங்கள் மற்றும் வீடியோக்காட்சிகள் குறிப்பிடத்தக்களவு இலக்குக் குழுக்களை சென்றடைந்துள்ளதுடன், அதிகளவான பதிவுகளையும் பெற்றுள்ளன.



பொதுமக்களுடன் தொடர்புடைய பிரச்சாரங்கள்

விலைமனுக்கோரலின் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட பீனிக்ஸ் O&M தனியார் நிறுவனத்தினால் 21 நாடுகளைக் குறிக்கோளாகக்கொண்டு பொதுமக்களுடன் தொடர்புடைய பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சர்வதேச ரீதியிலான பொதுமக்களுடன் தொடர்புடைய பிரச்சாரங்கள், ரஷ்யா, ஜப்பான், சீனா, அவுஸ்திரேலியா, ஈரான், ஐக்கிய அரபு இராட்சியம், ஜேர்மனி, சிலி, அமெரிக்கா, போலந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உள்ளடங்கும் வகையில் 2023 இல் நடாத்தப்படவுள்ளது. இப்பிரச்சாரமானது டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகத்தளங்களில் ஏறக்குறைய மூன்று மாதங்கள் நடைபெறவுள்ளது. தேயிலைத் தொழிற்துறையை நீண்டுநிலைபெறச் செய்யத் தேவையான காரணிகள் மற்றும் சிலோன் தேயிலைச் சந்தைக்கெதிரான ஏனைய போட்டியாளர்களின் சந்தைப்படுத்தல் அம்சங்கள் மற்றும் அவற்றை வெற்றிகரமாக தணிப்பதற்கான விடயங்கள் குறித்து இப்பிரச்சாரத்தில் கவனம்செலுத்தப்படவுள்ளது.

சர்வதேசப் பிரச்சாரம்

ரஷ்யாவின் நிறைவேற்றல் நிலைமை

ஒப்பந்தத்திலிருந்து ரஷ்யச் சந்தை விலகியதன் காரணமாக, ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதுடன், இலங்கை சட்டமா அதிபரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இதன் பிரகாரம், இப்பிரச்சாரம் இன் முதலாவது காலாண்டில் ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், KOL செயற்படுத்தல்கள், பரிசோதனை மாதிரிப் பிரச்சாரங்கள் மற்றும் தேடல் பொறி மேம்படுத்தல் ஆகியவற்றை இப்பிரச்சாரத்தின் கீழ் ரஷ்யாவில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

ஊடகத் திட்ட அபிவிருத்திகள்

சர்வதேச பிரச்சாரத்துக்கான உசாத்துணை நிறுவனமான டென்ட்சு கிரான்ட்டினால், ரஷ்யா, உக்கிரேன், சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராட்சியம், ஜேர்மனி, துருக்கி மற்றும் சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கான ஊடகத் திட்டங்கள் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டன.

வர்த்தகக் கண்காட்சிகளில் பங்குபற்றுதல்

சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில், தெரிவு செய்யப்பட்ட சந்தைகளில் "சிலோன் தேயிலையை" தேசிய வியாபாரக்குறியாகவும், பங்குபெறும் நிறுவனங்களின் தனிப்பட்ட வியாபாரக்குறியாகவும் ஊக்குவிக்கும் வகையில், இலங்கையில் தேயிலை ஏற்றுமதிசெய்யும் நிறுவனங்களின் பங்களிப்பினை உள்வாங்குதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளும் இலங்கை தேயிலை சபையினால் வழிநடத்தப்படுகின்றன. கண்காட்சிக்கான இட வாடகை மற்றும் கண்காட்சித் தொகுதியை நிர்மாணிப்பதற்கான செலவுகளில் 50% இலங்கை தேயிலை சபையின் மானியமாக ஒதுக்கப்படுகின்றது. மிகுதியான செலவுகள் தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அறவிடப்படும். கடந்த 2022 இன் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கை தேயிலை சபையினால் ஒழுங்குசெய்யப்பட்டு, பங்களிப்புச்செலுத்தப்பட்ட வர்த்தகக்கண்காட்சிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

• ஐக்கிய அரபு இராட்சியத்தின் துபாயில் நடத்தப்பட்ட கல்வ் பூட் 2022 வர்த்தகக்கண்காட்சி

துபாயில் 2022 இல் நடாத்தப்பட்ட "கல்வ் பூட் 2022 - துபாய்" வர்த்தக்கண்காட்சியில் 11 தனியார்ப்பிரிவு தேயிலை ஏற்றுமதியாளர் நிறுவனங்களுடன் இலங்கை தேயிலை சபை பங்கேற்றது (மெரிடைம் பவர் ஹேய்லீஸ் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம், பின்லீஸ் தனியார் நிறுவனம், ஷியாம் கோமோடிடீஸ் தனியார் நிறுவனம், எக்ஸ்போ ரீ லிமிடட், ரீயன்ஷி ரீ தனியார் நிறுவனம், சீசன்ஸ் எக்ஸ்போட் தனியார் நிறுவனம், சிலோன் ரீஸ் லேண்ட் தனியார் நிறுவனம், சிலோன் ரீஸ் மார்கெட்டின்ங் தனியார் நிறுவனம், சாம்லீ ரீஸ் தனியார் நிறுவனம், ஒர்ஹா கன்சூமர் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் ரீ பெக்ஸ் தனியார் நிறுவனம்).

• பூடெக்ஸ் சவூதி 2022 வர்த்தகக்கண்காட்சி

இலங்கை தேயிலை சபை, பசிலூர் தேயிலை ஏற்றுமதி தனியார் நிறுவனத்துடன் இணைந்து, 2022 மார்ச்ச் இல் பூடெக்ஸ் சவூதி 2022 வர்த்தகக்கண்காட்சியில் பங்குபற்றியது.



• ப்ரோட் எக்ஸ்போ 2022 - மொஸ்கோ, ரஷ்யா

இலங்கை தேயிலை உணவு உற்பத்திகள், பானங்கள் மற்றும் அவற்றின் உற்பத்திகளுக்குரிய மூலப்பொருட்களுக்கான 29 வது வருடாந்த வர்த்தகக்கண்காட்சியில் சிலோன் தேயிலைக்கான ஊக்குவித்தல் நிகழ்வுகள் - ப்ரோட் எக்ஸ்போ 2022 – 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் மொஸ்கோவில் நடந்தேறியது. ரஷ்யாவின் மிகப்பிரமாண்டமான வர்த்தக்கண்காட்சியாக ப்ரோட் எக்ஸ்போ திகழ்வதுடன், தொழில்துறை ஆர்வம் மற்றும் சந்தை விஸ்தரிப்புக்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றது. பல்வேறு நாடுகளின் வெவ்வேறு வகையான நிறுவனங்களுக்கிடையிலான வலையமைப்பை ஏற்படுத்துவதற்கான மூலமாகவும் தொழிற்படுகின்றது.

சிலோன் தேயிலை அரங்குகளுக்குக் கீழான இலங்கை தேநீர் நிறுவனங்களாக, சிலோன் ப்ரஸ் ரீஸ் தனியார் நிறுவனம், ஜெபர்ஜீ பிரதர்ஸ், சிலோன் ரீ லேண்ட் தனியார் நிறுவனம், சிலோன் தெனி தேயிலை மற்றும் நேற்சர் சிலோன் ரேடின்ங் தனியார் நிறுவனம் ஆகியன விளங்குகின்றன.



• ஐஎப்ஈ லண்டன் 2022 - எக்ஸ்செல் லண்டன்

கடந்த 2022 மார்ச்சில், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஐஎப்ஈ - சர்வதேச உணவு மற்றும் பானங்களுக்கான எக்ஸ்செல் லண்டன் வர்த்தக்கண்காட்சியில் இலங்கை தேயிலை சபையின் அரங்கானது உயர் ஆணையாளர் சறோஜா சிறிசேனவினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது. இக்கண்காட்சியில் இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து, சிலோன் ரீ லேண்ட் தனியார் நிறுவனம் மற்றும் அம்பர் எஸ்டேட் தனியார் நிறுவனம் ஆகியன பங்கேற்றதுடன், அவர்களது உற்பத்திகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.



• ஹோரீகா லெபனான் 2022 - பெய்ருட், லெபனான்

கடந்த 2022 மார்ச் மாதம், லெபனான் பெய்ருட்டில், நடந்தேறிய ஹோர்சியா லெபனான் 2022 வர்த்தக்கண்காட்சியில் சிலோன் ரீ லேண்ட் தனியார் நிறுவனத்துடன், இலங்கை தேயிலை சபை பங்கேற்றது. விருந்தோம்பல், உணவு சேவைகள் மற்றும் பானங்களுக்கான தொழிற்துறைகளுக்கான வியாபார சந்திப்புத் தளமாக ஹோரீகா லெபனான் திகழ்வதுடன், 2022க்கும் அதிகமான தொழில்சார் காட்சியாளர்கள், தேநீர், கோப்பி, மென்பானங்கள், பியர் மற்றும் வைன் உற்பத்திகள் உள்ளடங்களாக பல்வேறு வகையான உணவு மற்றும் விருந்தோம்பல் உற்பத்திப்பொருட்கள் இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.



• சர்வதேச தேயிலை வர்த்தகக்கண்காட்சி 2022 - லாஸ் வேஹாஸ், அமெரிக்கா

கடந்த 2022 மார்ச் மாதம், லாஸ் வேஹாசில் நடந்தேறிய சர்வதேச தேயிலை வர்த்தகக்கண்காட்சி - 2022 இல், ரீ டோக் தனியார் நிறுவனம், கிரீன் ஹவுஸ் ரீ ஏற்றுமதிகள் தனியார் நிறுவனம், மற்றும் மாஸ்டர் ரீ மற்றும் இஸ்பைஸ் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை தேயிலை சபை பங்கேற்றது. வட அமெரிக்காவில், தேயிலைத் தொழிற்துறையுடன் தொடர்புடையதாக நடைபெறும் மிகப்பெரிய வருடாந்த அமர்வு மற்றும் வர்த்தகக்கண்காட்சியாக சர்வதேச தேயிலைக் கண்காட்சி திகழ்கின்றது.



மேலும், இலங்கை தேயிலை சபையானது கீழ்வரும் வர்த்தகக்கண்காட்சிகளிலும் பங்கேற்றது.

- எம்ஜஎப்பிஈ மலேசியா
- குர்ஸ்க் - கொறியான்ஸ்கார் பிராந்திய வர்த்தகக்கண்காட்சி - ரஷ்யா 2022
- வேர்ல்ட் பூட் - அசர்பைஜான் 2022
- கோப்பி, தேயிலை, கொக்கோ ரஷ்யன் வர்த்தகக்கண்காட்சி 2022
- மொண்ட்ரியலிலான எஸ்ஐஏஎல் - கனடா 2022
- அணுபூட் பிரேஸில் 2022 - ஷோ பவுலோ, பிரேஸில்
- வேர்ல்ட் பூட் வார்ஷோ - போலந்து
- யூஸ்போ 2022 - உஸ்பெகிஸ்தான்


• வேர்ல்ட் பூட் - மொஸ்கோ 2022
• "சவூதி ஹோரீகா" ஜித்தா, சவூதி அரேபியா
• கபே ஷோ சியோல் கொரியா வர்த்தகக்கண்காட்சி - தென்கொரியா
• பூட் எக்ஸ்போ - கசகிஸ்தான் சர்வதேச வர்த்தக்கண்காட்சி - அல்மா தி, கசகிஸ்தான்
• எஸ்ஐஏஎல் பரிஸ் 2022 - பிரான்ஸ்
• பைன் பூட் - அவுஸ்திரேலியா 2022

ஜெர்மனியிலிருந்து பத்திரகையாளர் திரு. ஓலாப்f தார்மஸ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமை

திரு. ஓலாப்f தார்மஸ், ஜெர்மனியின் ஹம்பேர்க்கில் வசிக்கும் பயண மற்றும் தேயிலை எழுத்தளாளர். ஜிஈஓ, லவ்தான்ஹா நாளிதழ் மற்றும் பிரான்ங்பேர்தர் அல்ஜிமீன் போன்ற ஜெர்மனிய மொழியிலான பதிப்பக பயண ஊடகங்களுக்கான எழுத்தாளராகவும், தேயிலைக் கலாச்சாரத்தினைப் பிரதிபலிக்கும் தனது சொந்தப் பதிப்பாக நாளிதழான "t- Das Magazin für Teekultur" (www.t-magazine.net) லும் பணிபுரிகின்றார். திரு. ஓலாப்f தார்மஸ் அவர்கள், இலங்கையில் சில பயணத் தொழிற்பாட்டாளர்கள் மற்றும் கவர்ச்சியான தேயிலை வர்த்தகர்களுடன் ஒன்றிணைந்து பயணம் மற்றும் தேயிலை தொடர்பான மிகவும் ஆழமான ஆய்வுக்கற்கையை மேற்கொண்டார்.

இவருக்கான மேல்நாட்டு இரண்டு நாள் தேயிலைச் சுற்றுப்பயணம், கடந்த 2022, மே மாதம் இலங்கை தேயிலை சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதற்கான அனுசரனைகளை தேயிலைத்தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகள் வழங்கியிருந்தன.

திரு. ஓலாப்f அவர்கள், இலங்கையில் தேயிலைப் பிராந்தியங்களினூடான பயணம், இலங்கையில் நீண்டுநிலைபெறக்கூடிய உயர்தரத் தேயிலைப் பயிர்ச்செய்கையை முன்னெடுத்தல் மற்றும் தொழிற்படுத்தலுக்கான புதிய வழிமுறைகள் மற்றும் சிலோன் கைவினைத் தேநீர் தொடர்பான கட்டுரையொன்றை தனது "ரீ மெஹசின்" பதிப்பில் பதிவிட்டிருந்தார்.



இலங்கை தேயிலை சபையின், ஊக்குவித்தல் பிரிவின் பணிப்பாளர், பவித்திரி பீரீஸ் உடனான சிலோன் தேநீர் நொடிகள்

மத்திய கிழக்கு நாடுகளின்- விருந்தோம்பல் செய்தியில், சிலோன் தேநீர் நொடிகள் எனும் நிகழ்ச்சியில், இலங்கை தேயிலை சபையின், ஊக்குவித்தல் பிரிவின் பணிப்பாளர், பவித்திரி பீரீஸ் அவர்களின் நேர்காணல் நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், அதில் அவர் "ஏன சர்வதேச ரீதியில் சிலோன் தேயிலை மிகவும் பிரபல்யமானது" என்பது குறித்த விளக்கத்தினை அளித்திருந்தார்.
https://www.hospitalitynewsmag.com/ceylon-tea/?fbclid=IwAR3G0w9J1ZN3wu-_JTVOC02Ea0SMoFhbv7FP-2dGtmD3gUIbxG0Bz3-bUyHI



கொழும்பு துறைமுக பயணிகள் கப்பலில் சிலோன் தேயிலைப் பிரச்சார நிகழ்வுகள்

கொழுப்புத் துறைமுகத்தை வந்தடைந்த 700 பயணிகள் மற்றும் 300 ஊழியர்களை ஏற்றிய "சில்வர் ஸ்பிரித்" பயணிகள் கப்பல் சிலோன் தேயிலையினால் வரவேற்கப்பட்டது.



வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டம்

இத்திட்டமானது சிங்க இலட்சனையைக் கொண்ட சிலோன் தேயிலை ஏற்றுமதியாளர்களை ஊக்குவிப்பதற்கான நிதியுதவிகளை வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்துக்குத் தேவையான நிதிகள் இலங்கை தேயிலை சபையினால் நிறுவப்பட்ட ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நிதியிலிருந்து வழங்கப்பட்டன. இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் அக்டோபர் 2022 இல் கிடைக்கப்பெற்றதுடன், கொடுப்பனவுகள் அல்லது மீளக்கொடுப்பனவுகள், குறித்த பரிமாற்றம் நடைபெற்ற நாளில் நிலவிய அமெரிக்க டொலருக்கு இணையான பெறுமதியை அடிப்படையாகக்கொண்டு இலங்கை ரூபாய்களில் மேற்கொள்ளப்பட்டன.

இதற்காக 45 நாடுகளில், 22 நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டில் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டதுடன், இதற்கான இலக்குகள் ஏற்றுமதி அளவுகளின் அடிப்படையில் நிலைநிறுத்தப்பட்டன. ரஷ்யா மற்றும் உக்கிரேன் ஆகிய நாடுகளுக்குரிய திட்டங்களுக்கான விண்ணப்பத்தாரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் அல்லது பின்னூட்டல் கருத்துக்கள், தற்போதைய சிக்கலான நிலைமைகள் காரணமாக திருப்பியனுப்பப்பட்டதுடன், அவர்களது எழுத்து மூலமான முன்மொழிவுகளை தீர்மானங்களை முன்னெடுப்பதற்காக,

நேரடியாக இலங்கை தேயிலை சபையின் மதிப்பீட்டுக் குழுவுக்கு அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இம் முன்மொழிவுகளை ஆராய்ந்த சபை, ரஷ்ய வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டங்களை எதிர்வரும் மார்ச் 31, 2023 வரையான, மூன்று மாத காலத்துக்கு நீடிப்பது எனும் தீர்மானம் எட்டப்பட்டது. மேலும், உக்கிரேன் சந்தையிலும் வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தும் தீர்மானத்துக்கும் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டது.

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைகளுக்கான 5% மேலதிகக் கொடுப்பனவுத் திட்டம்

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் முகமாக, இலங்கை தேயிலை சபையினால் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைகளுக்கான 5% மேலதிகக் கொடுப்பனவுத் திட்டம் நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டு அறிமுகம்செய்யப்பட்டது. இத்திட்டத்துக்காக, பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையை ஏற்றுமதிசெய்யும் தேயிலை ஏற்றுமதியாளர்கள் விண்ணப்பிக்க முடியும். அவர்கள் கீழ்வரும் அம்சங்களை பூரணப்படுத்தல் அவசியமாகும்.

- முழு வருடத்துக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகைகளின் மொத்த வருமானமானது அடிப்படை வருடத்தை (இலங்கை மத்திய வங்கியின் பணப்பரிமாற்ற வீதத்துக்கு அமைவான தேறிய வருமானம்) விட அதிகமாகக் காணப்படுதல் அவசியமாகும்
- பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகையினால் (தேயிலைப் பைகள், 3kg க்குக் குறைவான தேயிலைப் பொதிகள், உடனடித் தேயிலை மற்றும் RTD, சிரியாவுக்கு மாத்திரம் 3kg க்குக் குறைவான தேயிலைப் பொதிகள்) உருவாகும் வருமான அதிகரிப்புப் பெறுமதியில் 05% மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்படும்
- பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையினாலான ஏற்றுமதி வருமானம் மாத்திரம் மேலதிகக் கொடுப்பனவுத்திட்டத்துக்குத் செயற்படுத்தப்படும்.

இம்மதிப்பீடானது 290 பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களிடையே, 2021 மற்றும் 2019 வருடங்களை கவனத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களை அடிப்படையாகக்கொண்டு, இத்திட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த 92 பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்கள் நன்மையடைகின்றனர். இத்தகுதிவாய்ந்த 92 பெறுமதிசேர் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கும் 05% மேலதிகக் கொடுப்பனவுகளுடன் 571.71 மில்லியன் ரூபாய்கள் தேவைப்படுகின்றது. அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றதும் மேலதிகக்கொடுப்பனவுகள் பகிர்ந்தளிக்கப்படும்.

தூதரகங்களுடனான திட்டங்கள்

BTL ஊக்குவித்தல் நிகழ்வுகள் - துருக்கி

துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை தேயிலை சபையுடன் இணைந்து, இலங்கையின் வது சுதந்திரதினத்தை கொண்டாடும் வகையில், சிலோன் தேயிலை மற்றும் இயற்கை அழகினை காட்சிப்படுத்தும் வகையிலான பதாகைகள் பெப்ரவரி 04, 2022 இல் காட்சிப்படுத்தப்பட்டன.



சிலோன் தேயிலை ஊக்குவித்தல் - பிரேசில்

- **பிரேசிலியாவில் வர்த்தக மற்றும் உல்லாசப்பயணத்துறை ஊக்குவித்தல் திட்டம்**

பிரேசிலிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால், வர்த்தக மற்றும் உல்லாசப்பயணத்துறை ஊக்குவித்தல் திட்டமானது, பிரேசிலியாவில் அமையப்பெற்றுள்ள பத்தியோ பிரேசில் விற்பனைக் கூடத்தில் பெப்ரவரி 2022 இல் நடைபெற்றது.

இலங்கை விற்பனை அரங்கத்தில் பல்வேறுதரப்பட்ட சுவைகளைக் கொண்ட சிலோன் தேயிலைகள், கறுவா மற்றும் மூலிகைத்திரவியங்கள், தெங்கு உற்பத்திகள், கைவினைப்பொருட்கள், மேசை விரிப்புக்கள் மற்றும் முக்கியமான எண்ணைவகைகள் ஆகியன காட்சிப்படுத்தப்பட்டன.

மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த இலங்கை விற்பனை அரங்கத்துக்கு 800 க்கும் மேற்பட்ட பிரேசிலியர்கள் வருகைதந்ததுடன், பல்வேறுதரப்பட்ட சுவைகளைக் கொண்ட சிலோன் தேநீரை அருந்தியும், இலங்கை உணவுகளை உண்டும் மகிழ்ந்தனர். அதே தருணத்தில், இலங்கை உல்லாசப்பயணத்துறையின் பன்முகத்தன்மை தொடர்பிலும் கருத்துக்களை வெளியிட்டனர்.



- **பிரேசிலின் கொய்யாஸில் ஊக்குவித்தல் நிகழ்வுகள்**

பிரேசிலிலுள்ள இலங்கைத் தூதரகமானது, பிரேசிலின் கொய்யாஸ் மாநிலத்துடன் வர்த்தகத்தொடர்புகளை 2022, செப்டம்பரில் ஏற்படுத்தியது.

பிரேசிலின் கொய்யாஸ் மாநிலமானது 42 பில்லியன் அமெரிக்க டொலர் GDP உடன் மிகவும் வேகமாக வளர்ச்சியடையும் மாநிலங்களில் ஒன்றாக விளங்குவதுடன், வர்த்தகம், விவசாயம், கால்நடை, கனியவளம், உணவு மற்றும் மருந்துவகை உற்பத்திகள் ஆகியவற்றில் முன்னிலை வகிக்கும் மாநிலமாகவும் திகழ்கின்றது.



• **இன்னோவா (INNOVA) சம்மேளனம் - பிரேசிலியா**

பிரேசிலியாவில் அமையப்பெற்றுள்ள இலங்கைத் தூதரகம், 2022 இல் நடந்தேறிய சம்மேளனத்தில் பங்கேற்றது. லத்தின் அமெரிக்க நாடுகளிடையே நடைபெறுகின்ற மிகப்பெரிய வர்த்தக மற்றும் தொழிற்துறை ஊக்குவித்தல் நிகழ்வாக INNOVA சம்மேளனம் விளங்குவதுடன், இதில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் அக்கறையுள்ள குழுக்கள் பங்கேற்று, இதனை தங்களது புதிய கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகிறனர்.



• **சிலோன் தேயிலை, சுற்றுலாத்துறை மற்றும் இலங்கை உணவு வகைகள் பிரேசிலியன் ஊடங்களில் விளம்பரப்படுத்தப்படுதல்.**



கடந்த 2022 திசம்பர் 31 இல் பிரேசிலிலுள்ள இலங்கை தூதரக வளாகத்தினுள் தூதரகத்தின் வர்த்தக மற்றும் சுற்றுலாத்துறை முயற்சிக்கான நிகழ்வுகளின் ஒரு அங்கமாக, இலங்கையின் சுற்றுலாத்துறை, உணவு வகைகள் மற்றும் சிலோன் தேயிலை போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில், பிரேசிலியாவிலுள்ள பதிப்பக மற்றும் இலத்திரனியல் ஊடக ஊடகவியளாளர்களுடன் இணைந்து வலையிணைப்பு நிகழ்வொன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில், சிலோன் தேயிலையின் வரலாற்றியல் சிறப்பம்சங்கள், தேயிலை இலையிலிருந்து பருகும் தேநீரை தயாரிப்பதற்கான படிமுறைகள் மற்றும் சிலோன் தேயிலையின் விசேட பண்புகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிலோன் தேயிலை தொடர்பான செயலமர்வொன்று தூதரகத்தின் அமைச்சரின் ஆலோசகரினால் (வர்த்தகம்) நடாத்தப்பட்டது. இதன் இறுதியில், இராப்போசன நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்துடன், சிலோன் தேயிலையின் வெவ்வேறு சுவையுடைய தேயிலை வகைளை சுவைப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

சிங்கப்பூரில் நடைபெற்ற சுகாதாரம் மற்றும் கல்விசார் வர்த்தகக்கண்காட்சி - 2022

கடந்த 2022, ஜூலை 24 இல் சிங்கப்பூரில் பாஸ்ட் ஹப் இல் இடம்பெற்ற 2022 ஆம் வருடத்துக்கான 7 வது சுகாதாரம் மற்றும் கல்விசாய் வர்த்தக்கண்காட்சியில், இலங்கையின் சுற்றுலாத்துறை, உணவு வகைகள் மற்றும் சிலோன் தேயிலை போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்குடன், சிங்கப்பூரிலுள்ள உயர் ஆணையர் புணியகம் பங்கேற்றது. இந்நிகழ்வானது சமூக ஆதரவு மற்றும் பயிற்சிகளுக்கான வெளிநாட்டு பணியக ஊழியர் சங்கத்தினால், பத்து வருடகால வரலாற்றினை நினைவுகூரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் சிங்கப்பூர் பாராளுமன்றத்தின் சபாநாயகர் திரு. டான் சவுன்-ஜின் அவர்கள் பங்கேற்றதுடன், 700 க்கும் மேற்பட்ட பார்வையாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

சிங்கப்பூர் மக்கள் மற்றும் சிங்கப்பூரில் செறிந்து வாழும் வெளிநாட்டவர்களிடையே இலங்கைத் தேயிலையை பிரபல்யமடையச்செய்யும் நோக்கில், இலங்கைக்குரிய அரங்கத்துக்கு அதிகளவான பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் சிலோன் தேயிலையின் திரவத் தேநீர் வழங்கப்பட்டது. அத்துடன், இலங்கையின் சுற்றுலாத்துறையை மேலும் ஊக்குவிக்கும் வகையில் சிங்கப்பூரிலுள்ள ஸ்ரீலங்கன் விமான சேவைகளும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.



ஐக்கிய இராட்சியத்தில் சிலோன் தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வுகள்

• **ஐக்கிய இராட்சியத்தில் பெட்போர்ட் ஆற்றுக் களியாட்ட நிகழ்வு** - 2022

பார்வையாளர்கள் இலங்கைக்கான அரங்கத்தில் சிலோன் தேநீரை பருகியும், வினாவிடைப்போட்டிகளில் பங்குபற்றியும் மகிழ்ந்தனர்.



• ஐக்கிய இராட்சியத்தின், நோட்டிங்ஹாமில் நடைபெற்ற ஹொக்கி போட்டிகளின்போது முன்னெடுக்கப்பட்ட இலங்கை தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வு - 2022



காத்மாண்டு நகரில் நடைபெற்ற உணவு மற்றும் பானங்களுக்கான விருந்தோம்பல் கண்காட்சி



நிறைவுற்ற 2022 இல், நேபாளத்தின், காத்மாண்டு நகரில் நடந்தேறிய 8வது உணவு மற்றும் பானங்கள் மற்றும் விருந்தோம்பலுக்கான கண்காட்சியில் (FBH2022) இலங்கையின் ஏனைய உணவு வகைகள் மற்றும் பானங்களுடன், சிலோன் தேயிலை மற்றும் கறுவாவினை ஊக்குவிக்கும் வகையில், காத்மாண்டு நகரில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (EDB) மற்றும் இலங்கை தேயிலை சபை (SLTB) ஆகியன ஒன்றிணைந்து ஊக்குவித்தல் நிகழ்வுகளை மேற்கொண்டன.

சர்வதேச தேயிலை தினக் கொண்டாட்டம் - 2022 மற்றும் தென் ஆபிரிக்காவில் சிலோன் தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வுகள்

கடந்த 2019 இல் ஐக்கிய நாடுகள் பொதுப்பேரவையினால், உலகின் அனைத்துப் பாகங்களிளுமுள்ள தேயிலை வகைகளின் நீண்டகால வரலாறு, ஆழமான கலாச்சார மற்றும் பொருளாதார முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மே 21இல் வடிவமைக்கப்பட்ட உலக உணவுக் களியாட்டமானது, 2022 இல் தென் ஆபிரிக்காவின் ப்ரிட்டோரியாவில் அமைந்துள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் ஆணையத்தில் நடாத்தப்பட்ட தருணத்தில் சர்வதேச தேயிலை தினம் கொண்டாடப்பட்டது.



யுனெஸ்கோவின் சர்வதேச தேயிலை தினக் கொண்டாட்டங்கள் - பிரான்ஸ்

பாரிஸ் நகரத்தில் ஐக்கிய நாடுகள் மற்றும் யுனெஸ்கோவினால் சர்வதேச தேயிலை தினம் பிரகடனப்படுத்தப்பட்ட நாளில், சர்வதேச தேயிலை தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வானது பிரான்கோ- சீன கலாச்சார மற்றும் கலை பரிமாற்று நிலையத்துடன் இணைந்து பரிஸிலுள்ள யுனெஸ்கோ சமூக அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததுடன், இதில் வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் அனைய விசேடமாக அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளடங்களாகஏறக்குறைய 200 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். இந்நிகழ்வின் மாலைநேர களியாட்டத்தில் சிலோன் தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வுகள் பாரிஸிலுள்ள இலங்கை தூதரகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.



ஜப்பானில் சிலோன் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வுகள்

இலங்கைத் தேயிலைக்கான மாநாடொன்று இலங்கை தூதரகத்துடன் இணைந்து ஜப்பானிலுள்ள தேயிலை சங்கத்தினால் 2022 ஜூனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து. ஜப்பானிய நுகர்வோரிடையே இலங்கைத்தேயிலையை பிரபல்யமடையச்செய்யும் நோக்கில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், 35 க்கும் மேற்பட்ட ஜப்பானியர்கள் பங்கேற்றிருந்தனர்.

ஊக்குவித்தல் நிகழ்வுகள் பாரிஸிலுள்ள இலங்கை தூதரகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன.




வெளிநாட்டு ஊடகங்களுக்கான சிலோன் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வு - ஜப்பான்



ஜப்பானில் வெளிநாட்டு செய்தியாளர் குழுக்களுக்கிடையே "சிலோன் தேயிலை தொடர்பான கற்றல்" எனும் செயலமர்வு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 70 க்கும் அதிகமான பத்திரிகையாளர்கள் கலந்துகொண்டதுடன், உயர்தர சிலோன் தேயிலை மற்றும் அவற்றின் சுவை மற்றும் வளரும் இடங்கள் தொடர்பான விழிப்புணர்வுகளும் வழங்கப்பட்டது.

பிலிப்பைன்ஸ் மணிலா நகரத்தில் இடம்பெற்ற உலக உணவுக்கண்காட்சியில் சிலோன் தேயிலையின் காட்சியகம்- 2022

















பிலிப்பைன்ஸ் நாட்டில் உணவு மற்றும் பானங்களின் தொழிற்துறையில் மிக அதிகளவில் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வர்த்தக நிகழ்வாக WOFEX திகழ்கின்றது. சர்வதேச ரீதியில் சிலோன் தேயிலைக்கான உலகப்புகழ்பெற்ற வர்த்தக நாமத்துடன், தற்போதுள்ள சவால்களை வெற்றிகொள்ளும் வகையில் தொடர்ச்சியான வழங்கல் மற்றும் அதன் ஏற்றுமதிகளை வலுப்படுத்த செயலூக்கமான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது அரசு மற்றும் தொழிற்துறையின் ஏனைய பங்குதாரர்களின் பாரிய பொறுப்பாகும்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் சர்வதேச சந்தையில் சிலோன் தேயிலை

கடந்த 2022 நொவம்பரில் பிலிப்பைன்ஸ் நாட்டின் பாசே நகரத்தில் அமைந்துள்ள உலக வர்த்தக நிலையத்தில், நடைபெற்ற சர்வதேச சந்தையில், மணிலாவிலுள்ள இலங்கையின் தூதரகம் பங்கேற்றது. சிலோன் தேயிலையின் உலகப்புகழ்பெற்ற வகைகளான டில்மா, பசிலூர் மற்றும் ஜோர்ஜ் ஸ்டுவர்ட்ஸ் போன்வற்றின் உள்ளூர் விநியோகிஸ்தர்களுடன், நாட்டின் சிறந்த உற்பத்திகளான சிலோன் தேயிலை, மசாலா, கோப்பி மற்றும் சுற்றுலாத்துறையை பிரதிபலிக்கும் விடயங்களை உள்ளடக்கும் காட்சியகம் நிறுவப்பட்டிருந்தது.





இலங்கை தினம் - லெபனான் மற்றும் சிரியா





கடந்த 2022 செப்டம்பர் 17 இல், அஹ்ராபியாவில் அமைந்துள்ள புனித ஜோன் கிரிசோஸ்ரோம் பேராலயத்தில், இலங்கை தினக் கண்காட்சி, வீதி உணவுக் களியாட்டம் மற்றும் புகைப்படக் கண்காட்சி ஆகியன நடைபெற்றதுடன், இந்நிகழ்வில் அதிகளவான லெபனானியர்கள் மற்றும் அமைச்சர்கள், நீதித்துறை, இராஜதந்திர சமூகம், லெபனானின் உயர் அதிகாரிகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் பங்கேற்றனர். இக்கண்காட்சிக்கான சிலோன் தேயிலை மாதிரிகள் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்பட்டன.

பொதுவான தேயிலை ஊக்குவிப்புக்கள்

பொதுவான தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகளில் ஏனைய பானங்களுடன் ஒப்பிடுகையில் சுவையினை ஈர்க்கும் பானங்களில் தேநீர் சிறப்பான பங்கினை வகிக்கின்றது. இலங்கை தேயிலை சபையானது, உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), அமெரிக்க தேயிலை சங்கம், ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச தேயிலைக் குழு, கனேடிய தேயிலை மற்றும் மூலிகைகள் சங்கம் (THAC) மற்றும் ஜப்பான் தேயிலை சங்கம் ஆகிய தேயிலைக்கான சர்வதேச குழுக்களின் உறுப்பினராகத் திகழ்கின்றது.

பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள், இவ் அமைப்புக்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள், பிரதானமாக தேயிலை மற்றும் சுகாதாரக் கொள்கைகளில் கவனம் செலுத்துவதுடன், இவை நுகர்வோர் கல்வி மற்றும் பொதுமக்களுடனான உறவுடன் தொடர்புடைய நடவடிக்கைகளினூடாக ஊக்குவிக்கப்பட்டன.

இலங்கை தேயிலை சபையானது, கனேடிய தேயிலை மற்றும் மூலிகைகள் சங்கம் (THAC), ஜப்பான் தேயிலை சங்கம் மற்றும் அமெரிக்க தேயிலை சங்கம் போன்றவற்றில் பல்வேறு வருடங்களாக தனது அங்கத்துவத்தினைப் பேணுகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2022 ஆம் ஆண்டில் பொதுவான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில், தேயிலை சங்கங்கள் மற்றும் சபைகளின் வரவுசெலவுத்திட்டங்களை விளம்பரப்படுத்துவதில், இலங்கை தேயிலை சபை தனது பங்களிப்பை செலுத்தியது.

FAO/IGC இன் 24 வது அமர்வுகளில் இலங்கையின் பங்களிப்பு

கடந்த 2022 பெப்ரவரி 23 இல், இணையவழி மூலமாக நடந்தேறிய, FAO/IGC இன் 24வது அமர்வில் இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் தேயிலைத் தொழிற்துறையின் ஏனைய பங்குதாரர்கள் பங்குபற்றினர்.

இவ் அமர்வில் கீழ்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

1. தற்போதைய சர்வதேச சந்தை நிலைமைகள் மற்றும் அதனுடனான பிரச்சனைகள்
2. தெரிவுசெய்யப்பட்ட தேயிலை உற்பத்திசெய்யும் நாடுகள் மற்றும் தேயிலை நுகரும் நாடுகளில் சந்தை அபிவிருத்தி
3. தேயிலைச்சந்தையில் கோவிட் - 19 னாலான தாக்கங்களுக்கான வட்ட மேசை
4. பின்வரும் சேவைக்குழுக்களுக்கான தலைமைகளின் அறிக்கைகள்

a. அதியுயர் எச்ச மட்டத்தில் பணிபுரியும் குழுக்கள்
b. தேயிலை வர்த்தகம் மற்றும் தரத்தில் பணிபுரியும் குழுக்கள்
c. சேதனத் தேயிலையில் பணிபுரியும் குழுக்கள்
d. காலநிலை மாற்றங்களில் பணிபுரியும் குழுக்கள்
e. சர்வதேச தேயிலைச் சந்தை பகுப்பாய்வு மற்றும் ஊக்குவித்தலில் பணிபுரியும் குழுக்கள்
f. சிறு உரிமையாளர்கள் தொடர்பில் பணிபுரியும் குழுக்கள்

திளை வர்த்தகம் மற்றும் தரத்துக்காக பணிபுரியும் குழுக்களின் தலைமைத்தவம் இலங்கைக்கே உரித்துடையாதாக அமைவதுடன், அமைப்பின் இணைத் தலைமைகள் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் ஆலோசனையுடன், தேயிலைக்கான FAO/IGG பிரதான அமர்வில் இலங்கையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், சந்தை அபிவிருத்தி மற்றும் கோவிட் காலத்தில் தேயிலைத் தொழிற்துறை சந்தித்த சவால்கள் மற்றும் வெற்றிகள் தொடர்பான விளக்கக்காட்சியொன்று இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டது.

ஜப்பான் தேயிலை சங்கத்தினால் சிலோன் தேயிலை ஊக்குவிப்பு

திகதி	கருத்தரங்கின் கருப்பொருள்
ஏப்பிரல் 9,13	தேயிலை பயிற்றுவிப்பாளர் வகுப்பு: திம்புலா
ஏப்பிரல் 20,23	தேயிலை பயிற்றுவிப்பாளர் வகுப்பு: நுவெரெலியா
ஏப்பிரல் 23, 27	தேயிலை பயிற்றுவிப்பாளர் வகுப்பு: ஊவா மற்றும் ஏனைய உற்பத்திப்பகுதிகள்
ஏப்பிரல் 23	இலங்கை தூதரகத்தில் கருத்தரங்கு: தேயிலைக் கருத்தரங்கு, நுவெரெலியா
மே 13	தேயிலை பயிற்றுவிப்பாளர் வகுப்பு: சிலோன் தேயிலை உற்பத்திப்பகுதி: திம்புலா, நுவெரெலியா, ஊவா தேயிலை
மே 14, 25	தேயிலை பயிற்றுவிப்பாளர் வகுப்பு: திம்புலா, நுவெரெலியா, ஊவா தேயிலையை சுவைத்தல்
மே 24	விசேட தேயிலை பாடம்: உலக தேயிலை உற்பத்தி, இலங்கை, திம்புலா
ஜூன் 5	தேயிலை பயிற்றுவிப்பாளர் வகுப்பு: சிலோன் தேயிலை உற்பத்திப்பகுதி: திம்புலா, நுவெரெலியா, ஊவா தேயிலை
ஜூன் 21	விசேட தேயிலை பாடம்: உலக தேயிலை உற்பத்திப்பகுதி, இலங்கை மற்றும் ஊவா தேயிலையை சுவைத்தல்
ஜூன் 25	இலங்கைத் தூதரகத்தில் கருத்தரங்கு: தேயிலைக் கருத்தரங்கு திம்புலா
ஜூலை 19	விசேட தேயிலை பாடம்: கறுப்புத் தேயிலை, சிலோன் தேயிலை மற்றும் மாலைநேர தேயிலைகளின் வரலாறு
ஜூலை 27 - 29	ஜப்பானின், டோக்கியோவில் நடைபெற்ற கபே உணவக கண்காட்சியில், மிகப்பிரல்பல்யமான சிலோன் தேயிலை வகைகளான டில்மா, மாப்ரோக் மற்றும் ஏனைய தேயிலைத் தோட்ட தேயிலைகள் JTA இன் உறுப்பினர்கள் காட்சிப்படுத்தினர். இக்கண்காட்சியில் இலங்கைத் தூதரகம் பங்கேற்றது.
செப்டெம்பர் 5	தேயிலை ஆலோசகர் வகுப்பு: இலங்கையின் தேயிலை உற்பத்திப்பகுதிகள், நுவெரெலியா, ஊவா தேயிலையை சுவைத்தல்
அக்டோபர் 13	தேயிலைப் பாடம்: இலங்கையிலுள்ள உலக தேயிலை உற்பத்திப்பகுதி, திம்புலா, நுவெரெலியா மற்றும் ஊவா தேயிலையை சுவைத்தல்
நொவம்பர் 13	ஒவாரியாசாஹி நகரத்தில் இன் இணை அனுசரணையுடனும், இலங்கைத் தூதரகத்தின் உதவியுடனும் முன்னெடுக்கப்பட்ட தேயிலைக் களியாட்டம்
நொவம்பர் 28	இலங்கைத் தூதரகத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கு: ஊவா
பெப்ரவரி 26	இலங்கைத் தூதரகத்தில் நடாத்தப்பட்ட கருத்தரங்கு: நடுத்தர வளர்ப்புப் பகுதி

தேயிலை மற்றும் மூலிகை ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட சிலோன் தேயிலைக்கான ஊக்குவித்தல் நிகழ்வுகள்

செப்டெம்பரில் நடந்தேறிய தென் அமெரிக்க தேயிலை மாநாடு (NATC)

அனைவருக்குமான துண்டுப்பிரசுரங்கள் மற்றும் தேயிலை மாதிரிகள் இலங்கை தேயிலை சபையினால் வழங்கிவைக்கப்பட்டன. இவையனைத்தும், மாநாட்டில் கலந்துகொண்ட அனைவருக்கும் கிடைக்கும் வகையில், முன்பதிவுகளை மேற்கொள்ளும் வரவேற்புப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை உள்ளிட்ட தேயிலை உற்பத்திசெய்யும் நாடுகளின் பங்களிப்புக்களுக்கு இதுவோர் சிறந்த தருணமாக அமைந்திருந்தது. இது தவிர, தங்கப்பதக்கத்துக்கான தேயிலைப் போட்டிக்காக 48 சிலோன் தேயிலை மாதிரிகள் (11 வெவ்வேறு நிறுவனங்களிடமிருந்து) சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தேயிலைத் தோற்றங்களின் அடிப்படையில் சிறந்த தேநீர் கோப்பைக்கான விருது வழங்கப்பட்டதுடன், இலங்கையில் வெற்றியாளர்களாக;

- முதலாம் இடம்: RTS ஹோல்டிங்ஸ் - அவிசாவளை தேயிலைத் தொழிற்சாலை - சித்தாக்க, சப்ரகமுவ, ஒர்தோடொக்ஸ் கறுப்பு FBOP
- இரண்டாம் இடம்: பிரவுன்ஸ் பிலாண்டேசன்ஸ் உயர் காடுகள், மத்துரட்ட (ஊவா மேல்), ஒர்தோடொக்ஸ் கறுப்பு, மவுண்டன் விஸ்பர்

NATC நிலைத்தன்மை விருதுகள்:

நிலைத்தன்மை விருதுகளுக்கு, இலங்கை நிறுவனங்கள் முன் மற்றும் மத்திய வரிசைகளில் திகழ்கின்றன. மாநாடுகளில் அனைத்துத் திட்டங்களுக்குமான விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

- வெற்றியாளர் - கலே நேற்சுரல் பார்ம்ஸ் தனியார் நிறுவனம். (இயற்கை, விவசாயம், சமூகங்கள், நுகர்வோர்மற்றும் பொருளாதாரத்துடன் இணைந்த வியாபார மாதிரியை நிறுவுதல்)
- இரண்டாம் நிலை - ஹொரண பிலாண்டேசன்ஸ் தனியார் நிறுவனம் (HPL - கூரையிலான சூரியக்கல PV தொகுதித்திட்டம்)

- இணையத்தொடர் - கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம் "சிலோன் தேயிலை வரைபடம் 2030"
- ZIP நாளிதழ்: இது காலாண்டுக்கு ஒருமுறை THAC யினால் வெளியிடப்படும் டிஜிட்டல் வெளியீடாகும், இறுதி வெளியீட்டில் இலங்கையின் தேயிலை தொடர்பான முழுமையான விபரம் உள்ளடக்கப்பட்டிருந்தது



• சமூக ஊடகங்கள்:

இலங்கை தேயிலை தொடர்பான பதிவுகள் மாதாந்த சந்தைப்படுத்தல் நாட்காட்டி பதிவுகளாக புகப்புத்தகம்/ இண்டகிராம்/ டுவிட்டர் மற்றும் ரீ.சிஏ போன்ற சமூக ஊடகங்களில் பதிவிடப்பட்டன. மேலும், இலங்கை தேயிலை சபையின் மூன்று ஊக்குவித்தல் வீடியோக்கள் THAC இல் பகிரப்பட்டன.



• எதிர்கால விருந்தோம்பல் பணியாளர்களுக்குக் கற்பித்தல்

ஜோர்ஜ் பிரவுன் கல்லூரியில் (கனடாவின் முதலிடத்தில் விளங்கும் சமையல் நிறுவனம்) நடந்தேறிய விருந்தோம்பல் நிகழ்வின் வருடாந்த சிறப்புப் பேச்சாளரை THAC கொண்டுள்ளது. இவ் விரிவுரைகள், தேயிலைகள் மற்றும் வேறுபட்ட உணவு சேவைகளைக்கொண்ட சுற்றாடலில் தேநீரை எவ்வாறு தயாரிப்பது தொடர்பில் எதிர்கால விருந்தோம்பல் பணியாளர்களைக் கற்பிக்கும் வகையில் அமையப்பெற்றன.

அமெரிக்காவின் தேயிலை சபையினால் முன்னெடுக்கப்பட்ட சிலோன் தேயிலைக்கான ஊக்குவித்தல் நடவடிக்கைகள்

தேயிலை மற்றும் மனித சுகாதாரம் தொடர்பான ஆறாவது சர்வதேச விஞ்ஞான மாநாடு

அமெரிக்க உணவுக்கட்டுப்பாட்டு வழிகாட்டல் குழுவுடன் இணைந்து, சிறப்பான சுகவாழ்வுக்கான சிறந்த பானமாக உண்மையான தேநீரை (கறுப்பு, பச்சை, வெள்ளை ஓலோன்க், செறிந்த நிறம்) நிலைநிறுத்தலுக்கான புதிய ஆய்வுக்கற்கைகள் மற்றும் பல்வேறு சுகாதாரத்துடன் தொடர்புடைய நன்மைகளை ஊடகங்களினூடாக வெளிப்படுத்துவதே இப்பிரச்சாரத்தின் நோக்கங்களாக விளங்கின.

இதன் விளைவாக, ஆய்வாளர்கள், பல்கலைக்கழகத்துடன் தொடர்புடையவர்கள், கொள்கைகளை உருவாக்குவோர், பதிவுசெய்யப்பட்ட உணவியல் நிபுணர்களை உள்ளடக்கிய 600 நேரடியான பங்கேற்பாளர்களுடன் 1,260 பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஊடகங்களில் உணவியல் கட்டுப்பாட்டு வழிகாட்டல்களில் தேநீரின் பங்கு தொடர்பான தூண்டுதல் உரையாடல்களுக்கு 414 ஊடக இடங்கள் கிடைக்கப்பெற்றதுடன், 5.2 பில்லியன் பதிவுகளும் பதிவாகியதுடன், எதிர்கால செய்திகளுக்கும் பாதைகளை உருவாக்கின. மேலும், மாநாடுகளின் வெற்றியைத் தொடர்ந்து, தேநீர் தொடர்பிலான நம்பகத்தன்மை தொடர்ச்சியாக கட்டியெழுப்பப்பட்டது.



தேசிய சூடான தேநீர் தினம் மற்றும் தேசிய சூடான தேயிலை மாதம் - 2022

12.2 MM சமூக ஊடக பதிவுகள் உருவாக்கப்பட்டன (கடந்த 2021 இல், 7.6 MM பதிவுகளுடன் ஒப்பிடுகையில்).
டிக்டொக்கில் #IndividualiTEA ஹாஸ்டேக்குகள் 287.2K பார்வையாளர்களை பதிவுசெய்தது.



சர்வதேச தேயிலை தினம் 2022: எண்ணிக்கையில் நுகர்வோரின் பங்களிப்புக்கள்

இதன் இலக்குகள் சமூக ஊடகங்களில், சர்வதேச தேயிலை தினத்துக்கான விழிப்புணர்வுகள் மற்றும் #PlantToCup ஹேஸ்டேக் மூலமாக நுகர்வோரிடையே சென்றடைந்ததுள்ளது. இவ் வருடத்தில், பல்வேறு தேயிலை வளரும் பிராந்தியங்களின் தேநீரை சுவைப்பதற்கான அழைப்பு அமெரிக்காவின் தேயிலை சபையினால் சமூக ஊடகங்களில் விடுக்கப்பட்டிருந்தது. இப்பதிவானது, தேயிலைத் உற்பத்தித் தொழிற்துறையில் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான பணியாளர்களினால் கொண்டாடப்பட்டது. அண்மைய தேநீர் மற்றும் சுகாதார மாநாடானது, தேநீருடன் தொடர்புடைய பல்வேறு சுகாதார மற்றும் சுற்றாடல் நன்மைகளை உள்ளடக்கியிருந்தது.



2022 இல் 72,703 ஐ அடைந்தது
2022 இல் 4,659 விளம்பரத்துக்கான பதிவுகள்
20 சமூக ஊடகப்பதிவுகள்

சிலோன் தேயிலை, பிராந்தியப் பெயர்கள் மற்றும் இலட்சணைகளை புவியியல் அறிகுறிகளின் (GIs) கீழ் பதிவுசெய்தல்

"சிலோன் தேயிலை" மற்றும் ஏனைய ஏழு வேளாண்-காலநிலை பிராந்திய தேயிலைகளை (நுவரெலியா, உடபுசல்லாவை, திம்புலா, ஊவா, கண்டி, சப்ரகமுவ மற்றும் ருகுண) உலக வர்த்தக அமைப்பின், ட்ரிப்ஸ் (TRIPS) ஒப்பந்தத்தின் கீழுள்ள பிரிவுகளினூடாக, புவியியல் அறிகுறிகளாகப் பாதுகாப்பதற்குத் தேவையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், இலங்கை தேயிலை சபையினால் உருவாக்கப்பட்டன. இது சிலோன் தேயிலை மற்றும் ஏனைய பிராந்திய தேயிலை வளர்ப்பு பெயர்களை, விசேடமாக வெளிநாட்டு ஒப்பந்தப் பொதியாளர்களினால் தவறான பாவனைக்கு உட்படுத்தப்படுவதைத் தவிர்க்க உதவுவது மாத்திரமல்லாமல், GIs இன் கீழ் சந்தைப்படுத்தப்படும் சிலோன் தேயிலைக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் உயர் மதிப்புள்ள விலைகளை நிர்ணயிப்பதற்கும் உதவியாக அமைகின்றது.

"சிலோன் தேயிலைப் பதிவுகள்": சிலோன் தேயிலையை புதுப்பித்தல் தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன், தற்போதைய நிலையில் இவை, துருக்கி, துனிஷியா மற்றும் ஐக்கிய அரபு இராட்சியம் போன்ற நாடுகளில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

சிலோன் தேயிலைக்கான GI பதிவுகள்

உற்பத்திகளின் தனித்துவமான தரைத்தோற்றமைப்பியல் தோற்றம் மற்றும் செயற்பாட்டுத் தரங்கள் மற்றும் "சிலோன் தேயிலைக்கான" நிலையான சான்றுதழ் கட்டமைப்பை உருவாக்குவதே சிலோன் தேயிலை GI திட்டத்தின் நோக்கமாகும். இதன் கண்ணோட்டத்தில், "சிலோன் தேயிலையின்" பெறுமதிசேர் சங்கிலிக் கட்டமைப்பானது அறிவுசார் சொத்துப்பாதுகாப்பினூடாக சர்வதேச சந்தைகளில் பெறுமதிசேர் உற்பத்திக்கான நன்மதிப்புக்களுடன், தேசிய மற்றும் சர்வதேச சான்றுதழ்களுடன் இணைந்து, புவியியல் குறிப்பீடுகளுடன் அதிக உற்பத்திகளை உள்ளடக்கிய நிலையானதாக மாறுகின்றது.

GI சுட்டிக்காட்டிகள், விசேடமான புவியியல் தோற்ற அமைவிடங்கள் மற்றும் உற்பத்திச் செயன்முறைத் தரங்களுக்காக குறியீடுகளாக அல்லது தோற்ற இடத்தின் காரணமான நற்பெயருக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு உற்பத்தியானது GI ஆகத் தொழிற்படுவதாயின், அதன் புவியியல் தோற்றஇடத்தினை பிரதிபலிக்கும் வகையில் குறியீடினால் சுட்டிக்காட்டப்படுதல் அவசியமாகும்.

- கலாநிதி. டெல்பின் மற்றும் கலாநிதி. கிளையர் ஆகியோர் இலங்கை தேயிலை சபை உத்தியோகத்தர்களின் உதவியுடன் அனைத்து பங்குதாரர்களின் இடங்களையும் தரிசித்து அவர்களை சந்தித்தனர். அவர்களின் அணி, நுவெரெலியா, பண்டாரவளை, அக்கறப்பத்தனை, தலவாக்கலை மற்றும் தெனியாய போன்ற இடங்களையும் தரிசித்தது.
- திட்டத்தில், UNIDO விலிருந்து விலகுவதற்காக முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அனைத்து தொழிநுட்ப செயற்பாடுகளும் CIRAD க்கு மாற்றப்பட்டன.
- கடந்த 2022, ஏப்பிரல் 21 தொடக்கம் 27 வரையான காலப்பகுதியில், இலங்கை தேயிலை சபைக்கான இரண்டாவது விஜயத்தின்போது, GI தொழிநுட்ப நிபுணர்கள் பங்குதாரர்களைச் சந்தித்தனர்.
- கடந்த 2022, ஜூன் 9 தொடக்கம் 13 வரையான காலப்பகுதியில், ஆசியாவில் புவியியல் அறிகுறிகள் தொடர்பான அறிமுகம் எனும் ஈ-ஏசியா GI இணையவழி பயிற்சிகளில் 14 இலங்கையர்கள் கலந்துகொண்டனர்.

சிலோன் தேயிலை பெறுமதிசேர் சங்கிலிக்கட்டமைப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான தரநியமங்களுக்கான பங்கேற்பு வரைபடம்

சிலோன் தேயிலையின் பெறுமதிசேர் வரைபட நடைமுறைகள் மற்றும் முறையான கட்டுப்பாடுகள், சிலோன் தேயிலையை GI ஆகப் பதிவுசெய்வதை இலக்காகக்கொண்டு, ஒருங்கிணைத்த மூலோ பாயத்தினை நோக்கியதாக அமையப்பெற்றுள்ளன.

- ஜூன் 16 தொடக்கம் 28 வரையான காலப்பகுதியில், சிலோன் தேயிலைக்கான தற்போதுள்ள சான்றுதழ்கள் மற்றும் அவற்றின் GI கட்டுப்பாட்டுத் திட்டத்துக்குச் சாத்தியான ஒருங்கிணைப்புக்கள் மற்றும் வரைபடம் மற்றும் தற்போதுள்ள கண்டறியக்கூடியதன்மை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகள், மதிப்பீட்டுச்சங்கிலி மற்றும் நிலைத்தன்மைக்கான சான்றுதழ்களுக்கான நிபுணர் கலாநிதி. அயுரேலி கேரிமென்ட்ராண்ட், அவர்களினால் நிறைவுசெய்யப்பட்டன.
- நிறைவுற்ற 2022, ஆகஸ்ட் தொடக்கம் செப்டம்பர் வரையான காலப்பகுதியில், வேளாண் விஞ்ஞானி மற்றும் தரையியல் அபிவிருத்தி நிபுணர் திரு. ஜிம்மி பலோவுஷாட் மற்றும் கலாநிதி. கிளையர் ஆகியோர் இணைந்து, தேயிலைக்கான நிலைத்தன்மைக்குரிய சான்றுதழ்கள் மற்றும் மதிப்பீட்டுச்சங்கிலி கண்டறியக்கூடியதன்மை தொடர்பான பகுப்பாய்வுகளை நிறைவுசெய்தனர். சிலோன் தேயிலை உற்பத்திக்கட்டமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான வரைபடம் 2022, செப்டம்பர் 23 இல் நடைபெற்ற GI தொழிநுட்பப் பணிசார் குழுக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது.





பிராந்திய செயலமர்வுகளில் கலந்துகொள்ளுதல்

இலங்கையில் தேயிலை மதிப்பீட்டு வலையமைப்பை வரைபடமாக்க, 2022. அக்டோபர் தொடக்கம் மார்ச் வரையான காலப்பகுதி ஒதுக்கப்பட்டது. ஒன்றிணைந்த இயக்கவியலை உருவாக்குதல் (மதிபீட்டு சங்கிலி வரைபடம்) மற்றும் தேயிலை வளர்ப்பாளர்கள் மற்றும் தேயிலை உற்பத்தியாளர்களிடையே, சிலோன் தேயிலையின் குறிப்பிட்ட தரத்திற்கு பங்களிப்புச் செலுத்தும் மிகமுக்கிமான கூறுகளை அடையாளமங்காணுதல் ஆகிய இரண்டுக்கும் முதல் பயனுள்ள கூறுகளை வழங்கும் பொருட்டு கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பங்கேற்பு செயல்முறையின் இரண்டாவது படியாக, GI கட்டிட விலையில் (நவம்பர் 2022 தொடக்கம் ஜூன் 2023 வரை) தேயிலை மதிப்பீட்டு சங்கிலியை ஈடுபடுத்துவதாகும்.

இலங்கையின் தேயிலைத் தொழிற்துறையின் விசாலமான தன்மையைக் கவனத்திற்கொண்டு, இலங்கையின் முழு தேயிலை உற்பத்திப் பகுதியையும் உள்ளடக்கும் வகையில், தொடர்ச்சியாக மூன்று பிராந்திய செயலமர்வுகளை உள்ளடக்கிய விரிவான ஆலோசனை செயல்முறையையொன்றினை திட்டக்குழு முன்மொழிந்தது. எதிர்வரும் மாதங்களில் முற்போக்கான கற்றல் செயல்முறையை அமைப்பதே இதன் நோக்கமாகும்.

புத்தகத்தில் சேர்க்கப்பட வேண்டிய தேர்வுகள் மற்றும் விருப்பங்களின் கலந்துரையாடல்களினால் ஒட்டுமொத்த செயல்முறை விவரக்குறிப்புகள் உருவாக்கப்படுகின்றன. இது அமுல்படுத்தல் அவத்தைக்கு கருவியாக அமைவதுடன், தேயிலைத் தொழிற்துறையில் அதிக எண்ணிக்கையிலான பங்குதாரர்களால் ஒரு புதிய கருவியை (GI) கையகப்படுத்தவும் உதவியாக அமையும்.

முதற்கட்ட செயலமர்வுத் தொடர்கள், 2022 நவம்பர் 22 தொடக்கம் 30 வரையான காலப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் உரிய பங்குதாரர்களுக்கு (இலக்கு குழு - தேயிலை தொழிற்சாலை/தோட்ட உரிமையாளர்கள், உதவி தேயிலை ஆணையாளர்கள், தேயிலை ஆய்வாளர்கள், TRI அதிகாரிகள், தேயிலை சிறு தோட்டங்கள் மேம்பாட்டு அதிகாரசபை, சிறுதோட்ட தேயிலை உற்பத்தி மாவட்ட சமூகங்கள்) குறைந்த, நடுத்தர மற்றும் உயர் தேயிலை வளரும் பகுதிகளில் நடாத்தப்பட்டன. நவம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட செயலமர்வுகளின் பிரதான நோக்கங்களாக;

1. மதிப்புச் சங்கிலியில் பரந்த பார்வையாளர்களுக்கு (இலக்குக் குழுவிற்கு மேலே) புவியியல் குறிகாட்டியின் முக்கிய கருத்துக்களை அறிமுகப்படுத்தி, சிலோன் தேயிலைக்கான சாத்தியமான நன்மைகளை அறிமுகப்படுத்தல்.
2. சிலோன் தேயிலையின் முக்கிய அம்சங்கள் மற்றும் அதன் தனித்துவமான அம்சங்களை வழங்கக்கூடிய குறிப்பிட்ட உற்பத்தி நடைமுறைகளை கூட்டாக சரிபார்க்கவும்.
3. விபரக்குறிப்புக்களைக் கொண்ட புத்தகத்தினுள் தனித்துவமான சிலோன் தேயிலையின் தரத்தினை விவரிக்க வெவ்வேறு தெரிவுகளை முன்மொழிதல்.
4. இலக்குக்குழுக்களின் வெவ்வேறு பிரிவுகளுக்கு ஒவ்வொரு விபரக்குறிப்புக்களை அமல்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல். ஒவ்வொரு செயலமர்வுகளிலும் பார்வையாளர்களிடமிருந்து பின்னூட்டல்களை பெறுவதற்குத் தேவையான நேரம் ஒதுக்கப்படும்.

திட்டம் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் கண்டறியக்கூடிய தன்மை குறித்து கள மட்டத்திலான விவரங்களைப் பெறும் நோக்குடன் அனைத்து ATC பிராந்தியங்களிலும், CIRAD பிராந்திய செயலமர்வுகள், கடந்த நவம்பர் 2022 இல் நடாத்தப்பட்டது.

சிலோன் தேயிலைக்கான புவியியல் சுட்டிக்காட்டி (GI) கட்டமைப்பினை அமுல்படுத்தல் - நவம்பர் மறுசீரமைப்புக் கூட்டங்கள்

பதுரலிய பிராந்தியத்திலுள்ள தொழிற்துறை பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 22 இல், கண்டேஹேதரவில் அமைந்துள்ள உமா ஓயா கார்டின் விடுதியில் நடாத்தப்பட்டது.









மாத்தறை பிராந்தியத்திலுள்ள தொழிற்துறை பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 23 இல், பிட்டபெத்தரவில் அமைந்துள்ள சாரா கிராண்ட் விடுதியில் நடாத்தப்பட்டது.





காலி பிராந்தியத்திலுள்ள தொழிற்துறை பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 24 இல், காலியில் அமைந்துள்ள ஹசர விடுதியில் நடாத்தப்பட்டது.





இரத்தினபுரி பிராந்தியத்திலுள்ள தொழிற்துறை பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 25 இல், பெல்மதுளையில் அமைந்துள்ள சில்வரே விடுதியில் நடாத்தப்பட்டது.





பதுளை பிராந்தியத்திலுள்ள பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 28 இல், பதுளையில் அமைந்துள்ள ஹெரிடேஜ் கிராண்ட் விடுதியில் நடாத்தப்பட்டது.





நுவரேலியா பிராந்தியத்திலுள்ள தொழிற்துறை பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 29 இல், நுவரேலியாயில் அமைந்துள்ள பிளக் பூள் விடுதியில் நடாத்தப்பட்டது.





கண்டி பிராந்தியத்திலுள்ள தொழிற்துறை பங்குதாரர்களுக்கான செயலமர்வுகள், நவம்பர் 30 இல், கண்டியில் அமையப்பெற்றுள்ள ஓகே ரே விடுதியில் நடாத்தப்பட்டது.





திருமதி. லிடியாவின் புலன்திறன் பகுப்பாய்வு

பிரான்ஸ் நாட்டில் ஒரு முன்னோடியான ரசனையாளர் மற்றும் தேநீர் சம்மேளர் மற்றும் தேயிலை பற்றிய பல்வேறு குறிப்புப் புத்தகங்களை எழுதியவருமான, திருமதி லிடியா கௌடியர், சிலோன் தேயிலைக்கான புவியியல் குறிகாட்டி திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசகராக இணைகிறார். இவர் இலங்கை தேயிலை சபையின் தேயிலை சுவைப்பாளர் வாரியத்தில் உள்வாங்கப்பட்டதுடன், புதிய வித்தனாகண்டே தேயிலைத் தொழிற்சாலையையும் தரிசித்தார்.







சிலோன் தேயிலை GI இன் ஆளும் கட்டமைப்பு மற்றும் விவரக்குறிப்புக்கள் தொடர்பில் இறுதித் தீர்மானத்தினை எட்டுவதற்கும், ஒன்றிணைந்த இத்தருணங்கள் வாய்ப்பளிகின்றன.

வர்த்தகக்குறியைப் பாதுகாத்தல்

சிங்க இலட்சணை வர்த்தகக்குறியினைப் பதிவுசெய்தல்

சிலோன் தேயிலையின் சிங்க இலட்சணை வர்த்தகக் குறிக்குரிய சட்டபூர்வமான உரிமையாளராக இலங்கை தேயிலை சபை விளங்குகின்றது. இலங்கைய மற்றும் ஏனைய நாடுகளில் சிலோன் தேயிலையின் சிங்க இலட்சணையைப் பதிவுசெய்தல் அல்லது புதிப்பித்தல் செயற்பாடுகள் சபையின் தேயிலை ஊக்குவித்தல் பிரிவினால் மேற்கொள்ளப்படும். கடந்த 2022 ஆம் ஆண்டளவில் சிங்க இலட்சணையானது 103 நாடுகளில், பதிவுசெய்யப்பட்டிருந்தது.

சிங்க இலட்சணையைப் பயன்படுத்தும் உரிமையானது தரமான, பெறுமதி சேர்க்கும் 100% சிலோன் தேயிலை உற்பத்திகளுக்கு மாத்திரம் (தேயிலைப் பைகள் மற்றும் தேயிலைப் பொதிகள்) வழங்கப்பட்டுள்ளதுடன், இவை சர்வதேச தரநிர்ணய அமைப்பின் ISO 3720 தர நியமங்களுடன் ஒத்திருப்பதுடன், ஒவ்வொரு இடத்துக்கும் ஏற்றாற்போல, குறைவான குறிப்பு தரநிலைக்கு மேலாக அமைந்துள்ளதுடன், இவற்றுக்கான முற்பொதியிடல் செயற்பாடுகள் இலங்கையில் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும்.


மதிப்பீட்டுக் காலத்தில், புதிய சிங்க இலட்சணையை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் (தரம் மற்றும் சிங்க சாதனத்துக்கான சிலோன் தேயிலைச் சின்னம்), துர்க்மெனிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ், மொரோக்கோ, சோமாலியா, அசர்பைஜான் மற்றும் கிர்கிஸ்தான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டன. ஹாங்காங், ஜோர்தான், சேர்பியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் புதிய பதிவுகள் நிறைவுபெற்றன. சிங்க சாதனத்துக்கான சிலோன் தேயிலைச் சின்னத்தினை புதுப்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், தற்போதைய நிலையில் கம்போடியா, லாவோஸ், மலேசியா, வியட்நாம் சீரியா லியோன் ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிங்கப்பூர் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் பதிவுப்புதுப்பித்தல்கள் நிறைவுபெற்றுள்ளன.

ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலையின் சின்னத்தை பதிவுசெய்தல்

இலங்கையில் ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன், ஓசோன் நட்புடைய தூய தேயிலைக்கான சின்னம் இலங்கை தேயிலை சபையினால் பதிவுசெய்யப்பட்டது. மொண்ட்ரியல் பிரகடனத்தின் கீழ், தனிமைப்படுத்தல் இன்றிய மற்றும் முன் ஏற்றுமதி செயன்முறைகளுக்கு மெதைல் புரோமைட்டினை பயன்படுத்தல் தொடர்பில் இரு கட்டத் திட்டங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இலங்கை ஓசோன் நட்புடைய தேயிலை உற்பத்தி நாடுகளில் உலகில் முதன்மையான, ஒரேயொரு நாடு எனும் அங்கீகாரத்தைப் பெற்றதுடன், உலகில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிடையே இம்மகுடத்தைப் பெற்ற ஒரேயொரு நாடாகவும் விளங்குகின்றது.

மீளாய்வுக்காலத்தில், "ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலை மற்றும் சாதனத்தை" புதுப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், தற்போதைய நிலையில் ரஷ்யா, ஜப்பான், ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஐக்கிய இராட்சியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் புதுப்பித்தல் பதிவுகள் நிறைவுபெற்றுள்ளன.

ஓசோன் நட்புடைய தூய சிலோன் தேயிலைக்கான சின்னத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை, ஒன்பது சிலோன் தேயிலை ஏற்றுமதியாளர்களின் ஒன்பது வகையான உற்பத்திகளுக்கு வழங்கப்பட்டது.



"சர்வதேச ஓசோன் தினைத்தை" முன்னிட்டு, டெய்லி மிரர் பத்திரிகையினால் கடந்த 2022 செப்டம்பர் 16 அன்று விசேட அனுபந்தமொன்றினை வெளியிடப்பட்டது. மொன்றியல் பேரேட்டின் கீழ் "ஓசோன் நட்புடையது" எனும் நற்சான்றிதழ் வழங்கப்பட்ட ஒரேயொரு உற்பத்தியாக சிலோன் தேயிலை விளங்குகின்றது. இதனை இலங்கை தேயிலை சபையானது சர்வதேச சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தில், "தனித்துவமான விற்பனை முன்மொழிவாகப்" (USP) பயன்படுத்துவதுடன், இவ்விசேட நாளில் இலவசமாக வழங்குவதற்கான ஆதரவினை வழங்கவும் இணங்கியது. இதனடிப்படையில், "சர்வதேச ஓசோன் தினம் 2022 ஐ" முன்னிட்டு டெய்லி மிரர் பத்திரிகையின் விசேட பதிப்பில், ஒரு பக்கத்தின் கால்பகுதிக்கான விளம்பரம் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்பட்டது.

சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலுவலகங்கள் மற்றும் சந்தை நிலைமைகள்

தற்போதைய நிலையில், இலங்கை தேயிலை சபையினால், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலுள்ள, இலங்கைப் பணியகங்களுக்கான இரண்டு பிராந்திய சர்வதேச தேயிலை ஊக்குவித்தல் அலகுகள் முகாமை செய்யப்படுகின்றன.

ரஷ்யக் கூட்டமைப்பு மற்றும் சீஐஎஸ் சந்தைகளுக்கான தேயிலை ஊக்குவிப்பு செயற்பாடுகள் மொஸ்கோவினால் கையாளப்படுகின்றன.

இலங்கைத் தேயிலையை ஊக்குவித்து அதன் சந்தைப் பங்குகளை அதிகரிக்கும் வகையில், இலங்கைத் தேயிலையை பிரதிநிதித்துவப்படுத்தும் அலுவலகமானது வளர்ச்சியடையும் சந்தையாக அடையாளங்காணப்பட்டுள்ள சீனாவில் நிறுவப்பட்டது. மேலே குறிப்பிட்ட பிராந்தியங்கள் தவிர, கொழும்பிலுள்ள தேயிலை ஊக்குவித்தல் பிரிவானது, சர்வதேசத்திலுள்ள ஏனைய உரிய இலங்கைப் பணியகங்களுடன் இணைந்து, ஏனைய சந்தைகளுக்கான தேயிலை ஊக்குவித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தேயிலை ஊக்குவித்தல் அலகு - சீனா

தேசிய நிகழ்வுகளின் கொண்டாட்டம்

இலங்கையும், சீனாவும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திய 65 வது ஆண்டு நிறைவினை 2022 இல் கொண்டாடின. அத்துடன், இரு நாடுகளும் இறப்பர்- அரிசி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட 70 வது ஆண்டு நிறைவும் 2022 இல் கொண்டாடப்பட்டது. சீனாவிலுள்ள இலங்கைத் தூதரகமானது, இரண்டு மைல்கற்களைச் சிறப்பிக்கும் சந்தர்ப்பத்தில் சிலோன் தேநீர் சுவைத்தலுக்கான நிகழ்வையும் தனது கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, சுற்றுலா மற்றும் மக்களுடனான உறவுகளை மேம்படுத்துவதற்காக இந்த நினைவேந்தல் பயன்படுத்தப்படுகிறது.

வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் கீழ், சீன நுகர்வோர் மத்தியில் சிலோன் தேயிலை பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க தூதரகத்தின் தேயிலை ஊக்குவிப்பு பிரிவினால் தொடர்ச்சியான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யப்பட்டன. இதன் முதற்கட்டமாக, தூதரகத்தைச் சூழவுள்ள சுற்றுமதில் சாலையோரத்தினை எதிர்கொள்ளும்வகையில் சிலோன் தேயிலை ஊக்குவிப்புப் பதாகை பொறிக்கப்பட்ட விளக்குப் பெட்டிகள் பொருத்தப்பட்டன.



இந்நிகழ்வில் சீனாவை பிரதிநித்துவப்படுத்தும் சிலோன் தேயிலை முகவர்களான, ஸ்ராஸ்சன்,

லம்பிரா, லயன்ஸ், சினோலன், பவுதின் மவுண்டைன், ஷான் டீஸ், ஸ்ரூவட் டீ மற்றும் பொண்ட் டீ போன்றன பங்குபற்றியதுடன், தமது உற்பத்திகளை பார்வையாளர்களுக்குக் காட்சிப்படுத்தினர்.

தூதுவர் கலாநிதி. கோஹன வரவேற்புரையை ஆற்றியதுடன், சிலோன் தேயிலையின் ஆரோக்கிய நன்மைகளை எடுத்துரைத்தார். மேலும், இரண்டாம் செயலாளரும், தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தருமான திரு.சம்பத் பெரேரா, சிலோன் தேயிலை தொடர்பில் விரிவானதொரு விளக்கத்தினை அறிமுகப்படுத்தியதுடன், நிகழ்வின் இறுதியில் பங்கேற்பாளர்களுக்கு சிலோன் தேயிலை காய்ச்சும் விதம் மற்றும் தேநீரை சுவைபார்க்கும் வழிமுறை ஆகியவற்றை செயன்முறையாக விபரித்தார்.

சர்வதேச தேயிலை நாளில் சிலோன் கறுப்புத் தேநீரை ஊக்குவித்தல், 2022

ஊக்குவித்தல் அமர்வுகளின்போது, சிறந்த சிலோன் தேநீர், லெமன் தேநீர் மற்றும் பால் தேநீர் கோப்பைகளை எவ்வாறு தாயாரிப்பது தொடர்பான செயல்முறை விளக்கம் மற்றும் சிலோன் தேயிலையின் தனித்துவமான பண்புகள் பற்றி மேலும் விரிவாக கேள்வி பதில் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் சிலோன் தேநீர் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இலங்கையின் 7 பிராந்திய தேயிலைகள் மற்றும் சீனக் கொள்வனவாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் பிரதான தேயிலைத் தரங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.



சிலோன் தேயிலையை ஊக்குவிப்பதற்கான நேரலை நிகழ்வுகளின் தொடர்

இலங்கைத் தயாரிப்புகளை, குறிப்பாக சிலோன் தேயிலையை விளம்பரப்படுத்த தொடர்ச்சியான பல்வேறு நேரடி ஒளிபரப்பு நிகழ்வுகள், டேலியன் சிங்யூ யவான்ங்மென்ங்க குழும தனியார் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் ஆரம்பக்கூட்டம் 2022 பெப்ரவரியில் நடைபெற்றது.



தேயிலை ஊக்குவித்தல் அலகு - மொஸ்கோ

சர்வதேச உறவுகள் திட்டம், மொஸ்கோ பெருநகர ஆளுகைப் பல்கலைக்கழகம்

மொஸ்கோ பெருநகர ஆளுகைப் பல்கலைக்கழகத்தின்,

சர்வதேச உறவுத்திட்டத்தின் மாணவர்களை ரஷ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு 29 செப்டம்பர் 2022 அன்று வருகைதரவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.



- பாகுவில் ப்புரோவோ ஹைப்பர் சந்தையில், 2022 மே 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் சிலோன் தேயிலை வியாபாரக்குறி செயற்படுத்தல் திட்டம்.
- பாகுவில் "ராஹட் மேற்தரச்சந்தையில் " 2022 மே 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் சிலோன் தேயிலை வியாபாரக்குறி ஊக்குவித்தல் திட்டம்.
- மொஸ்கோவிலுள்ள ரூடன் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்ட பல்கலாச்சாரக் களியாட்டத்தில் சிலோன் தேயிலை ஊக்குவித்தல் நிகழ்வுகள்.



- உஸ்பெகிஸ்தானின் தாஸ்கென்ட்டில் கோர்சிங்கா மேற்தர விற்பனைக்கூடம் - அஷிமோவாவில் நடைபெற்ற சிலோன் தேயிலை வியாபாரக்குறி செயற்படுத்தல் நிகழ்வுகள்.
- உஸ்பெகிஸ்தானின் தாஸ்கென்ட்டில் அமையப்பெற்றுள்ள நெக்ஸ்ட் விற்பனைசாலையின், கோர்சிங்கா மேற்தர விற்பனைக்கூடத்தில் சிலோன் தேயிலை வியாபாரக்குறி செயற்படுத்தல் நிகழ்வுகள்.

"CHASHKA" களியாட்டத்திட்ட நிகழ்வு - மொஸ்கோ- 2022, ஆகஸ்ட் 27- 28





குர்ஸ்க்- கொரேன்ஸ்க்கர் பிராந்திய கண்காட்சியில் சிலோன் தேயிலை பங்குபற்றியமை- ரஷ்யா, 2022



கசகிஸ்தான், அல்மதியிலுள்ள மேற்தரச்சந்தையில் சிலோன் தேயிலை வகைகளை செயற்படுத்தல் திட்டம் "ஜுபிலி" - 2022, நொவம்பர் 3-4







ரஷ்யாவின் சென்ட் பீட்டர்ஸ்பேர்க் நகரத்திலுள்ள, ரூபின் தேயிலை விற்பனை நிலையத்தில் வியாபாரக்குறி செயற்படுத்தல்கள்





ஐக்கிய அரபு இராட்சியத்தில் "எக்ஸ்போ துபாயில்" சிலோன் தேயிலைப் பிரச்சாரங்கள்

"வேர்ல்ட் எக்ஸ்போ துபாய்" கடந்த 2021, அக்டோபரிலிருந்து, 2022 மார்ச் வரையான காலப்பகுதியில் துபாயில் நடந்தேறியது. இவ் ஆறுமாத காலக் கண்காட்சியில், 190 நாடுகள் பங்குபற்றியதுடன், "எண்ணங்களை இணைத்தல், எதிர்காலத்தை உருவாக்குதல்" என்ற எண்ணக்கருவின் கீழ், உப தலைப்புக்கள், இயக்கம் மற்றும் நிலைத்தன்மையுடன் தமக்கான அரங்கங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. இந்நிகழ்வில், உலகம் முழுவதிலுமிருந்தும் சுமார் 25 மில்லியன் பார்வையாளர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கையின் மொத்த தேயிலை ஏற்றுமதியில் சுமார் 55% மான பங்கினை மத்திய கிழக்கு நாடுகள் வகிப்பதனால், மத்திய கிழக்கு சந்தை மிகமுக்கியமானதாக விளங்குவதுடன், இப்பிராந்தியத்தில், இந்நிலையை மேலும் வலுப்படுத்தவேண்டியது அவசியமாகும். ஆறு மாத காலமாக நடாத்தப்பட்ட எக்ஸ்போவில், இலங்கை தேயிலை சபையானது, இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகத்துடன் இணைந்து, இலங்கை அரங்கத்தில் சிலோன் தேயிலை பிரச்சார நிகழ்வுகளில் பங்கேற்றன. எக்ஸ்போ முழுவதிலுமாக, பார்வையாளர்களுக்கு சிலோன் தேநீரை உண்மையான சுவையினை சுவைப்பதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.







குறைவான செயல்திறன் கொண்ட சந்தைகளை மீண்டும் கைப்பற்றுதல்

சிலோன் தேயிலையின் செயல்திறன் குறைவான சந்தைகளை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன், சிலோன் தேயிலை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் எகிப்து/ பாகிஸ்தான்/ ஐக்கிய இராட்சியம் போன்ற நாடுகளில் முன்னெடுக்கப்பட்டன. இது ஒரு சிறப்பான திட்டமாக அமையப்பெற்றதுடன், தேயிலைத் தொழிற்துறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது.

ஐக்கிய இராட்சியம்

பேர்மின்ங்காமில் இல் நடந்தேறிய பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவில், உத்தியோகபூர்வ தேயிலை வழங்குனராக இலங்கை தேயிலை சபை தனது முழுமையான அனுசரணையை வழங்கியது. உலகப்புகழ்பெற்ற சிலோன் தேயிலை வகைகளான, டில்மா தேயிலை, இங்கிலீஸ் தேயிலை நிலையம் மற்றும் டீ ரேங்க் வகைகள் தங்களது இறுதி சிறந்த கலவைகளை இந்நிகழ்வுக்கு வழங்கின..



- **ஐக்கிய இராட்சிய தேயிலை சங்க ஊக்குவிப்புக்கள்**

ஜேம்ஸ் சுரங்கா பெரேரா மற்றும் ஜேன் பெட்டிக்ரூ ஆகியோரால் ஐக்கிய இராட்சிய தேயிலை சங்கத்துக்காக ஒருங்கிணைந்த நிகழ்வு நடாத்தப்பட்டதுடன், உலகில் சகல பாகங்களிலிருந்தும், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் உள்ளடங்களாக 25 க்கும் மேற்பட்ட தேயிலை நிபுணர்கள், வணிக அமைப்புக்கள் கலந்து கொண்டன. இவ் ஒருங்கிணைந்த நிகழ்வில், இலங்கை தேயிலை சபையினால் அற்புதமான சிலோன் தேயிலை வகைகள் விளம்பரப்படுத்தப்பட்டன.

எகிப்து

இலங்கை தேயிலை சபை, கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவியுடன், இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுடன் இணைந்து, கெய்ரோவிலுள்ள டேண்டி விற்பனைக் கூடத்தில், சிலோன் தேயிலை வகைகளிடையே அதியுயர் தர சிலோன் தேயிலையைத் தேடும் நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்பொருட்டு சிலோன் தேயிலை கியோஸ்க் ஒன்றைத் திறப்பதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்தியது.

பாகிஸ்தான்

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் வாகனத்துறை தொடர்பான கூட்டுச் செயற்குழுவின் 3வது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவான, "பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான சுதந்தர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், பயன்படுத்தப்படாத ஒதுக்கீட்டின் கீழான கட்டண நன்மைகளை பெறும்பொருட்டு, இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெறுமதிசேர் தேயிலைக்கான விசேட உற்பத்திக் குறிப்பிட விதிகள் (PSR) அறிமுகம் செய்யப்பட்டன".

இதற்கான சாத்தியக்கூறுகளை அறியும்பொருட்டு திட்டத்தை துணைக்குழுவுக்கு அனுப்ப பாகிஸ்தான் தரப்பினர் இணக்கம் தெரிவித்தனர்.

இதற்காக பாகிஸ்தானில் முதலீட்டாளர்களிடமிருந்து முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றதுடன், பெறுமதிசேர் தேயிலைப் பைகளுக்கான தேயிலை விற்பனை நிலையத்தை கராய்ச்சியில் நிறுவும்பொருட்டு ஆணைய அலுவலகத்தினால் சேகரிக்கப்பட்டன.

உள்நாட்டு தேயிலை ஊக்குவிப்பு நிகழ்வுகள்

உள்ளூர் வர்த்தக காட்சியகங்கள்

- **காலி உணவுக் களியாட்டம் - உணவு மற்றும் இசை விழா**






கடந்த 2022 பெப்ரவரி 26, 27ஆம் திகதிகளில், காலிக்கோட்டை நீதிமன்ற கட்டடத்தொகுதியினுள் இடம்பெற்ற காலி பெஸ்ட் - உணவு மற்றும் இசை விழாவில், சிலோன் தேயிலையை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை தேயிலை சபை தனது காட்சியகத்தினை நிறுவி தனது பங்களிப்பைச் செலுத்தியது.

- **மேல்மாகாண தென்றல் களியாட்டம்**

கடந்த 2022 மார்ச் 4 மற்றும் 5 ஆம் திகதிகளில், மேல்மாகாணத்தில் சுற்றுலா சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வானது, புதிதாக நிறைவுசெய்யப்பட்ட கடலோர பயண வீதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதிகளவான சுற்றுலாத்துறையினர் மற்றும் இளம் தலைமுறையினரை ஈர்க்கக்கூடியதாக அமைந்தது.




- **தூதுவர்களுக்கான மாலை கலாச்சாரக் கண்காட்சி**

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2022 பெப்ரவரி 19 ஆம் திகதி நெலும் பொகுணவில் ஏற்பாடு செய்யப்பட்ட தூதுவர்கள் நிகழ்வில் கலாசார கண்காட்சியில், இலங்கை தேயிலை சபையினால் சிலோன் தேயிலைக்கான காட்சியகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





- **நடமாடும் சேவை நிகழ்வு மற்றும் கண்காட்சி - தெனியாய**




தெனியாய மத்திய கல்லூரியில், மாத்தறை தேயிலை ஆணையாளரின் பிரிவின் பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்வில், இலங்கை தேயிலை சபை தனது பங்களிப்பினைச் செலுத்தியது.

அனுசரணைகள்/ நாளிதழ்களிலான விளம்பரங்கள்

1. இலங்கையின் 74 வது சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்காக, "சிலோன் தேயிலை உலகின் மிகச்சிறந்த தேயிலை" எனும் சிலோன் தேயிலை தொடர்பான கட்டுரை, சிலோன் தேயிலைக்கான ஒலி மற்றும் ஒளி அமைப்புக்கள், தகவல்

சுவரொட்டிகள்/ துண்டுப்பிரசுரங்கள் ஆகியன வெளிநாட்டு துதரகங்களின் வேண்டுகோளுக்கமைய, அனுப்புவதற்காக வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

2. வருடாந்த நாளிதழ்களுக்கான "நிதஹாஸ் அவுருது" விளம்பரம்
3. பிக் லைவ் நாளிதழில் சிலோன் தேயிலைக்கான கட்டுரை
4. சர்வதேச தேயிலை தினத்துக்கான அனுசரணை (2022 திசம்பர் 15) - ஸ்டார் தமிழ் தொலைக்காட்சி அலைவரிசை
5. சர்வதேச தேயிலை தினம், 2022 க்கான கொண்டாட்டத்தின்போது சமூக ஊடகத்தளங்களில் பிரசுரிப்பதற்கான சிலோன் தேயிலை ஊக்குவித்தல் காணொளி, இணையத்தள பதிவு மற்றும் கட்டுரைகள். இவை வெளிநாட்டு அமைச்சின் ஊடாக வெளிநாட்டு அமைப்புகளுக்கும் பகிரப்பட்டன.
6. நிறைவுற்ற 2022 இல் இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சங்கத்தின் 30 வது வருடத்துக்கான, வருடாந்த ஏற்றுமதியாளர் விருதுக் கொண்டாட்டத்துக்கான அனுசரணை

இலவச தேயிலை - உள்ளூர் நிகழ்வுகள்

பார்வையாளர்களிடையே சிலோன் தேயிலையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விசேட நிகழ்வுகளிலும், சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பாராட்டு அடிப்படையில் சிலோன் தேயிலைகளை வழங்குவதன் மூலமாக பல்வேறு பங்குதாரர் குழுக்களுடனான உறவுகளை தொடர்ந்து பலப்படுத்தி வருகிறது. கடந்த 2022 இல், பாராட்டு அடிப்படையில் ரூபா 40,000 பெறுமதியான சிலோன் தேயிலை வழங்கப்பட்டது.

நாட்டு ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் (ஏனைய தேசிய அமைப்புகளுடனான ஒன்றிணைந்த ஊக்குவித்தல்கள்)

- NCE விருதுகள் விழா - தேயிலை மற்றும் தேயிலை உற்பத்திப் பொருட்களுக்கான துறைக்கு அதியுயர் அனுசரணை.

ஜனவரி 29 இல் சங்கிரில்லா விடுதியில் நடந்தேறிய 29 வது NCE விருதுகள் விழாவில் இலங்கை தேயிலை சபையினால் தேயிலை மற்றும் தேயிலை உற்பத்திகளுக்கான அதியுயர் அனுசரணை வழங்கப்பட்டதுடன், 30 வது NCE விருது வழங்கல் விழாவில் தேயிலை மற்றும் தேயிலை உற்பத்திப் பிரிவுகளுக்கான அனுசரணையும் வழங்கப்பட்டது.





- பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (BIA) மற்றும் மாத்தளை ராஜபக்க சர்வதேச விமான நிலையத்துக்கு (MRIA) வருகைதரும் பயணிகளுக்கு சிலோன் தேயிலைகளை வழங்கி விசேட ஊக்குவித்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.





தேயிலை நூதனசாலை

கடந்த வருடம், கியூபாவின் தூதுவர் எச்.ஈ. அண்டரஸ் மார்சிலோ கோண்ஷாலஸ் ஹாரிடோ அவர்கள் சிலோன் தேயிலை நூதனசாலையை தரிசித்தார்.





இலங்கைக்கான பாதுகாப்பு ஆலோசகரின் அறிமுக சுற்றுப்பயணத்தின் போது, 13 நாடுகளை சேர்ந்த இராணுவப் பிரதிநிதிகள் சிலோன் தேயிலை நூதனசாலையை தரிசித்தனர்.





பேராதனை தாவரவியல் பூங்காவில், சிலோன் தேயிலை நூதனசாலையினால் "தாவரவியல் பூங்கா காலா" நிகழ்வு நடாத்தப்பட்டது.



தோட்டத்தொழிற்துறை தொழிலாளர் சமூக அபிவிருத்தி மற்றும் இயற்கை அனர்த்தங்கள் மீட்பு உதவி

இலங்கையில் தேயிலை வளரும் பகுதிகளிலுள்ள அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் நோயாளர்களின் நோயெதிர்ப்பு சக்தியினை, மேலும் உந்தும் வகையில் கோவிட் 19 நோய்த்தொற்றுக் காலத்தில் ரூபா 1.2 மில்லியன் பெறுமதியான சிலோன் தேயிலைப் பொதிகளை வழங்க, இலங்கை தேயிலை சபையினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் இலங்கை தேயிலை சபையின் பங்களிப்பானது மிகவும் பாராட்டுக்குரியதாக அமைந்தது.



• பாகிஸ்தானில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சிலோன் தேயிலைகள் வழங்கிவைக்கப்பட்டன.

கடந்த செப்டம்பரில், பாகிஸ்தானில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சிலோன் தேயிலைகள் ஜின்னா சர்வதேச விமானநிலையத்தில் வைத்து அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன.



மகிழ்ச்சியான சுற்றுலா நாள் கொண்டாட்டங்கள்

மகிழ்ச்சியான உலக சுற்றுலா நாள்
“சிலோன் தேயிலையுடனான மறக்கமுடியாத தருணங்களுடனான பயணம்”



இலங்கை தேயிலை சபையின் தேயிலை விற்பனை நிலையங்கள்

இலங்கை தேயிலை சபையின் விற்பனை நிலையங்களில், தேயிலையை கொள்வனவு செய்யவரும் உள்நாட்டு/ வெளிநாட்டு நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்றாற்போல, வெவ்வேறு சுவையுள்ள தேயிலைப்பொதிகளை கொள்வனவு செய்யமுடியும். இலங்கை தேயிலை சபையின் சின்னத்தினைக் கொண்ட, சிலோன் தேயிலை வகைகளை ஏற்றுமதிசெய்யும் 22 க்கும் மேற்பட்ட தனியார்ப்பிரிவு தேயிலை நிறுவனங்களினூடாக 1500 க்கும் மேற்பட்ட தேயிலைப்பொதி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஊக்குவித்தல்/ தகவல் வெளியீடுகள்

குறிப்பிட்ட வருடகாலத்தில், அரையாண்டுக்கு ஒருமுறை ஊக்குவித்தல்/ தகவல் செய்தித்தாள்கள் வெளியிடப்படுகின்றன.

2.4 தேயிலை சுவைத்தல் அலகு

இவ் அலகானது சிலோன் தேயிலையின் தரத்துக்கான உத்தரவாதத்தினை வழங்கும் பிரதானமானதொரு அமைப்பாக விளங்குகின்றது. தேயிலையின் ஏலம் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு முன்னர், தேயிலையின் தரத்தினை மதிப்பிடுவதற்குப் பொறுப்பாக செயற்படுகின்றது. வேறுபட்ட நறுமணம், காலநிலை இயல்புகளினால் ஏற்படும் தாக்கங்கள் (மழைவீழ்ச்சி, சூரியஒளி நேரங்கள் மற்றும் வெப்பநிலை), தரைத்தோற்றவியல் அமைப்புக்கள் மற்றும் வேறுபட்ட உற்பத்தி செயற்பாடுகள் போன்ற சில காரணிகளினால், தயாரிக்கப்பட்ட தேநீரின் தோற்றம் மற்றும் சுவை ஆகியவற்றில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. சுவைக்கப்பட்ட தேநீரின் இயல்புகள் மற்றும் சுவையாளரின் பயிற்சித்திறன் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு, தேயிலை மாதிரிகளின் விலை மற்றும் தரம் ஆகியன உறுதிசெய்யப்படும். திருப்தியற்ற தேயிலை மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக இலங்கை தேயிலை சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்படும்.

இலங்கை தேயிலை சபையின் சுவைபார்க்கும் குழுவில், அரச மற்றும் தனியார் பிரிவுகளைச் சேர்ந்த நிபுணர்கள் உள்ளடங்குகின்றனர். இதில், கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கம் (CTTA), கொழும்பு தரகர்கள் சங்கம் (CBA), சிலோன் மரணடுகை சங்கம் (CPA), இலங்கைக்கான தேயிலை சிறிய பங்குடைமை அபிவிருத்தி சமூகங்களின் கூட்டமைப்பு (SLFTSHDS), தேயிலை ஏற்றுமதிச் சங்கம் (TEA), இலங்கை தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம் (SLTFOA) மற்றும் பக்க சார்பான முடிவுகளை தவிர்க்கும் வகையில், ஏதாவது தனியான குழுவின் உறுப்பினர்கள் ஆகிய அனைத்து பங்குதாரர்களும் உள்ளடங்குகின்றனர்.

தேயிலை சுவைத்தலின் எண்ணக்கருவும், செயற்பாட்டு முறைமையும்

- **திரவநிலை தேநீர் தயாரிப்புக்காக ஐஎஸ்ஓ 3103 இன் உணர்ச்சி சோதனைகள்**
- **சிலோனில் தேயிலை தயாரிப்புக்கு, கறுப்புத் தேநீருக்கான சொல்லகராதி/ தனிக்கட்டுரை தேயிலை சுவைத்தல் சொல்லியல் ஐஎஸ்ஓ 6078 - இல. 4 சிலோனில் தேயிலை உற்பத்தி**



தனியார் விற்பனைக்கான ஒப்புதல் மற்றும் குழுவின் ஒப்புதல் மதிப்பீட்டுச் சான்றிதழ்

தேயிலை நிபுணர் குழுவினரின் பங்களிப்புடன் சாதாரண தேயிலை சுவைத்தல் அமர்வுகள், வாரத்திற்கு இருமுறை, பிரதானமாக திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் நடைபெறும். அமர்வின் போது, இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதி அலகிலிருந்து, கீழே குறிப்பிடப்பட்ட தேயிலை மாதிரிகள், நேரடியாக TTU க்குக் கிடைக்கப்பெறுவதுடன், பின்னர் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படும்.

அ) முன் ஏலத் தேயிலைகள்

ஆ) விசேட ஆய்வுத் தேயிலைகள்

இ) முன் இறக்குமதி மாதிரிகள்

ஈ) நேரடி விற்பனைகள்

உ) தினசரி மதிப்பீடு, முன் கப்பல் கண்காணிப்பு

அட்டவணை 2.4.1: ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மற்றும் சந்தேகத்துக்கிடமான மாதிரிகளின் தரவுகள்

விவரணம்	ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை	சந்தேகிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை
பார்வைப் பரிசோதனைகள்	224,186	
ஒர்கனோலெப்டிக்	79,432	
ஏல முன் மாதிரிகள்		
சந்தேகத்துக்கிடமான திரவ மாசடைதலினால்வாரியத்தினால் நிராகரிக்கப்பட்டவை	4,988	331
மசகு நார்		346
முட்டாள்தனமான விஷயங்கள்		1,183
கச்சா ஃபைபர		1,438

மூலம்: இலங்கை தேயிலை சபை

அ) முன் ஏலத் தேயிலைகள்

இவ் அலகினூடாக, ஏலத்துக்கு முன்னரான தேயிலை மாதிரிகளை, எட்டுத் தரகர்கள் விற்பனைக்கு இரு வாரங்களுக்கு முன்னர் தங்களது மதிப்பீடுகளுக்காக அனுப்பினர். எஸ்டேட்டுக்கு வெளியிலான, அதியுயர் மற்றும் மத்திமம், முனைமப் பூக்களுடன், குறைவான வளர்ச்சியுடைய இலைகள், குறைவான வளர்ச்சியுடைய அரை இலைகள், குறைவாக வளரும் நுனி அல்லதுசிறிய மற்றும் தரம் குறைவானவற்றின் உப பட்டியல், தூசுகள் மற்றும் Bop1A போன்றவற்றின் மாதிரிகள் பார்வை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன.

தரகர்கள் தகவல் தொழினுட்ப பிரிவினூடாக எழுந்தமானமாக தெரிவுசெய்யப்பட்டனர். பின்னர், புலன்கள் மூலமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகள், வரவிருக்கும் ஏலத்துக்கு "வழங்கப்படும் அல்லது வழங்கப்படாது" எனும் கூட்டான முடிவுகளை எடுப்பதற்காக தெரிவுக்குழுவுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் முடிவுகள், ஏற்றுமதிப் பிரிவின் பிரதி தேயிலை ஆணையாளருக்கு தெரிவிக்கப்படும்.

ஆ) கப்பலுக்கு முன்னரான தேயிலைகள்

கப்பலுக்கு முன்னரான மாதிரிப் பரிசோதனைகளின்போது, கறுப்புத் தேயிலைக்கான சிங்க இலட்சனை, ISO 3720 மற்றும் பச்சைத் தேயிலை அளவுருக்கள் அல்லது ஏனைய மாசாக்கிகளுக்கான ISO 11287 போன்றவன பரிசோதிக்கப்படுகின்றன. கடந்த 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கப்பலுக்கு முன்னரான கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் கப்பலுக்கு முன்னரான மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இ) இறக்குமதிக்கு முன்னரான மற்றும் இறக்குமதிக்கு பின்னரான தேயிலைகள்

இறக்குமதிக்கு முன்னரான மாதிரிகள், அவற்றின் ஏற்றுமதிக்கான பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்யும் வகையில், இலங்கை தேயிலை சபையின் ஏற்றுமதி அலகினூடாக அனுப்பப்படும். மாதிரிகளுடனான ஒவ்வொரு விண்ணப்பங்களிலும், மாதிரிகளின் தோற்றம் மற்றும் தரம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கும்.இலங்கை தேயிலை சபையின் சுற்றறிக்கை இல OR/1/65 மற்றும் அதன் திருத்தங்களின் வழிகாட்டுதல்களுடன், சுவைபார்க்கும் குழுவினால், தேயிலை மாதிரிகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். கடந்த 2021 ஆம் ஆண்டில், 1,126 மாதிரிகள், இறக்குமதிக்கு முன்னரான மாதிரிகளாக TTU வினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

தனியார் விற்பனை மற்றும் குழு மதிப்பீட்டு சான்றுதழ்களிலான திருத்தம்

அ) தனியார் விற்பனைக்கான ஒப்புதல்

குழுவுடன் இணைந்த மாதிரிகள், தேயிலை சுவை மதிப்பீட்டுக்காக சுயாதீனமான தரகர்களின் அனுமதிகளுடன் விற்பனை முகவர்களினால், அனுப்பப்படுகின்றன. இச்சேவைக்காக, நிலையான கட்டணம் அறவிடப்படுவதுடன், உறுதிசெய்யும் கட்டணமாக, ரூபா. 500 (VAT + NBT வரிகள்) அறவிடப்படும். தற்போதைய நிலையில், மேற்கூறப்பட்ட திட்டங்கள், பச்சைத் தேயிலைகள், சேதனத் தேயிலைகள் மற்றும் விசேட தேயிலைகள் மற்றும் கொழும்பு ஏலத்தில் விற்கப்படாத சிறிய தர தேயிலைகளுக்கான அளவைகள் இடப்பட்டுள்ளன. கடந்த 2021 இல் மொத்தமாக, 9,655 தனியார் விற்பனைத் தொகுதிகள் பரீட்சிக்கப்பட்டு, ஒப்புதலிக்கப்பட்டுள்ளன.

ஆ) முன்னோக்கிய ஒப்பந்தங்களுக்கான ஒப்புதல்

குறிப்பிட்ட காலத்தில், கொள்வனவாளர்களின் தேவைகளுக்கேற்ப, தெரிவுசெய்யப்பட்ட சிறியளவான மதிப்பெண்களுக்கான ஒப்புதல்கள் நிறைவேற்றப்பட்டன. விற்பனையாளர், கொள்வனவாளர், தரகர் மற்றும் தேயிலை சபை ஆகியோரினால், விற்பனை ஒப்பந்தத்துக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட சேவைகள் உள்ளடங்களாக, வரிக்கான ஒப்புதல் கட்டணமாக ரூபா. 500 (VAT + NBT வரிகள்) வழங்கப்படும். நிறைவுற்ற வருடத்தில் மொத்தமாக ஒப்புதலளிக்கப்பட்ட முன்னோக்கிய ஒப்பந்த வரிகளாக 1103 அமையப்பெற்றுள்ளன.

இ) நேரடி விற்பனைகளுக்கான ஒப்புதல்

உற்பத்தியாளரும், ஏற்றுமதியாளராகவும் விளங்குபவர்கள் தமது உற்பத்திகளை நேரடியாக வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரங்கள் மேற்குறிப்பிட்ட திட்டத்தினால் வழங்கப்படுகின்றன. இதற்கு விதிவிலக்காக, பச்சைத் தேயிலை, சேதனத் தேயிலை மற்றும் விசேட தேயிலைகளை உள்ளூர் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யமுடியும். நேரடி விற்பனைகளுக்கு ஒப்புதளிக்கும் குழு வியாழக்கிழமைகளில் கூடுவதுடன், வருடத்தினைக் கவனத்திற்கொள்ளும்போது, 1,527 விற்பனை வரிசைகளுக்கும், 1.56 மில்லியன் கிலோகிராம் எடை அளவுக்கும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

சிங்க இலட்சணையைப் பதிவு செய்தல்

தேயிலையின் தரம் மற்றும் உற்பத்தி நாட்டினைப் பிரதிபலிக்கும் சிங்க இலட்சணையானது முழுமையாக, இலங்கை தேயிலை சபைக்கு சொந்தமானதாகும். தரச்சிறப்புடைய நுகர்வோர் பொதிகளில் சிங்க இலட்சணையை பொறிக்க விருப்பமுள்ளோர், இதற்காக தங்களது விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கவேண்டுமென்பதுடன், அவை சென்றடையும் இடம் மற்றும் சந்தைகளுக்கேற்ப மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படும்.

உற்பத்தித்தரங்களுக்கான, சிங்க இலட்சணையின் செல்லுபடிக்காலம் மூன்று வருடங்களாகும். சில்லறை விற்பனைப்பொதிகளிலும் சிங்க இலட்சணையைப் பொறிப்பதற்கான தனியுரிமை, இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படும். நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், புதிய உற்பத்தித்தரங்கள், புதுப்பித்தல் மற்றும் மேலதிக பொதிகளுக்காக தேயிலை ஊக்குவித்தல் பிரிவின் கண்காணிப்புடன் இணைந்து, TTU னால் 357 விண்ணப்பப்படிவங்கள் செயற்படுத்தப்பட்டன. தரத்தினை முகாமை செய்தல், இலட்சணையின் பெருமதிப்புடைய பெயரைப் பாதுகாத்தல் மற்றும் சிங்க இலட்சணையை மோசடியான முறையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் போன்ற காரணங்களுக்காக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளில், சிங்க இலட்சணைக்கான, கண்காணிப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. கப்பலுக்கு முன்னரான கண்காணிப்பு செயற்பாடுகளின் போது, சிங்க இலட்சணையைக் கொண்ட, 80 வீதத்துக்கும் அதிகமான பொதிகள் எழுந்தமானமான முறையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். மேலும், வெளிநாட்டு சந்தைகளிலுள்ள, சிங்க இலட்சணை பொறிக்கப்பட்ட பொதிகள், மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு, அறிக்கையிடுவதற்காக, இலங்கைத் தூதரகங்களின் வெளிநாட்டுப் பணியகங்கள் மற்றும் வரத்தக ஆலோசகர்களினால் முன்னோக்கி அனுப்பப்படும். உள்ளூர் சந்தைகளில், சிங்க இலட்சணையைப் பயன்படுத்தும் உற்பத்தித்தரங்கள், அவற்றின் சட்டவிரோத இலட்சணைப் பாவனை தொடர்பில் எழுந்தமான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். பிரதானமாக, தேயிலை சபையில் பதிவுசெய்யப்பட்ட புகழ்பெற்ற, நீண்டகாலமாக நீடித்திருக்கும், நியாயமான சந்தைப்பங்கினைக் கொண்ட பொதியாளர்களுக்கு, சிங்க இலட்சணையை பயன்படுத்துவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதுடன், கண்காணிப்புக்கும் உட்படுத்தப்படும்.

2.5 பகுப்பாய்வு ஆய்வுகூடம்

இலங்கை தேயிலை சபையின் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்கு நிறைவுற்ற 2022 ஆம் வருடம் மிகவும் விசேடமானதொரு வருடமாக விளங்கியது. இலங்கைத் தேயிலைத் தொழிற்துறையின் தரத்தைப் பேணுவதற்கு இரசாயன, நுண்ணுயிரியல் மற்றும் பீடைநாசினி ஆய்வுகூடங்கள் தங்களது அதியுயர் முயற்சிகளை முன்னெடுக்கின்றன.
அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அதிகபட்ச துல்லியத்தன்மை மற்றும் வினைத்திறனுடன் உள்ளக மற்றும் வெளியக தரப்பினருக்கு இறுதி முடிவுகளை வழங்குவதில் போன்றனவற்றில் தர ஆய்வு அலகுகள் பாரிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன.

சிங்க இலட்சணையை வழங்குவதற்குத் தகுதியான அளவுகோல்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் கடந்த 2022 ஆம் ஆண்டு ஊக்குவிப்புப் பிரிவுடன் இணைந்து சிங்க இலட்சணை அடையாளத்தைப் பயன்படுத்துவதற்கான நடைமுறைகளை நிறுவுவதில், இலங்கை தேயிலை சபையின் ஆய்வுகூடம் பாரிய பங்களிப்பைச் செலுத்தியது.
ஜப்பான் ஏற்றுமதி ஏற்றுமதிகளை நோக்கமாகக் கொண்டு ஆய்வுகூடத்தினால் MCPA, 2-4D, ஹெக்ஸ்சாகோணசோல் போன்றவற்றுக்கான பகுப்பாய்வு நுட்பங்களை அறிமுகப்படுத்தக்கூடியதாக அமைந்தது. இறக்குமதி செய்யப்படும் தேயிலையுடன் தொடர்புடைய பீடைநாசினிகளான, அசிபேட், இமிடாக்ளோப்ரிட், டைமெத்தோயேட், மெத்திடா-தியோன், ட்ரைஅசோபோஸ், ஃபிப்ரோனில், குய்-நால்ஃபோஸ், ப்ரோபிகோனசோல் மற்றும் ப்பெனோபோஸ் ஆகியவை மே 2022 இல் தேயிலைத்தொழிற்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்கு ஐந்து உதவிப்பணிப்பாளர் பதவிகளை (தரம், நுண்ணுயிரியல், இரசாயனம், பீடைநாசினி மற்றும் ஆய்வுகூடம்) நிறுவியது இவ்வாண்டுக்கான பெரிய வெற்றியாக அமைந்தது.
பணியாளர்களிடையே தொடர்ச்சியான அறிவைப் புதுப்பிக்கும் நோக்குடன், கடந்த 2022 நவம்பரில் இலங்கை அங்கீகார சபையினால் முன்னெடுக்கப்பட்ட வருடாந்த கண்காணிப்பு மற்றும் நோக்க நீடிப்பு (பீடைநாசினி எச்சங்கள்) தணிக்கை நடவடிக்கைகளில் ஆய்வுகூட உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டதுடன், 2022 திசம்பர் 5 இல் பிரித்தானிய தரநியம நிறுவகத்தினால் SO/TC 34/SC 8 க்காக ஒழுங்குசெய்யப்பட்ட மெய்நிகர் முழுமையான கூட்டத்திலும் பங்குபற்றினர்.

அட்டவணை 2.5.1 பகுப்பாய்வு ஆய்வுகூடத்தினால் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளின் சாரம்சம்

பரிசோதனைகளின் பெயர்	பரிசோதனைகளின் எண்ணிக்கை	
	2021	2022
இரசாயனப் பகுப்பாய்வுகள் அலகு		
தேயிலையிலுள்ள ஈரப்பதனை தீர்மானித்தல்	499	649
தேயிலையிலுள்ள மொத்த சாம்பலை தீர்மானித்தல்	339	684
தேயிலையிலுள்ள நீரில் கரையக்கூடிய மொத்த சாம்பலைத் தீர்மானித்தல்	349	673
தேயிலையிலுள்ள அமிலத்தில் கரையாத மொத்த சாம்பலைத் தீர்மானித்தல்	312	590
தேயிலையிலுள்ள நீரின் பிரித்தெடுப்பு அளவினை தீர்மானித்தல்	309	103
தேயிலையிலுள்ள நீரில் கரையக்கூடிய சாம்பலின் காரத்தன்மையை தீர்மானித்தல்	318	643
தேயிலையிலுள்ள பதனிடப்படாத நார்த்தன்மையை தீர்மானித்தல்	518	339
அடிப்படை கதிர்வீச்சு அளவீட்டுப் பரிசோதனைகள்	209	259
தரங்களை அடையாளங்காணும் பரிசோதனைகள்/ வடிகட்டி ஆய்வுகள்	33	323
நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகு		
மொத்தத் தட்டுக்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்	-	750
மதுவம் மற்றும் பூஞ்சனத்தின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்	455	757
தேயிலையிலுள்ள இறந்த மற்றும் உயிருள்ள பூச்சிகள் மற்றும் ஏனைய அசுத்தங்கள்/ பிற பொருட்களுக்கான நுணுக்குக்காட்டியல் ஆய்வுகள்	35	487
தேயிலையில் மரபணுக்களினால் மாற்றியமைக்கப்பட்ட உயிரினங்களை தீர்மானித்தல்	191	142
மல கோர்லிபோர்ம் மற்றும் எசுக்கீரிச்சியா கோலி பற்றீரியாக்களைக் (ஈகோலை) கண்டறிந்து கணக்கெடுப்பை முன்னெடுத்தல்	455	592
மொத்த கோர்லிபோர்ம் பற்றீரியாக்களைக் கண்டறிந்து, கணக்கெடுப்பை முன்னெடுத்தல்	462	598
பீடைநாசினி எச்சங்களுக்கான பகுப்பாய்வுகள் அலகு		
HPLC RI	5131	5205
LCMS/MS ஐ பயன்படுத்தி டைரோன் பகுப்பாய்வுகள்	124	157
LCMS/MS ஐ பயன்படுத்தி MCPA பகுப்பாய்வுகள்	4	175
LCMS/MS ஐ பயன்படுத்தி 2,4 D எச்ச பகுப்பாய்வுகள்	-	140
LCMS/MS ஐ பயன்படுத்தி ஹெக்ஸ்சாகோணசொல் எச்ச பகுப்பாய்வுகள்	-	269
LCMS/MS ஐ பயன்படுத்தி பல் எச்ச பரிசோதனை (அஷபேற்று, இமிடாகுளோபிரிட், திமெத்தோஏட், மெத்திடத்தியோன், ரைசோபோஸ், பிப்ரோனில், குயினல்போஸ், ப்புரோபிகோனசொல், ப்ரோபெனோபோஸ்)	-	1386
மொத்தம்	9746	14921

மூலம்: இலங்கை தேயிலை சபை

மீளாய்வு வருடத்தில், 14,921 பரிசோதனைகளுக்கான வேண்டுகோள் பகுப்பாய்வு ஆய்வுகூடத்துக்குக் கிடைக்கப்பெற்றதுடன், இதில் 1220 பரிசோதனைகள் ISO இன் அதிகுறைந்த தர நியமங்களுக்குக் கீழே அமையப்பெற்றன.

அட்டவணை 2.5.2: ISO தர நியமங்களுக்குக் குறைவான பரிசோதனைகளின் எண்ணிக்கை

பகுப்பாய்வு அலகு	மிகக்குறைந்த தர நியமங்களுக்குக் கீழே அமையப்பெற்ற மாதிரிகளின் எண்ணிக்கை
நுண்ணுயிரியல்	473
இரசாயனவியல்	608
வெல்லம்/ பீடைநாசினி எச்சங்கள்	139

மூலம்: இலங்கை தேயிலை சபை

பீடைநாசினிகள் எச்சங்கள் பகுப்பாய்வு

குறிப்பிட்ட வருடத்தில், பீடைநாசினி எச்சங்களின் பகுப்பாய்வு அலகினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த வெல்ல (5205), MCPA (175), டைரோன் (157), 2-4D(140), ஹெக்ஸாகோணசோல் (269) மற்றும் இறக்குமதி (1386) பகுப்பாய்வுகளில், 139 பகுப்பாய்வு முடிவுகள் குறித்த தரநியமங்களுக்கு குறைவாக அமையப்பெற்றன.

அட்டவணை 2.5.3 பீடைநாசினிகள் எச்சங்கள் பகுப்பாய்வு அலகின் செயல்திறன்

பீடைநாசினி பகுப்பாய்வின் வகை	மிகக்குறைவான தர நியமங்களுக்குக் குறைவானவை
பிரக்டோஸ்	21
குளுக்கோஸ்	22
சுக்குரோஸ்	54
டைரோன்	1
MCPA	1
ஹெக்ஸாகோணசோல்	40

மூலம்: இலங்கை தேயிலை சபை

நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகு

நிறைவுற்ற வருடத்தில் 3184 நுண்ணுயிரியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில், நுண்ணுயிரியல் பரிசோதனை முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்குக் கீழாக அல்லது நுகர்வுக்கு உகந்தவையாக அமையப்பெறவில்லை. இம் மாதிரிகள் உள்ளக சான்றுதழ் சேவையினூடாகப் பெறப்பட்டவையாகும்.

அட்டவணை 2.5.4 நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் அலகின் செயல்திறன்

நுண்ணுயிரியல் ஆய்வின் வகை	மிகக்குறைவான தர நியமங்கள்/ வழிகாட்டல்களுக்குக் குறைவானவை
மொத்த தட்டுக்களின் எண்ணிக்கை	133
மதுவம் மற்றும் பூஞ்சனம்	245
கோர்லிபோர்ம்	89

மூலம்: இலங்கை தேயிலை சபை

இரசாயன பகுப்பாய்வு அலகு

இரசாயனப் பகுப்பாய்வு அலகினால் 4263 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 608 மாதிரிகள் தேயிலையின் அதிகுறைந்த தரநியமத்துக்கு குறைவாகக் காணப்பட்டதுடன், இம்மாதிரிகள் உள்ளக கண்காணிப்பு சேவையினூடாக பெறப்பட்டவையாகும்.

அட்டவணை 2.5.5: இரசாயன பகுப்பாய்வு அலகின் செயற்திறன்

இரசாயனப் பகுப்பாய்வு வகை	மிகக்குறைவான தர நியமங்கள்/ வழிகாட்டல்களுக்குக் குறைவானவை
மசகு நார் உள்ளடக்கம்	127
காரத்தின் உள்ளடக்கம்	7
ஈரப்பதன்	418
அமுலத்தில் கரையாத சாம்பல்	2
மொத்த சாம்பல்	13

மூலம்: இலங்கை தேயிலை சபை

தர ஆய்வு அலகு

இவ் அலகில் ஆய்வுகூட மாதிரிகளைப் பெறுதல், பதிவு செய்தல், உரிய பகுப்பாய்வு அலகுக்கு பரிசோதனைக்காக நியமித்தல், உள்ளக கண்காணிப்பு மற்றும் வெளியக சான்றுதழ் சேவையினூடாக, ISO/IEC 17025 எனும் ஆய்வுகூட தரநியமத்தின் படி ஆவணக்கட்டுப்பாட்டு செயன்முறையினைப் பேணுவதனுடன், பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த 2022ஆம் ஆண்டில், தேயிலை ஆணையாளர் அல்லது பிரதி தேயிலை ஆணையாளரினால் மீள்-மாதிரித் தேவைக்காக அனுப்பப்பட்ட 14 பகுப்பாய்வுக்கான உதவிகள் இப்பிரிவினால் வழங்கப்பட்டன.

2.6 நிர்வாகப் பிரிவு

மனித வள முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகள் அனைத்தையும் உருவாக்குதல், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல், சட்ட நடவடிக்கைகள், தகவல் தொழிநுட்ப சேவைகளை அமுல்படுத்தல் மற்றும் பராமரித்தல், சபையின் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும்


மதிப்பிடுதல் செயற்பாடுகளை ஒருங்கமைத்தல் மற்றும் வழிநடத்தல், புள்ளிவிபரங்களை வெளிப்படுத்தல், இலங்கை தேயிலை சபையின் வாசிகசாலையினை முகாமை செய்தல் மற்றும் பராமரித்தல், கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் சபையின் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து செயற்பாடுகளுக்குப் பொறுப்பாகத் தொழிற்படுகின்றது.

அட்டவணை 2.6.1: இலங்கை தேயிலை சபையின் தற்போதைய பணியாளர்களின்

வகை	ஊழியர்களின் எண்ணிக்கை		மொத்தம்
	ஆண்	பெண்	
சிரேஷ்ட நிலை	26	15	41(16.7%)
மூன்றாம் நிலை	15	04	19(7.8%)
இரண்டாம் நிலை	44	81	125(51%)
முதற்படி நிலை	56	04	60(24.5 %)
மொத்தம்	141(57.5%)	104 (42.5%)	245(100%)

மூலம்: இலங்கை தேயிலை சபை

கடந்த ஆண்டில் இடைவிலகிய 04 ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற 11 ஊழியர்களுடன் மொத்தமாக 15 ஊழியர்கள் பணியிலிருந்து விலகியுள்ளனர். சிரேஷ்ட மட்டத்திலிருந்து முதல்மட்டம் வரை பல்வேறு திறன்சார் பயிற்சித் திட்டங்கள் கோவிட் 19வழிகாட்டல்களுடன் நடாத்தப்பட்டுள்ளன. நாடளாவிய மற்றும் சர்வதேச ரீதியாக நிலவிய கோவிட் நோய்த்தொற்று காரணமாக, நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சி நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தமுடியாத நிலை ஏற்பட்டது.



அட்டவணை 2.6.2: ஊழியர்களின் வகைகளுக்கேற்ப உள்ளூர் பயிற்சித் திட்டங்கள்

வகை	பயிற்சிபெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை
சிரேஷ்ட நிலை	08
மூன்றாம் நிலை	04
இரண்டாம் நிலை	07
முதற்படி நிலை	00
மொத்தம்	19

மூலம்: இலங்கை தேயிலை சபை

CSR செயற்பாடுகள்

பசறை, மீதும்பிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவூட்டும் இயந்திரம் நன்கொடையாக வழங்கிவைக்கப்பட்டது

நலன்புரி செயற்பாடுகள்

இலங்கை தேயிலை சபை ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கிடையிலான ஒன்றுகூடல் நிகழ்வு, பிலியந்தலையிலுள்ள பொல்துவ லேக் விடுதியில் திசம்பர் 10 ஆம் திகதி நடைபெற்றது.









2.7 உள்ளக தணிக்கைப் பிரிவு

பங்குதாரர்களான, இலங்கை அரசு, தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தேயிலைப்பிரிவுத் தொழிலாளர்கள் மற்றும் இலங்கைப் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்திசெய்யும் வகையில், ஒதுக்கப்பட்ட நிதியியல், நிர்வாக மற்றும் மனித வளங்களை வினைத்திறனான முறையில் பயன்படுத்துவதை தணிக்கை செய்யும் நோக்குடன், உள்ளக தணிக்கைப்பிரிவு தொழிற்படுகின்றது.

இடர் மேலாண்மை, கட்டுப்பாடு மற்றும் நிர்வாக செயல்முறையின் செயற்திறனை மதிப்பிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் முறையானதொரு ஒழுக்கமான அணுகுமுறையைக் கொண்டுவருவதன் மூலமாக, தேயிலை சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தணிக்கைப்பிரிவானது உதவியாக அமைகின்றது. கடந்த காலப்பகுதியில் நிலவிய கோவிட் நோய்த்தொற்றுக் காரணமாக, மீளாய்வு வருடத்தில் இருமுறை தணிக்கைக்குழுவை சந்தித்ததுடன், தேவைகளின்

அடிப்படையிலான கோரிக்கைகளின் நிமிர்த்தம் பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் அமர்வுகளில் பங்கேற்றனர். கூட்டரிக்கைகளுடன், பணிப்பாளர் வாரியத்துக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன், பொருத்தமான திருத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது தொடர்பிலும் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

2.8 தகவல் தொழில்நுட்ப அலகு

கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டு இலங்கை தேயிலை சபைக்குரிய டொமைனின் மத்திமமான திருப்பத்தினை நோக்கிப் பயணிப்பதைக் காட்டுகின்றது. நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக, இலங்கை தேயிலை சபையினால் தகவல் தொழில்நுட்பத்தில் புதிய அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் அமையப்பெறவில்லை. ஆனால், தேயிலை பெறுமதித்தொடர் கட்டமைப்பு அபிவிருத்தியின் 2வது மீள்செய்கையை நிறைவுசெய்யக்கூடியதாக அமைந்திருந்தது. அத்துடன், நாங்கள் நேரடியாக விண்ணப்பங்களைப் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியமையினால், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பயனர்களும் தங்களது தரவுகளை எந்தவிதமான தடைகளுமின்றி பதிவேற்ற முடியும். பிராந்திய அலுவலகங்கள் உள்ளடங்களாக, இலங்கை தேயிலை சபையின் அனைத்து திணைக்களங்களுக்கும் சரக்கு கணக்கெடுப்புக் கட்டமைப்பினை விநியோகித்துள்ளோம். இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் காகிதத்தின் பாவனையைக் குறைத்து, இலங்கை தேயிலை சபையின் வினைத்திறனை அதிகரிக்க உதவியாக அமையும். இது காகிதமற்ற சூழலுக்கு வித்திடுவதற்கான மற்றொரு படியாக அமையும்.

இலங்கை தேயிலை சபையானது, கூகுள் தளத்தில் தனக்கான அனுமதிப்பத்திரத்தினை இன்னும் 3 ஆண்டுகளுக்கு புதுப்பித்துள்ளதுடன், வினைத்திறனான தொடர்பாடல் மற்றும் தீர்மானமெடுக்கும் செயல்முறைகளை சுலபமாக்குவதன் மூலமாக வாழ்வினை மேலும் இலகுவாக்குகின்றது. மேலும், ஊக்குவித்தல் அலகினால் "சர்வதேசப் பிரச்சாரத்தின்" கீழ் ஆரம்பிக்கப்பட்ட பெரும்பாலான டிஜிட்டல் ஊக்குவித்தல் பிரச்சாரங்களுக்கும் தகவல் தொழில்நுட்பப்பிரிவு அளப்பரிய உதவிகளை வழங்குகின்றது.

3. தொழிற்துறையின் சுயவிபரம்

சிலோன் தேயிலைத் தொழிற்துறையில் தற்போதுள்ள குறைபாடுகளை சீரமைப்பதற்கு உரங்கள் தொடர்பான மிகவும் தாராளமான கொள்கையை செயல்படுத்த முடியுமெனும் புதிய நேரான நம்பிக்கையுடன் 2022 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. இலங்கையில் தேயிலைத் தொழிற்துறையினர் பல தடைகளை எதிர்கொண்டமையே 2022 இல் தேயிலையின் விலையில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு வழிவகுத்தது. நிறைவுற்ற 2022 இல் பதிவுசெய்யப்பட்ட வருடாந்த தேயிலை உற்பத்தி 251.5 மில்லியன் கிலோகிராம்களாக (தற்காலிகமானது) அமைந்ததுடன், 2021 இல் இதே காலப்பகுதியில் 299.49 மில்லியன் கிலோகிராம்களுடன் ஒப்பிடுகையில் 48 மில்லியன் கிலோகிராம் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. மேலும், 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதி வருமானம் 411 பில்லியன் ரூபாவாக அமைந்தடன், 2021 இல் இதே காலப்பகுதியில் 263 பில்லியன் ரூபாயாகப் பதிவாகியது. மேலும், 2021 இல் பதிவாகிய 1.32 பில்லியன் அமெரிக்க டொலர்களிலான (USD 1,324.4 மில்லியன்) ஏற்றுமதி வருமானமானது, நிறைவுற்ற 2022 இல், 1.25 பில்லியன்களாக (USD 1,258.7 மில்லியன்) 65.6 மில்லியன் அமெரிக்க டொலர்களினால் வீழ்ச்சியடைந்தது. குறைந்த வருமானமானது குறைவான உற்பத்தி புள்ளிவிவரங்களால் விபரிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ரூபாய் மதிப்பில் ஏற்றுமதி வருமனமானது 56% குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுவதுடன், டொலர் மதிப்பில் 5% வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

மேலும், கடந்த 2021 இல் கிலோகிராமுக்கு சராசரியாக ரூபா 921 ஆக விளங்கிய FOB, நிறைவுற்ற 2022 இல், 1,643 ரூபாயாக அதிகரித்திருப்பது குறிப்பிடத்த விடயமாகும்.

மேலும், மீளாய்வுக்காலத்தில் இது ஒரு கிலோவிற்கு 5.00 அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியது.ஏற்கனவே, பதிவுசெய்யப்பட்ட புள்ளிவிபரங்களின்படி, நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், 250 மில்லியன் கிலோகிராம்களாக மிகக் குறைந்த அளவிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. சிலோன் தேயிலையின் விசேட அங்கமாக விளங்கும், பழமைவாத தேயிலை வகையானது நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில் 227.1 மில்லியன் கிலோவாக பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் இது 270.7 மில்லியன் கிலோகிராம்களாகப் பதிவாகியது. எவ்வாறாயினும், 2021 ஆம் வருடத்துடன் ஒப்பிகையில் 16% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த CTC உற்பத்தியானது 14% ஆல் குறைவைக் காட்டியது, அதே நேரத்தில் மதிப்பாய்வு ஆண்டில் 23 மில்லியன் கிலோகிராம்களாகப் பதிவாகியது. பச்சை தேயிலை உற்பத்தியானது 30% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், நிறைவுற்ற 2022 இல் 1.8 மில்லியன் கிலோகிராம்களாகவும் மற்றும் 2021 இல் 2.5 மில்லியன் கிலோகிராம்களாகவும் உற்பத்தியாகியது. ஒட்டுமொத்த கொழும்பு தேயிலை ஏலத்தின் சராசரி விலைகள், கடந்த வருடத்தில் கிலோகிராமுக்கு 3.10 அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டதுடன், இது நிறைவுற்ற வருடத்தில் கிலோகிராமுக்கு 3.80 அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, கொழும்பு தேயிலை ஏலத்தின் விலைகள், 2021 இல் ரூபா 615.44 லிருந்து, 2022 இல் ரூபா 1,234.24 ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொது மற்றும் தனியார் துறைகளில் பங்குதாரர்களின் முன்முயற்சிகள் காரணமாக சந்தை பன்முகப்படுத்தலினால்; அதிகளவான ஏற்றுமதிச் சந்தைகளை திறக்க பங்களித்தது. மீளாய்வுக் காலத்தின் தேயிலைச் சந்தையில், சிலோன் தேயிலைக்கான முன்னணி ஏற்றுமதி இடமாக மில்லியன் 43.2 கிலோகிராம்களுடன் ஈராக் திகழ்வதுடன், இது மொத்த ஏற்றுமதியில் 17% ஆகும். சிலோன் தேயிலைக்கான ஏனைய முக்கியமான ஏற்றுமதி இடங்களாக, ரஷ்யா (24.7 மில். கிலோ), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (22.5 மில்.

கிலோ), துருக்கி (15.6 மில். கிலோ), ஈரான் (13.0 மில். கிலோ), அஜர்பைஜான் (12.0 மில். கிலோ), லிபியா (11.2 மில். கிலோ), சீனா (11.1 மில். கிலோ), ஜெர்மனி (6.57 மில். கிலோ) மற்றும் சிலி (6.51 மில். கிலோ) ஆகிய நாடுகள் விளங்குகின்றன.

இலங்கை அரசாங்கத்தால் இரசாயன உரங்கள் இறக்குமதி செய்வது தடைசெய்யப்பட்டதை அடுத்து, குறிப்பாக தேயிலை வளர்ப்பாளர்கள் மற்றும் பாரிய தோட்டத்தொழிற்துறையினர், சேதன உரங்களை மாத்திரமே பயன்படுத்தவேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் விளைவாக தேயிலை உற்பத்தி மட்டமானது, நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டு டிசம்பர் வரையான காலப்பகுதியில் 16% ஆல் வீழ்ச்சியடைந்தது.

தேவையற்ற, மிகவும் பாதகமான வானிலை நிலைக்குள்ளானது என்பதில் எந்தவிதமான உண்மையுமில்லை. இருப்பினும், மிகவும் பழமையான தேயிலைப் புதர்கள் மற்றும் குறைவான உற்பத்தி அளவுகள் எதிர்மறையானதாகவே அமைகின்றன. எவ்வாறாயினும், தாராளமான உரக் கொள்கையை அனுமதிக்கும் அரசின் முடிவுகளுடன், நாட்டில் தேயிலை உற்பத்தியில் படிப்படியான முன்னேற்றம் ஏற்படுமெனும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தேயிலைக் காணிகளை பகிர்ந்தளித்தல்

இலங்கையில், தற்போதைய நிலையில் 267,186 ஹெக்டயர் பரப்புக்களில் தேயிலைப்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படுகின்றது. அவற்றின் முகாமைத்துவ அம்சங்களின் அடிப்படியில், தனியார் பிரிவுக்கு 60% மும், அரசுக்கு 40% மாக அமையப்பெறுகின்றன. தேயிலைப் பயிர்செய் நடவடிக்கைகள், அவற்றுக்குரிய பொருத்தமான ஈர வலய காலநிலை நிலைமைகள் காரணமாக, நாட்டின் மிகக் குறைந்தலாவான மாவட்டங்களில் மாத்திரமே பயிரிடப்படுகின்றது.


தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2022 இல், நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தி 251.5 மில்லியன் கிலோகிராம்களாகப் பதியப்பட்டது. இது கடந்த ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 48 மில்லியன் கிலோகிராம்களினால் 16% மான வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

இலங்கை தேயிலைகள் அவை வளரும் மற்றும் உற்பத்தியாகும் உயரங்கள்களின் அடிப்படையில் மூன்று குழுக்களாக வகைபிரிக்கப்பட்டுள்ளன. தாழ்நாட்டு தேயிலைகள் சராசரி கடல்

மட்டத்திலிருந்து 600 மீற்றர் வரையான உயரங்களில் உற்பத்தியாவதுடன், கருமையான தோற்றம், வலுவான கோப்பை நிறம் மற்றும் சுவையைக் கொண்டுள்ளதுடன், மொத்த தேசிய உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கினைக் 2022 இல், 62%) கொண்டுள்ளன.

வரைபு 3.1: உயரத்தின் அடிப்படையிலான உற்பத்தி




மூலம்: இலங்கை தேயிலை சபை

மேலும், மேல்நாட்டுப் பகுதிகளில் 1200 மீற்றருக்கும் மேலான உயரங்களில் வளர்க்கப்படும் தேயிலைகள், மேற்தரத் தேயிலைகளாக கருதப்படுவதுடன், வாசனையுடனான தனிச்சிறப்புமிக்க உயர்தரத்தினைக் கொண்டுள்ளன. நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மேல் மற்றும் மத்திம உயரங்களிலான தேயிலைகள் தேசிய உற்பத்தியில் முறையே, 22% மற்றும் 16% பங்குகளைக் கொண்டுள்ளன. அத்துடன், தாழ் மட்டத்திலான தேயிலைகள், தேசிய உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான பங்களிப்பைக் (62%) கொண்டுள்ளன.

மாதாந்த தேயிலை உற்பத்தி உற்பத்தி

வருடம் முழுவதுமாக, தாழ்நிலப்பகுதிகளுக்குரிய வலயத்தில் வளரும் தேயிலை வகைகளே தேசிய தேயிலை உற்பத்தியில் பாரிய பங்களிப்பினைச் செலுத்துகின்றன. நிறைவுற்ற 2022 ஆம் வருடத்தில், அதியுயர் தேயிலை உற்பத்தியான 26 மில்லியன் கிலோகிராம் மே மாதத்தில் பதியப்பட்டதுடன், அதிகுறைந்த தேயிலை உற்பத்தியான 18 மில்லியன் கிலோகிராம் பெப்ரவரி மாதத்தில் பதிவானது.

வரைபு 3.2 : உயரங்களின் அடிப்படையில் மாதாந்த தேயிலை உற்பத்தி



மூலம்: இலங்கை தேயிலை சபை

மாவட்டங்களின் அடிப்படையிலான ஆய்வுகள்

மீளாய்வு வருடத்தில், உயர்வான தேயிலை வளர்ப்புப்பகுதிகளில், அதியுயர் உற்பத்திகள் நுவரெலியா மாவட்டத்திலும், அதனைத் தொடர்ந்து பதுளை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் பதிவாகின. தாழ்வான வளர்ப்புப் பகுதிகளில், அதியுயர் தேயிலை உற்பத்திகள் இரத்தினபுரி மாவட்டத்திலும், அதனையடுத்து காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் பதிவாகின. இவை இரண்டு மாவட்டங்களும், தேசிய தேயிலை உற்பத்தியில் முறையே, 16% மற்றும் 21% பங்குகளை வகிக்கின்றன. மூன்று தேயிலை வளர்ப்பு மட்டங்களையும் கவனத்திற்கொள்கையில், அதியுயர் தேயிலை உற்பத்தி இரத்தினபுரி மாவட்டத்திலும், அதிகுறைந்த தேயிலை உற்பத்தி மொனராகலை மாவட்டத்திலும் பாதிவாகின.

அட்டவணை 3.1: மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்தி (கிலோகிராம்களில்)

நிர்வாக மாவட்டம்	உயர்வு	நடுத்தரம்	தாழ்மட்டம்	மொத்தம்
பதுளை	15,417,721	10,019,355	-	25,437,076
கொழும்பு	-	-	1,128,566	1,128,566
காலி	-	-	35,648,676	35,648,676
அம்பாந்தோட்ட	-	-	188,839	188,839
களுத்துறை	-	-	15,477,248	15,477,248
கண்டி	764,403	16,971,989	10,487,280	28,223,671
கேகாலை	-	283,448	8,713,158	8,996,606
மாத்தளை	-	1,437,263	401,774	1,839,037
மாத்தறை	-	45,944	29,897,082	29,943,026
மொனராகலை	-	22	-	22
நுவரேலியா	40,138,649	9,550,391	799,374	50,488,414
இரத்தினபுரி	-	1,875,559	52,252,726	54,128,285
மொத்தம்	**56,320,773**	**40,183,970**	**154,994,723**	**251,499,466**

மூலம்: இலங்கை தேயிலை சபை

விவசாய காலநிலை மாவட்டங்களின் அடிப்படையிலான ஆய்வுகள்

அதியுயர் விவசாய காலநிலை மாவட்டங்களின் உற்பத்திகளில், 40 மில்லியன் கிலோகிராம்களுடன் இரத்தினபுரி மாவட்டம் முதலிடத்திலும், இரண்டாவது அதியுயர் உற்பத்தியான 36 மில்லியன் கிலோகிராம்களுடன் காலி மாவட்டம் இரண்டாமிடத்திலும் திகழ்கின்றன. நிறைவுற்ற ஆண்டில் தாழ்நிலப்பகுதிகளில் 141.6 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்திகள் பதிவானதுடன், இது கடந்த 2021 ஆம் ஆண்டிலான உற்பத்தியை விட 27 மில்லியன் கிலோகிராம் (16%) குறைவானதாகும்.

அட்டவணை 3.2: கமநல காலநிலை மாவட்ட மட்டத்திலான தேயிலை உற்பத்தி

கமநல காலநிலை மாவட்டம்	2022 (Kg.)	*2021(Kg.)	மாற்றம்(Kg.)	%
நுவரேலியா	3,100,723	3,587,636	(486,913)	(14)
மேல் மாகாணம்				
ரம்போடை	1,769,419	1,957,781	(188,362)	(10)
பூண்டுலோயா	3,677,365	3,685,134	(7,769)	(0)
அக்கரப்பத்தனை	4,204,143	5,069,113	(864,971)	(17)
நானுஓயா/தலவாக்கலை/ லிந்துலை	7,346,084	8,514,839	(1,168,755)	(14)
பட்டன/ கொட்டக்கலை	2,848,637	4,187,182	(1,338,545)	(32)
ஹற்றன்/ டிக்கோயா	6,317,777	8,152,096	(1,834,319)	(23)
பொஹோவந்தலாவை	4,627,349	5,588,128	(960,779)	(17)
அப்கொட்/ மஸ்கெலிய	4,211,417	5,488,000	(1,276,583)	(23)
மொத்த மேல் மாகாணம்	35,002,189	42,642,272	(7,640,083)	(18)
நடுத்தரம்				
வட்டவளை/கினிகத்/ நோர்ட்டன் பிரிஜ்	1,196,123	1,817,763	(621,640)	(34)
புசல்லாவ/ ஹேவாஹெட்ட	4,877,643	5,905,005	(1,027,362)	(17)
கொத்மலை	712,872	940,778	(227,906)	(24)
கம்பளை/ நாவலப்பிட்டி/ தொலஸ்பாஹே	17,728,354	19,650,628	(1,922,274)	(10)
நிலம்பே/ஹந்தானை/ கலஹா	1,267,816	1,441,313	(173,497)	(12)
கடுகண்ணாவை	4,551,687	5,462,630	(910,943)	(17)
மதுல்கலே/ நக்கல்ஸ்/ரனாகல	2,645,825	3,121,792	(475,967)	(15)

ஹுன்னஸ்கிரிய/ மாத்தளை/ யக்தேஸ்ச	1,262,310	1,522,678	(260,368)	(17)
பலாங்கொடை/ இறக்குவானை	7,090,552	8,846,827	(1,756,274)	(20)
மொத்த நடுத்தரம்	**41,333,181**	**48,709,412**	**(7,376,232)**	**(15)**
உடபுசல்லாவை				
உடபுசல்லாவை/ கல்கிரநோய்	3,614,356	4,060,550	(446,194)	(11)
மத்துரட்ட	1,729,244	1,373,647	355,597	26
மொத்த உடபுசல்லாவை	**5,343,600**	**5,434,197**	**(90,597)**	**(2)**
ஊவா				
கொஸ்லந்த/ ஹல்தமுள்ள	600,444	602,593	(2,149)	(0)
ஹப்புத்தளை	3,681,191	4,130,515	(449,324)	(11)
பண்டாரவளை/ பூணகல்ல	2,750,843	3,289,655	(538,812)	(16)
மல்வத்தை/ வெலிமட	2,510,844	3,378,505	(867,661)	(26)
தெமோதர/ காலிஎல/ பதுளை	8,960,319	9,996,299	(1,035,981)	(10)
எல்லே/ நமுனுகுல	1,148,791	1,904,508	(755,717)	(40)
பசறை/ லுணுகல	2,877,873	3,663,468	(785,595)	(21)
மதுள்சிமா	2,621,201	3,486,843	(865,642)	(25)
மொத்த ஊவா	**25,151,505**	**30,452,384**	**(5,300,879)**	**(17)**
தாழ் வளர்பகுதிகள்				
தெனியாய	11,637,057	13,691,965	(2,054,908)	(15)
காலி	36,104,671	42,869,465	(6,764,794)	(16)
களுத்துறை	15,989,223	18,953,545	(2,964,322)	(16)
கேகாலை	5,401,157	7,071,361	(1,670,204)	(24)
களனிப் பள்ளத்தாக்கு	7,453,456	8,231,949	(778,493)	(9)
கண்டி/ மாத்தளை/ குருநாகல்	2,939,898	3,889,004	(949,106)	(24)
மாத்தறை	12,743,079	14,157,203	(1,414,124)	10)
மொறவக்க	5,186,075	6,292,262	(1,106,187)	(18)
இரத்தினபுரி	40,002,281	48,328,640	(8,326,359)	(17)
பலாங்கொடை	4,111,372	5,177,128	(1,065,756)	(21)
மொத்த தாழ்வளர் நிலங்கள்	141,568,268	168,662,520	(27,094,253)	(16)
மொத்தம்	**251,499,466**	**299,488,422**	**(47,988,955)**	**(16)**

*மீளமைக்கப்பட்டது: மூலம்: இலங்கை தேயிலை சபை

பச்சை இலை சேகரிப்பு முறையின் அடிப்படையிலான உற்பத்திப்பகுப்பாய்வு

தேயிலைத் தொழிற்சாலைகள், தொழிற்பாட்டுக்குத் தேவையான தேயிலைக் கொழுந்துகளை, தமக்குரிய தேயிலைத் தோட்டங்கள் அல்லது முகவர்களினூடாக பெற்றுக்கொள்கின்றனர். தயாரிக்கப்பட்ட தேயிலை அளவுகளை, தொழிற்சாலைகளில் பயன்படுத்தும் 4.65 எனும் நிலையான விகிதத்தினால் பெருக்குவதனூடாக பச்சை தேயிலை இலைகளின் அளவுகள் கிடைக்கப்பெறுகின்றன.

அட்டவணை 3.3: மாவட்ட மட்டத்திலான பச்சைத் தேயிலை உற்பத்திகள் (கிலோகிராம்களில்)

நிர்வாக மாவட்டம்	உயர்வு	நடுத்தரம்	தாழ்மட்டம்	மொத்தம்
பதுளை	71,692,403	46,590,003	-	118,282,406
கொழும்பு	-	-	5,247,832	5,247,832
காலி	-	-	165,766,345	165,766,345
அம்பாந்தோட்ட	-	-	878,101	878,101
களுத்துறை	-	-	71,969,205	71,969,205
கண்டி	3,554,474	78,919,747	48,765,850	131,240,071
கேகாலை	-	1,318,033	40,516,184	41,834,217
மாத்தளை	-	6,683,271	1,868,249	8,551,520
மாத்தறை	-	213,640	139,021,431	139,235,070
மொனராகலை	-	102	-	102
நுவரேலியா	186,644,718	44,409,318	3,717,089	234,771,125
இரத்தினபுரி	-	8,721,347	242,975,178	251,696,525
மொத்தம்	**261,891,595**	**186,855,461**	**720,725,464**	**1,169,472,519**

மூலம்: இலங்கை தேயிலை சபை

செயலாக்க முறைமையின் அடிப்படையிலான உற்பத்தி ஆய்வுகள்

கறுப்பு மற்றும் பச்சைத்தேயிலை உற்பத்தி

நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், புராதன தேயிலை உற்பத்திகள் மற்றும் CTC தேயிலை உற்பத்திகள் முறையே, 16% மற்றும் 14% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. மீளாய்வு வருடத்தில், ஒட்டுமொத்த கறுப்புத்தேயிலையின் உற்பத்தியானது 47 மில்லியன் கிலோகிராம்களினால் (16%) அதிகரித்துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், பச்சைத் தேயிலை உற்பத்தியானது 30 % ஆல் குறைவடைந்துள்ளது..

உடனடித் தேயிலை மற்றும் உயிரியல் தேயிலை உற்பத்தி


கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டு உடனடித் தேயிலையின் உற்பத்தியானது 834,971 கிலோகிராம்களினால் அதிரித்துள்ளதுடன், உயிரியல் தேயிலை உற்பத்தியானது 211 மெற்றிக்தொன்களினால் வீழ்ச்சியடைந்துள்ளது. மீளாய்வு வருடத்தில் 977 மெற்றிக்தொன் உயிரியல் தேயிலை உற்பத்தியானதுடன், இது கடந்த 2021 இல் 1,188 மெற்றிக்தொன்களாக அமைந்திருந்தது. மேலும், மீளாய்வு வருடத்தில் 4,473,784 கிலோகிராம் உடனடித்தேயிலைகள் உற்பத்தியாகியுள்ளதாகப் பதிவாகியுள்ளது.

உடன் தயாரிப்புத் தேயிலை உற்பத்திக்கான செலவுகள்

உற்பத்தித்திறன் மற்றும் உற்பத்திக்கான செலவு (COP) ஆகியன ஒன்றுடனொன்று தொடர்புபட்டுள்ளதுடன், உற்பத்திச்செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டே செல்லும் நிலையானது, பெருந்தோட்டத் தொழிற்துறைக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. தேயிலை உற்பத்தி அமைப்புக்கு அதிகளவான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதனால், தொழிலாளர் உற்பத்தித்திறன் COP உடன் நெருங்கிங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளது. பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளில், இலங்கை அதியுயர் COP இனைக் கொண்டுள்ளது. இது, சர்வதேச அரங்கில், நாட்டின் போட்டித்திறனில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

கடந்த சில தசாப்தங்களாக, உருவாக்கப்பட்ட தேயிலையின், கிலோகிராமுக்கான உற்பத்திச்செலவு மிக வெகுவாக அதிகரித்தது. தொழிலாளர்களுக்கான செலவுகள் மற்றும் உள்ளீடுகளுக்கான அதிக செலவீனங்கள் ஆகியன உற்பத்திச்செலவுகளில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. 2021/22 க்கான கணக்கெடுப்புகள் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய, கிலோகிரமுக்கான உற்பத்திச்செலவு ரூபா 638.99 ஆக அமைந்ததுடன், இது கடந்த 2020/21 க்கு எதிராக 3 % மான அதிகரிப்பைக் காட்டுகின்றது.

வரைபு 3.3: தயாரிக்கப்பட்ட தேயிலை கிலோவொன்றுக்கான மொத்த செலவுகள்



மூலம்: கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
*2021/22 க்காக் கணிக்கப்பட்டது.

தேயிலை விற்பனைகள்

தேயிலை ஏலத்தில் பதியப்பட்ட தேறிய விற்பனை சராசரிகளை ஒப்பிடுகையில், 2022 இல் வருடாந்த சராசரியாக கிலோகிராமுக்கு 1,234.24 ரூபாவாக அமைந்ததுடன் (குறைந்தது ரூபா 705/kg அதியுயர் ரூபா 1,599 /kg) முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 615.44 ஆல் மிக அதிகளவான அதிகரிப்பைக் காட்டுகின்றது. தாழ்வாக தேயிலை வளரும் பகுதிகளில் அதியுயர் விற்பனை சராசரியானது கிலோகிராமுக்கு ரூபா 1,340 ஆகப் பதிவாகியது. நிறைவுற்ற 2022 இல் வருடாந்த தேயிலை விற்பனையின் அளவு 249 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்ததுடன், இது 2021 இன் போதான மீளாய்வின்போது, 296 மில்லியன் கிலோகிராம்களாக, அரச, தனியார் மற்றும் நேரடி விற்பனைகள் உள்ளடங்களாக 47 மில்லியன் கிலோகிராம்களினால் (16%) வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த 2021, ஜனவரியுடன் ஒப்பிடுகையில், 2022 ஜனவரியில், தேயிலை விற்பனை சராசரி விலை கிலோகிராமுக்கு ரூபா 705ஆக அமைந்ததுடன் ரூபா 60.00 விலை அதிகரிப்பைக் காட்டுகின்றது. முதல் மூன்று மாதங்களில் விற்பனை சராசரிகள் ரூபா 700 மற்றும் ரூபா 850 க்கு இடைப்பட்டதாக அமைந்ததுடன், எஞ்சிய மாதங்களில் மாதமொன்றுக்கு ரூபா 1,200 ஐ விட அதிகமாகப் பதிவாகியது.

விற்பனைகளின் முறை

தேயிலைத் தொழிற்சாலைகளில் பிரதானமான விற்பனை முறையாக பொதுமக்களுக்கான ஏலங்கள் திகழ்கின்றன. நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், கொழும்பு தேயிலை ஏலத்தினூடாக 241 மில்லியன் கிலோகிராம் தேயிலை விற்பனையாகியது. இதில், தனியார் விற்பனைகளினூடாக, 6 மில்லியன் கிலோகிராம் தேயிலையும், நேரடி விற்பனைகளினூடாக மிகுதியான ஏறக்குறைய 2 மில்லியன் கிலோகிராம் தேயிலைகளும் விற்பனையாகின. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 100% மான விலை அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

கொழும்புத் தேயிலை ஏலங்கள்

கொழும்பு தேயிலை ஏலமானது, கொழும்பு தேயிலை வர்த்தக சங்கத்தின் கீழ், சிலோன் வர்த்தக அமைப்பினூடாக நடாத்தப்படுகின்றது. இதனடிப்படையில், 2022 இல் 50 ஏலங்கள் நடாத்தப்பட்டன. நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், கொழும்பு தேயிலை ஏலத்தின், பொது ஏலத்தில் 46 மில்லியன் கிலோகிராம் (16 %) வீழ்ச்சியைக் காட்டியதுடன், கிலோகிராமுக்கான சராசரி விலையாக ரூபா 626 பதிவாகியது.

உயரங்களின் அடிப்படையில் விற்பனைகள்

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், அனைத்து மூன்று உயர மட்டங்களிலும் விற்பனை அளவுகள் கீழ்நோக்கிய வீழ்ச்சியைக் காட்டுவதுடன், அனைத்து விற்பனைகளும் 16 % ஆல் குறைவடைந்துள்ளன. அனைத்து மூன்று உயர மட்டங்களுக்குமான கிலோகிராமுக்கான தற்போதைய விலை குறிப்பிடத்தக்களவு சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. எவ்வாறாயினும், ஒட்டுமொத்தமான தேயிலை விற்பனை விலைகள், ரூபா 618.00 ஆகப் பதியப்பட்டுள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 100% மான அதிகரிப்பாகும்.

வரைபு 3.4: உயரங்களின் அடிப்படையில் தேயிலை விற்பனைகள்.

உயரம்	அளவு (மில்லியன் கி.கிராம்)			
	2022	2021	மாற்றம்	%
அதியுயர்	53.72	63.52	(9.80)	(15.43)
நடுத்தரம்	42.08	52.34	(10.26)	(19.60)
தாழ்நிலை	152.84	179.94	(27.10)	(15.06)
மொத்த விற்பனைகள்	248.64	295.79	(47.15)	(15.94)

உயரம்	அலகு விலை (ரூபா/கி.கிராம்)			
	2022	2021	மாற்றம்	%
அதியுயர்	1,093.10	587.13	505.97	86.18
நடுத்தரம்	1,030.82	550.8	480.02	87.15
தாழ்நிலை	1,339.86	644.23	695.63	107.98
மொத்த விற்பனைகள்	1,234.24	615.44	618.80	100.55

மூலம்: இலங்கை தேயிலை சபை

தேயிலை ஏற்றுமதிகள்

மீளாய்வு வருடத்துக்கான, தேயிலை ஏற்றுமதிகள் (மீள் ஏற்றுமதியுடன்) 250 மில்லியன் கிலோகிராம்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கடந்த 2021 ஆம் வருடத்துடன் (286 மில்லியன் கிலோகிராம்) ஒப்பிடுகையில் 36 மில்லியன் கிலோகிராகளினால் வீழ்ச்சியடைந்துள்ளது. நிறைவுற்ற வருடத்தில் மொத்த ஏற்றுமதி வருமானமாக ரூபா 411 பில்லியன் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன், கடந்த 2021 ஆம் ஆண்டின் ஏற்றுமதி வருமானம் ரூபா 263 பில்லியன்களாகப் பதியப்பட்டதுடன், இவ்வருடம் 148 பில்லியன் ரூபாய்களினால் அதிகரித்துள்ளது. நிறைவுற்ற 2022 இல், சராசரி வருடாந்த அலகு FOB விலை, கிலோகிராமுக்கு ரூபா 1,643 ஆக அமைந்ததுடன் இது 2021 ஆம் ஆண்டில் கிலோகிராமுக்கு ரூபா 921 ஆக அமைந்ததுடன், கிலோகிராமுக்கு ரூபா 722 அதிகரிப்பைக் காட்டுகின்றது. சர்வதேச தேயிலைச் சந்தையில், கொள்ளவுகளின் அடிப்படையில் இலங்கை மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளதுடன், இரண்டாவது தேயிலை வருமானம் ஈட்டும் நாடாகவும் விளங்குகின்றது. இது சர்வதேச சந்தைக்கு அதியுயர் - தரத்திலான தேயிலையை வழங்குவதில் விருத்தியடையும் திறனைக் காட்டுகின்றது.

போட்டியாளர்களிடமிருந்தான கடுமையான போட்டித்தன்மையினால், நாட்டின் போட்டி நிலையில் மிகவும் மோசமாக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தேயிலைக்கான அதிக உற்பத்திச்செலவு மற்றும் மந்தமான விளைச்சலினால் இந்நிலைமை மேலும் அதிகரித்துள்ளது. இதே நிலையில், நாடு தொடர்ச்சியாக புராதன தேயிலை உற்பத்திகளில் தங்கியுள்ளமையினால், நுகர்வோர் மத்தியில் வேகமாக மாறிவரும் விருப்பங்களுக்கிடையில் தொடர்ந்தும் CTC தேயிலைகளுக்கான சந்தைப்பங்குகளை அரிவடையச் செய்வதாக அமையக்கூடும்.

வரைபு 3.5: வருடாந்த தேயிலை ஏற்றுமதிகள் - 2022

ஏற்றுமதி வகை	அளவு (கி.கிராம்)	பெறுமதி (ரூபா)	FOB (ரூபா/ கி.கிராம்)
ஏற்றுமதிகள்			
கறுப்பு			
பொதிகள்	17,856,567	50,318,834,916	2,817.95
தொகை	109,326,468	157,876,743,351	1,444.09
பைகள் (1கி.கி-3கி.கிராம்)	2,519,201	3,628,421,839	1,440.31
பைகள் (3கி.கி -5கி. கிராம்)	10,496,157	15,556,823,076	1,482.14
பைகள் (4கிராம் -1கி. கிராம்)	69,365,042	112,719,806,735	1,625.02
பைகள் (5கி.கி -10கி. கிராம்)	27,206,924	34,118,331,231	1,254.03
கறுப்பு மொத்தம்	**236,770,359**	**374,218,961,148**	**1,580.51**
பச்சை			
பொதிகள்	718,621	4,271,453,436	5,943.96
தொகை	316,554	615,832,597	1,945.43
பைகள் (1கி.கி-3கி.கிராம்)	9,907	26,682,268	2,693.27
பைகள் (3கி.கி -5கி. கிராம்)	7,809	19,831,902	2,539.62
பைகள் (4கிராம் -1கி. கிராம்)	775,359	2,274,194,074	2,933.08
பைகள் (5கி.கி -10கி. கிராம்)	23,815	40,385,635	1,695.77
பச்சை மொத்தம்	**1,852,065**	**7,248,379,912**	**3,913.67**
உடனடி தேயிலை			
பொதிகள்	78	207,329	2,651.27
பைகள் (>3 கி.கிராம்)	3,023,483	8,036,682,105	2,658.09
பைகள் (4 கிராம்-1 கி. கிராம்)	277	559,090	2,019.10
பைகள் (5 கிராம்-10 கி. கிராம்)	-	-	-
பச்சை மொத்தம்	3,023,838	8,037,448,524	2,658.03
ஏற்றுமதி மொத்தம்	**241,646,262**	**389,504,789,584**	**1,611.88**
மீள் ஏற்றுமதிகள்			
கறுப்பு			
பொதிகள்	3,816,963	8,465,366,534	2,217.83
தொகை	1,126,687	1,575,671,476	1,398.50
பைகள் (1கி.கி-3கி.கிராம்)	4,937	6,420,350	1,300.55
பைகள் (3கி.கி -5கி. கிராம்)	647	1,835,327	2,835.53
பைகள் (4கிராம் -1கி. கிராம்)	1,086,921	2,071,493,422	1,905.84
பைகள் (5கி.கி -10கி. கிராம்)	65,180	124,450,297	1,909.33
கறுப்பு மொத்தம்	**6,101,336**	**12,245,237,406**	**2,006.98**
பச்சை			
பொதிகள்	1,271,310	7,083,652,184	5,571.93
தொகை	282,161	317,932,572	1,126.78
பைகள் (1கி.கி-3கி.கிராம்)	308	1,600,114	5,195.18
பைகள் (3கி.கி -5கி. கிராம்)	54,969	116,121,236	2,112.49
பைகள் (4கிராம் -1கி. கிராம்)	745,424	1,661,975,786	2,229.57
பைகள் (5கி.கி -10கி. கிராம்)	16,760	34,604,432	2,064.70
பச்சை மொத்தம்	**2,370,932**	**9,215,886,324**	**3,887.03**
உடனடி தேயிலை			
பைகள் (>3 கி.கிராம்)	52,095	87,517,917	1,679.98
பைகள் (4கிராம் -1கி. கிராம்)	715	1,524,012	2,130.89
பைகள் (1 கி.கிராம்-3 கி. கிராம்)	-	-	-
உடனடி தேயிலை மொத்தம்	52,810	89,041,929	1,686.09
தேறிய மொத்தம் (மீள்-ஏற்றுமதி)	**8,525,077**	**21,550,165,659**	**2,527.86**
தேறிய மொத்தம் (ஏற்றுமதி + மீள்-ஏற்றுமதி)	250,171,340	411,054,955,243	1,643.09


மூலம்: இலங்கை சுங்கம்

வகைகளின் அடிப்படையில் தேயிலை ஏற்றுமதிகள்

பொதுவாக, தேயிலைக்கான விருப்பத்தேர்வுகள், இலைகளின் தோற்றம் மற்றும் அவற்றின் தரத்தினைப் கொண்டு கணிசமானளவு வேறுபடுகின்றன. மத்திய கிழக்கு மற்றும் CIS நாடுகள் முதன்மையாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தாழ்நிலை, மரபுவழியான, வலுவான சுவையுள்ள தேயிலையில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், கறுப்பு, பசுமை மற்றும் உடனடி தேயிலை வகைகளில் மீள்ஏற்றுமதி உள்ளடங்களாக மொத்த தேயிலை ஏற்றுமதிகளின் அளவுகள் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், ரூபா பெறுமதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. பொதுவாக ஒவ்வொரு வருடமும், கறுப்பு தேயிலையின் ஏற்றுமதியானது 97% ஆகவும், பச்சைத் தேயிலையானது 2% ஆகவும் மிகுதியான 1% சதவீதம் உடனடி தேயிலையுமாக அமையப்பெற்றன. மொத்த ஏற்றுமதியானது கொள்ளளவில் 36 மில்லியன் கிலோகிராம் அதிகரிப்புடன் 12 % மான உயர்ச்சியைக் காட்டுகின்றது. மேலும், ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதி ஆகிய இரண்டும் அவற்றின் கொள்ளளவுகளில் தனித்தனியாக முறையே, 12 % மற்றும் 14 % வீழ்ச்சியைக் காட்டுகின்றன. மேலும், ஏற்றுமதி மற்றும் மீள் பெறுமதிகளில் முறையே 56% மற்றும் 51% வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. எவ்வாறாயினும், ஒட்டுமொத்த ஏற்றுமதி வருமானமானது 2022 ஆம் ஆண்டில் 1,259 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்ததுடன், இது 2021 ஆம் ஆண்டில் 1,324 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அமைந்ததுடன், நிறைவுற்ற வருடத்தில் 5% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

வரைபு 3.4: மாதாந்த மொத்த தேயிலை ஏற்றுமதிகள் 2022 - கொள்ளளவு மற்றும் அலகு விலை



பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள்


சர்வதேச ரீதியில் இலங்கைத் தேயிலையின் பாரம்பரிய சந்தை நிலையினைப் பேணும் வகையில், மிக விரைவாக மாறுபடும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கான சர்வதேச விருப்பங்களுக்கு ஏற்றாற்போல இசைவாக்கப்படுதல் மிகவும் அவசியமாகும். நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் (3kg க்குக் குறைவான தேயிலைப் பைகள், தேயிலைப்பொதிகள் மற்றும் உடனடித்தேயிலைகள்) அளவானது, மொத்த ஏற்றுமதி அளவுகளில் 40 % ஆக அமைந்ததுடன், பெறுமதிப் பங்குகளில் 49% உடன், ரூபா 201 பில்லியன்களை ஏற்றுமதி வருமானமாக உருவாக்குகின்றது.

அட்டவணை 3.6: வருடாந்த பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் - 2022

ஏற்றுமதி வகை	வகைகள்	அளவு (கி. கிராம்)	பெறுமதி (ரூபா)	FOB (கி. கிராம்/ ரூபா)
ஏற்றுமதி	கறுப்பு	89,740,810	166,667,063,490	1,857.20
	பச்சை	1,503,887	6,572,329,778	4,370.23
	உடனடி	3,023,838	8,037,448,524	2,658.03
உப மொத்தம்		94,268,535	181,276,841,792	1,922.98
மீள் ஏற்றுமதி	கறுப்பு	4,908,821	10,543,280,306	2,147.82
	பச்சை	2,017,042	8,747,228,084	4,336.66
	உடனடி	52,810	89,041,929	1,686.09
உப மொத்தம்		6,978,673	19,379,550,319	2,776.97
மொத்தம்		101,247,208	200,656,392,111	1,981.85

மூலம்: இலங்கை தேயிலை சபை

வரைபு 3.5: பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகள் மற்றும் தொகைத் தேயிலை ஏற்றுமதிகள்



மூலம்: சுங்கத்தரவுகள்

பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையின் FOB விலையை விட தொகையளவிலான தேயிலையின் FOB விலை அதிகமாகும். மேலும், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளுக்கான விளம்பரங்கள், தொகையளவிலான தேயிலை ஏற்றுமதிகளை விட இலங்கை பொருளாதாரத்தில் நேரான வகையில் பங்களிப்புச் செலுத்துகின்றன. மீளாய்வு வருடத்தில், பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் தொகைத் தேயிலை ஆகிய இரண்டினதும் FOB விலைகளில் அதிகரிப்பை அவதானிக்க முடிகின்றது. ஏற்றுமதி வகைகளில், 3 கிலோகிராம் வரை பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையாக கவனத்திற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை தேயிலை ஏற்றுமதிகளுக்கான பிரதான இடங்கள்

கடந்த காலங்களில், இங்கிலாந்து, பாக்கிஸ்தான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் சிலோன் தேயிலைக்கு அதிகளவான சந்தைப்பங்குகள் காணப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய நிலையில் இந்நாடுகளில் எதுவும் முதல் 25 ஏற்றுமதி இடங்களுக்குள் இடம்பிடிக்கவில்லை. மொத்த சிலோன் தேயிலை இறக்குமதியில் 17 % பங்குகளுடன், ஈராக் முதன்மையான தேயிலை இறக்குமதியாளராக விளங்குவதுடன், கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 % மான வளர்ச்சியைக் காட்டுகின்றது.

அட்டவணை 3.7: முதன்மையான 20 தேயிலை ஏற்றுமதி நாடுகளின் ஏற்றுமதிகளின் அளவுகள் மற்றும் நிலைகள் - 2022

நாடு	அளவு (கிலோகிராம்)							நிலை							
	பைகள்	தொகை	பொதிகள் (>3kg)	பொதிகள் (1kg-3kg)	பொதிகள் (3kg-5kg)	பொதிகள் (4g-1kg)	பொதிகள் (5kg-10kg)	தேறிய மொத்தம்	பைகள்	தொகை	பொதிகள் (>3kg)	பொதிகள் (1kg-3kg)	பொதிகள் (3kg-5kg)	பொதிகள் (4g-1kg)	பொதிகள் (5kg-10kg)
ஈராக்	312,200	5,610,683	-	467,081	1,532,385	22,214,971	13,108,604	43,245,924	9	6	-	3	3	1	1
ரஷ்யா	714,113	19,975,038	439	-	10,440	4,017,989	15,170	24,733,188	8	1	10	-	13	4	10
ஐ.அ.இ	243,695	14,870,011	878	42,497	495,450	2,663,434	4,242,489	22,558,454	11	2	7	7	4	6	2
துருக்கி	127,257	3,156,089	-	654,733	4,376,951	4,312,427	2,967,610	15,595,068	14	11	-	1	1	3	4
ஈரான்	157,027	6,707,148	-	543,225	363,825	1,182,854	4,105,750	13,059,829	13	5	-	2	5	12	3
அசர்பைஜான்	5,456	11,570,097	-	-	38,785	468,070	9,480	12,091,887	20	3	-	-	11	14	14
லிபியா	33,109	-	-	-	-	11,167,410	-	11,200,519	18	-	-	-	-	2	-
சீனா	208,689	9,333,154	72,129	60,509	4,661	344,932	1,104,808	11,128,882	12	4	3	6	14	15	5
ஜேர்மனி	247,770	4,004,429	33,600	-		2,283,177	3,940	6,572,916	10	10	5	-	-	8	15
சிலி	816,728	5,432,585	671	-	-	230,849	32,690	6,513,522	6	7	9	-	-	17	9
அமெரிக்கா	1,538,014	2,742,884	97,379	2,395	25,235	2,033,133	13,998	6,453,037	4	13	2	9	12	9	11
சவூதி அரேபியா	1,914,751	1,117,855	10,611	25,179	283,340	2,908,444	10,390	6,270,569	1	15	6	8	7	5	13
சிரியா	875,850	453,625	-	455,625	2,708,435	1,601,483	58,500	6,153,518	5	16	-	4	2	11	8
ஜப்பான்	805,272	4,814,867	703	-	71,585	86,714	125,515	5,904,655	7	8	8	-	9	19	6
தாய்வான்	106,245	4,247,876	34,230	145	303,501	143,273	122,635	4,957,905	16	9	4	10	6	18	7
ஜோர்தான்	1,884,500	21,708	-	-	65,000	1,959,231	282	3,930,721	2	18	-	-	10	10	17
கொங்கொங்	103,413	3,106,546	3	245,541	108,941	240,474	12,129	3,817,046	17	12	12	5	8	16	12
போலந்து	1,562,346	1,275,010	-	-	29	539,636	1,300	3,378,321	3	14	-	-	15	13	16
பெல்ஜியம்	113,085	194,497	117	-	-	2,589,480	-	2,897,178	15	17	11	-	-	7	-
அயர்லாந்து	12,393	-	2,644,132	-	-	1,575	-	2,658,100	19	-	1	-	-	20	-
முதல் 20 மொத்தம்	11,781,908	98,634,099	2,894,893	2,496,930	10,388,563	60,989,555	25,935,291	213,121,239	-	-	-	-	-	-	-
தேறியமொத்தம்	23,663,539	111,051,871	3,075,577	2,534,352	10,559,582	71,973,739	27,312,679	250,171,340	-	-	-	-	-	-	-

மூலம்: சுங்கத்தரவுகள்

கடந்த 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ரஷ்யா 10 % மான ஏற்றுமதிப்பங்குகளுடன் இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடாக ரஷ்யா திகழ்கின்றது. கடந்த 2021 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி அளவுகளில் 10 % ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. நிறைவுற்ற 2022 இல், முதல் பத்து நாடுகளில் ஜேர்மனிக்கான சராசரி FOB விலைகள், கிலோகிராமுக்கு ரூபா 1,882 எனும் அதியுயர் விலையைக் கொண்டிருந்ததன. அதேநேரத்தில் முதல் பத்து நாடுகளில், ஈராக், அசர்பைஜான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள், சிலோன் தேயிலைக்குரிய இறக்குமதிப்பங்குகளை அதிகரித்ததுடன், ரஷ்யா, ஐக்கிய அரபு இராட்சியம், துருக்கி, ஈரான், லிபியா, சீனா மற்றும் சிலி ஆகிய நாடுகள், கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இறக்குமதிப்பங்குகளில் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், நிறைவுற்ற 2022 இல் முதல் பத்து இடங்களிலுள்ள நாடுகள், 67% மான சிலோன் தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளன. சிலோன் தேயிலை ஏற்றுமதி செய்யும் முதல் பத்து நாடுகளில், துருக்கியின் பணப்பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினால், சிலோன் தேயிலைக்கான கேள்வி 48% ஆல் குறைவடைந்தது. மேலும், 2013 ஆம் ஆண்டிலிருந்து, தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் சர்வதேசத்துக்கான சிலோன் தேயிலையின் வழங்கல் படிப்படையாகக் குறைவடைந்துள்ளது.

சிலோன் தேயிலையை ஏற்றுமதிசெய்யும் பிரதான நாடுகளில், ரஷ்யா இரண்டாம் இடத்துக்கு முன்னேறியதுடன், ஐக்கிய அரபு இராட்சியம் 9 % மான ஏற்றுமதிப்பகுகளுடன் மூன்றாம் இடத்திலுள்ளது. இலங்கையின் மிகப்பெரிய ஏற்றுமதி இடமாக மத்தியகிழக்கு நாடுகள் திகழ்வதுடன், வலுவான எண்ணை விலைகளினால் கேள்விகள் மேலும் அதிகரிக்கின்றன. ஜேர்மனி, அசர்பைஜான், ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் வருமானத்துக்காக, சராசரி FOB விலைகளுடன் ஒப்பிடுகளில் அதிக FOB விலைகளைப் பேணுகின்றன. மேலும், நிறைவுற்ற 2022 இல் மொத்த ஏற்றுமதி வருமானம் ரூபா 411 பில்லியன்களைத் தாண்டுவதுடன், கடந்த 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருமான அதிகரிப்பைக் காட்டுகின்றது. எவ்வாறாயினும், இலங்கைத் தொகைத் தேயிலை ஏற்றுமதிகளில், மத்தியகிழக்கு நாடுகள் முன்னிலை வகிக்கின்றன, இதன் விளைவாக ஏனைய பிராந்தியங்கள் பருகும் தேயிலைப்பைகளைப் பயன்படுத்துகின்றன

அட்டவணை 3.8: சிலோன் தேயிலை ஏற்றுமதிக்கான பிரதான இடங்கள் - 2022

நாடு	2022				2021				
	நிலை	அளவு (kg)	FOB ரூபா/kg	பெறுமதிப் பங்கு (%)	நிலை	அளவு (kg)	FOB ரூபா/kg	ஏற்றுமதிப்பங்கு (%)	வளர்ச்சி (%)
ஈராக்	1	43,245,924	1092.82	17.29	1	42,455,312	642.78	14.85	2
ரஷ்யா	2	24,733,188	1638.3	9.89	3	27,357,322	834.06	9.57	(10)
ஐ.அ.இ இராட்சியம்	3	22,558,454	1704.39	9.02	4	23,147,842	891.15	8.1	(3)
துருக்கி	4	15,595,068	1503.25	6.23	2	29,745,684	858.71	10.41	(48)
ஈரான்	5	13,059,829	1748.66	5.22	5	15,833,588	887.83	5.54	(18)
அசர்பைஜான்	6	12,091,887	1749.26	4.83	8	10,591,096	882.58	3.7	14
லிபியா	7	11,200,519	1195.87	4.48	7	12,338,991	739.58	4.32	(9)
சீனா	8	11,128,882	1401.1	4.45	6	14,221,526	847.79	4.97	(22)
ஜேர்மனி	9	6,572,916	1881.94	2.63	10	6,402,796	1025.87	2.24	3
சிலி	10	6,513,522	1394.49	2.6	9	8,834,919	809.2	3.09	(26)
முதல் 10 மொத்தம்		166,700,189	1,464.31	66.64		190,929,076	809.64	66.79	(13)
தேறிய மொத்தம்		250,171,340	1,643.09	100.00		285,871,722	921.23	100.00	(12)

மூலம்: சுங்கத்தரவுகள்

கறுப்புத் தேயிலை ஏற்றுமதிகள்

மொத்த தேயிலை ஏற்றுமதியில் கறுப்புத் தேயிலை 97% (243 மில்லியன் கிலோகிராம்) ஆகப் பதியப்பட்டுள்ளதுடன், மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 94% (ரூபா 386 பில்லியன்) பங்களிப்புச்செலுத்துகின்றது. கறுப்புத் தேயிலையை ஏற்றுமதி செய்யும் நாடுகளில், முதல் இருபது இடங்களிலுள்ள நாடுகள் 86 % ஏற்றுமதிப் பங்குகளையும், 83% பெறுமதியையும் கொண்டுள்ளன. நிறைவுற்ற 2022 இல் ஆண்டில், 17% மான கறுப்புத் தேயிலை இறக்குமதிகளுடன், சிலோன் தேயிலை ஏற்றுமதிகளில் ஈராக் முதலிடத்தைப் பிடித்ததுதன், 10% மான பங்குகளுடன் ரஷ்யா இரண்டாம் இடத்தைப்பிடித்தது. எவ்வாறாயினும், கடந்த 2013 வரைக்கும் முதன்மையான தேயிலை இறக்குமதியாளராக ரஷ்யா திகழ்ந்ததுடன், 2014 இல், அதிகளவான கறுப்புத் தேயிலையை இறக்குமதி செய்வதனூடாக துருக்கி முதலிடத்தைத் தட்டியது. மீண்டும் 2015 இல், 12% மான தேயிலையை இறக்குமதி செய்வதனூடாக, ரஷ்யா கறுப்புத் தேயிலை இறக்குமதியில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தது.

அட்டவணை 3.9: முதல் 20 நிலைகளிலுள்ள கறுப்புத் தேயிலை ஏற்றுமதி நாடுகள் மற்றும் சந்தைப்பங்குகள் (மீள் ஏற்றுமதியுடன்) - 2021

நாடு	அளவு (Mn.kg)	பெறுமதி (ரூபா/ பில்லியன்)	FOB (Rs/kg)	அளவுப் பங்கு (%)	பெறுமதிப் பங்கு (%)	அளவு வளர்ச்சி (%)
ஈராக்	43.21	47.20	1,092.34	17.79	12.21	1.83
ரஷ்யா	24.25	39.16	1,614.40	9.99	10.13	(9.48)
ஐ.அ.இ	22.22	37.78	1,700.04	9.15	9.77	(2.18)
துருக்கி	15.58	23.41	1,502.74	6.41	6.06	(47.57)
ஈரான்	13.04	22.80	1,748.60	5.37	5.90	(17.57)
அசர்பைஜான்	12.09	21.13	1,748.55	4.98	5.47	14.21
சீனா	11.00	15.28	1,389.76	4.53	3.95	(21.05)
லிபியா	10.80	12.81	1,185.62	4.45	3.31	(10.94)
ஜேர்மனி	6.45	11.98	1,858.54	2.65	3.10	2.71
சிலி	6.44	8.76	1,359.76	2.65	2.27	(26.31)
சிரியா	6.15	10.83	1,760.79	2.53	2.80	(20.80)
சவூதி அரேபியா	6.13	13.86	2,262.99	2.52	3.59	(3.72)
ஜப்பான்	5.90	11.43	1,938.25	2.43	2.96	(10.51)
அமெரிக்கா	5.77	9.82	1,702.89	2.38	2.54	9.40
தாய்வான்	4.82	6.73	1,395.81	1.98	1.74	1.64
ஜோர்தான்	3.91	7.22	1,846.90	1.61	1.87	(24.84)
கொங்கொங்	3.81	5.16	1,354.02	1.57	1.34	(14.00)
போலந்து	3.26	7.09	2,177.87	1.34	1.84	2.19
பெல்ஜியம்	2.88	4.44	1,541.07	1.19	1.15	(18.11)
உக்கிரேன்	2.21	3.73	1,689.15	0.91	0.97	(43.31)
முதல் 20 மொத்தங்கள்	**209.91**	**320.63**	**1,527.48**	**86.43**	**82.97**	**(12.57)**

மூலம்: சுங்கத்தரவுகள்

பச்சைத் தேயிலை ஏற்றுமதிகள்

அட்டவணை 3.10: முதல் 20 நிலைகளிலுள்ள பச்சைத்தேயிலை ஏற்றுமதி நாடுகள் - 2022

நாடு	அளவு (Mn.kg)	பெறுமதி (ரூபா/ பில்லியன்)	FOB (Rs/kg)	அளவுப் பங்கு (%)	பெறுமதிப் பங்கு (%)	அளவு வளர்ச்சி (%)
அமெரிக்கா	587,122	3,257,205,316	5,547.74	13.90	19.78	(5.77)
ரஷ்யா	477,822	1,362,397,283	2,851.26	11.31	8.27	(14.92)
லிபியா	398,205	586,830,987	1,473.69	9.43	3.56	89.75
ஐக்கிய அரபு இராட்சியம்	336,910	668,951,328	1,985.55	7.98	4.06	(22.14)
நெதர்லாந்து (கொலண்ட்)	229,982	1,302,209,778	5,662.22	5.45	7.91	(12.81)
உக்கிரேன்	207,359	473,968,508	2,285.74	4.91	2.88	(45.42)
சவூதி அரேபியா	133,481	498,808,170	3,736.93	3.16	3.03	(6.44)
போலந்து	121,132	490,713,793	4,051.07	2.87	2.98	(25.31)
அவுஸ்திரேலியா	115,755	637,495,119	5,507.27	2.74	3.87	(9.33)
தாய்வான்	104,933	223,413,203	2,129.10	2.48	1.36	1.80
நைஜீரியா	95,210	373,800,486	3,926.05	2.25	2.27	17.19
ஜேர்மனி	91,125	274,168,327	3,008.71	2.16	1.67	18.38
உஸ்பெகிஸ்தான்	76,124	189,190,696	2,485.30	1.80	1.15	8.84
சிலி	73,167	324,443,225	4,434.28	1.73	1.97	(22.96)
பெலாருஸ்	65,664	173,556,630	2,643.10	1.55	1.05	50.23
செக் குடியரசு	64,574	433,432,826	6,712.16	1.53	2.63	36.26
ஐக்கிய இராட்சியம்	62,737	491,723,801	7,837.83	1.49	2.99	(8.89)
கனடா	60,882	333,820,004	5,483.09	1.44	2.03	(19.94)
சீனா	59,304	196,205,408	3,308.47	1.40	1.19	(40.81)
பிரான்ஸ்	55,531	388,041,441	6,987.78	1.31	2.36	(53.80)
முதல் 20 மொத்தம்	**3,417,021**	**12,680,376,329**	**3,710.95**	**80.91**	**77.02**	**(9.75)**

மூலம்: இலங்கை சுங்கம்

நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் 2% (4.2 மில்லியன் கிலோகிராம்) பச்சைத் தேயிலையைக் கொண்டுள்ளதுடன், இது மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 4% (ரூபா 16.4 பில்லியன்) ஐ உள்ளடக்குகின்றது. அனைத்து பச்சைத் தேயிலை ஏற்றுமதி இடங்களில், முதல் இருபது இடங்களில் 81% ஆன கொள்ளளவுப் பங்களிப்பினைக் கொண்டுள்ளதுடன், இது பெறுமதியின் அடிப்படையில் 77% ஆகும். நிறைவுற்ற 2022 இல் முதன்மை நிலைகளிலுள்ள இருபது பச்சைத் தேயிலை இறக்குமதியாளர்களில், அமெரிக்கா 0.6 மில்லியன் கிலோகிராம்களாக குறிப்பிடத்தக்க அளவினைக் கொண்டுள்ளதுடன், இங்கிலாந்து அதியுயர் FOB விலைகளைக் . FOB விலைகள் பதிவாகின. எவ்வாறாயினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நிறைவுற்ற 2022, மீளாய்வு வருடத்தில், பச்சைத் தேயிலை ஏற்றுமதிக்கான முதல் இருபது இடங்களில் 10% கொள்ளளவுகள் பதிவாகின.

உடனடித் தேயிலை ஏற்றுமதி

இலங்கையிலிருந்து உடனடித் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் அயர்லாந்து பிரதான பங்கினை வகிப்பதுடன், 2.6 மில்லியன் கிலோகிராம் (80 %) உடனடித் தேயிலையை இறக்குமதி செய்கின்றது. உடனடித் தேயிலை இறக்குமதியில், முறையே அமெரிக்கா, பாகிஸ்தான், சீனா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. மீளாய்வு வருடத்தில், மொத்தமாக 3 மில்லியன் கிலோகிராம் உடனடி தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், இதன் பெறுமதி 8 பில்லியன் ரூபாய்களாகும்.

பருகுவதற்கு தயார் நிலையிலுள்ள (RTD) தேநீர் ஏற்றுமதிகள்

நிறைவுற்ற 2022 ஆம் ஆண்டில், 4,757 லீற்றர் RTD தேநீரை ஏற்றுமதி செய்வனூடாக 4.8 மில்லியன் ரூபா ஏற்றமதி வருமானமாக ஈட்டப்பட்டது. ஈராக் 4,032 லீற்றர்கள் RTD தேநீரை இறக்குமதி செய்வனூடாக, ரூபா 2.9 மில்லியன் வருமானத்தை ஈட்டித்தருவதன் மூலமாக RTD சந்தையில் பாரிய பங்களிப்பைச் செலுத்தியது. ஐக்கிய அரபு இராட்சியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள், சிலோன் RTD சந்தைக்கான பிரதான நாடுகளாகத் திகழ்கின்றன. எவ்வாறாயினும், கடந்த இரண்டு வருட காலமாக இலங்கை RTD தேநீர் சந்தையில் பாரிய வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சர்வதேச தேயிலைத் தொழிற்துறையின் பின்னணி

தேநீர், சர்வதேச ரீதியில் பரந்தளவில் நுகரப்படுகின்ற மிகவும் பிரபல்யமானதொரு சூடான பானமாகும். நீருக்கு மாத்திரம் இரண்டாவதாக விளங்குகின்றது. சர்வதேச ரீதியில் வாழும் அனைத்து இன மக்களின், அனைத்து வயதுப் பிரிவினரையும் கவரும் பாணமாக தேநீர் விளங்குகின்றது. தேயிலையானது, விசேடமாக, தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியில் பிரதான பங்கினை வகிப்பதை புராதன வரலாற்றுச் சான்றுகளிலிருந்து அறியக்கூடியதாகவுள்ளது. பண்டங்களை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகள், இலங்கை தேயிலை ஏற்றுமதிகளில் பிரதான பங்காளர்களாக ஊடுருவியுள்ளதுடன், நாட்டிலுள்ள மிகப்பெரிய தொழில் வழங்குனர்களில் ஒரு பகுதியாகவும் விளங்குகின்றது.

தேயிலையை உற்பத்தி செய்யும் நாடுகளில், சீனா, இந்தியா, கென்னியா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகியன பிரதான இடத்தை வகுக்கின்றன. மீளாய்வு வருடத்தில், இலங்கையை பின்தள்ளி, துருக்கி நான்காம் இடத்துக்கு முன்னேறியது. பிரதான உற்பத்தியாளர் பட்டியலில், வியட்நாம் ஐந்தாம் இடத்திலுள்ளது. இவ் ஐந்து நாடுகளும், சர்வதேச உற்பத்தில் 85 % மாகவும், சர்வதேச ஏற்றுமதியில் 80 % மாகவும் பங்களிப்புச் செலுத்துகின்றன. மேலும், சீனா, சர்வதேச தேயிலை பயிர்ச்செய்கை எழுச்சிக்கான மிகமுக்கியமான கருவியாக விளங்குவதுடன், ஆபிரிக்க நாடுகளில் கென்னியா, மிகப்பெரிய அறுவடையைப் பதிவு செய்துள்ளது. சர்வதேச தொழிற்பேட்டையில், இலங்கையில் சர்வதேச தேயிலைத் தொழிற்துறையின் நிகழ்வோட்டத்தினை கவனத்திற்கொள்ளும்போது, ஏனைய தேயிலை உற்பத்தியாளர்களுடன் ஒப்பிடுகையில், 2020 இல், அதிகளவான ஏற்றுமதிகள் மற்றும் உற்பத்தி அளவுகள், அலகுக்கான அதியுயர் விற்பனை விலைகள் (ஏலம்) மற்றும் வருமான செயற்பாடுகள் (ஏற்றுமதிகள்) போன்றன பதியப்பட்டுள்ளன.

சர்வதேச தேயிலை பயிர்ச்செய்கை

கடந்த 2021 ஆம் வருடத்தின் இறுதியில், சர்வதேச ரீதியில் பயிரிடப்பட்ட தேயிலையின் மொத்த விஸ்தீரம் 5 மில்லியன் ஹெக்டயர்களை விட அதிகமாகும்.

சர்வதேச தேயிலை குழாமின் (ITC) கருத்துக்களின் பிரகாரம், அதிகளவான தேயிலைப்பயிர்ச்செய்கை பரப்பு சீனாவில் (62.74%) காணப்பட்டதுடன், இது வருடாந்தம் விஸ்தரிக்கப்படுகின்றது. கடந்த 2010–2021 காலப்பகுதிகளில், அதிகளவான தேயிலைப்பரப்பினை கென்னியா கொண்டிருந்தது. தேயிலை வளர்ப்பு நாடுகளில் முதல் பத்து நாடுகள் 94 % மான பரப்பினைக் கொண்டுள்ளன.

வணை 3.11: அதியுயர் தேயிலை பரப்புக்களின் பதிவுகள்


நாடு	2016(Ha)	2017(Ha)	2018(Ha)	2019(Ha)	2020(Ha)	2021(Ha)
சீனா	2,920,000	3,059,000	2,985,800	3,065,500	3,165,130	3,264,060
இந்தியா	577,480	590,000	636,560	636,560	636,560	636,560
இலங்கை*	202,839	202,540	202,540	202,540	202,540	202,540
கென்னியா	218,538	232,742	234,300	269,430	269,430	269,430
வியட்நாம்	134,000	134,000	130,000	130,000	130,000	130,000
இந்தோனேசியா	118,100	116,500	115,300	114,300	113,500	113,400
மியன்மார்	80,000	80,000	81,000	81,400	81,400	81,600
துருக்கி	77,000	77,000	83,000	83,000	83,000	83,000
பங்களாதேஷ்	59,000	59,000	59,300	61,000	65,429	65,972
ஜப்பான்	43,100	42,400	41,600	40,600	39,100	38,000

மூலம்: வருடாந்த ITC புள்ளிவிபரவியலுக்கான கையேடு - 2022

*கணிக்கப்பட்ட பகுதியானது பயிரிடப்பட்டுள்ளதெனப் பதியப்பட்டுள்ளது.

சர்வதேச தேயிலை உற்பத்தி

வரைபு 3.6: சர்வதேச தேயிலை உற்பத்தி புள்ளிவிபரவியல்



மூலம்: இலங்கை சுங்கம்

நிறைவுற்ற 2021 ஆம் வருடத்தில், சர்வதேச தேயிலை உற்பத்தியானது 6.5 பில்லியன் கிலோகிராம்களை எட்டியுள்ளதுடன், இது கடந்த 2020 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 3% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது. நிறைவுற்ற 2021 இல் சர்வதேச தேயிலை உற்பத்தியில், சீனா, இந்தியா, கென்னியா, இலங்கை, துருக்கி, வியட்நாம் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் 91 % மான பங்களிப்பைச் செலுத்துகின்றன. அத்துடன், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தேயிலை உற்பத்தியில் முன்னிலையில் திகழ்வதுடன், இந்நாடுகளின் உள்நாட்டு நுகர்வுகளில் வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளதுடன், கென்னியா பெரிய சர்வதேச ஏற்றுமதியாளராகவும் திகழ்கின்றது.

உலகின் தேயிலை உற்பத்தியாளர் பட்டியலில், நிறைவுற்ற 2021 லான அதிகரிப்பதுடன், துருக்கியைப் பின்தள்ளி, இலங்கை நான்காவது பெரிய தேயிலை உற்பத்தியாளராகத் திகழ்கின்றது. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2021 இல் சர்வதேச தேயிலை உற்பத்தியில், இலங்கை 5% பங்கினைக் கொண்டுள்ளது.

நிறைவுற்ற 2021 இல், சர்வதேச தேயிலை உற்பத்தியில், 3,120 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தியுடன் (48 %) சீனா அதியுயர் நிலையிலும், 1,329 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தியுடன் (21%) இந்தியா இரண்டாமிடத்திலும் உள்ளன. அதனையடுத்து, கென்னியா 533 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தியுடன், 8% மான பங்குகளுடன் மூன்றாம் இடத்தைப்பிடித்துள்ளதுடன் அதனையடுத்து, 280 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தியுடன், 4% மான பங்குகளுடன் துருக்கி ஐந்தாம் இடத்திலுள்ளது.

சர்வதேச தேயிலை நுகர்வு

கடந்த 2019-2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில், சீனாவில் வருடாந்த தேயிலை நுகர்வு மற்றும் மூன்று வருடத்துக்கான தனிநபருக்குரிய சராசரி தேயிலை நுகர்வானது மிக அதிகளவில் பதிவாகியதுடன், இது 2,489 மில்லியன் கிலோகிராம்களாக அமைந்தது. இருந்தும் தனிநபருக்கான தேயிலை நுகர்வு 1.78 கிலோகிராம்களாக பதியப்பட்டது. துருக்கியில் 3.23 கிலோகிராம் எனும் அதியுயர் தனிநபர் தேயிலை நுகர்வுடன், வருடாந்தம் 269.47 மில்லியன் கிலோகிராம்கள் தேயிலை நுகர்வினைக் கொண்டிருந்தது. லிபியாயாவில், தனிநபருக்கான தேயிலை நுகர்வாக 2.06 கிலோகிராம்கள் பதியப்பட்டன.

அட்டவணை 3.12: நாடுகளின் அடிப்படையில் தேயிலை நுகர்வு புள்ளிவிபரவியல்

நாடு	2017-19		2018-20		2019-21	
	மொத்தம்	தனிநபருக்கு	மொத்தம்	தனிநபருக்கு	மொத்தம்	தனிநபருக்கு
லிபியா	17.83	3.02	15.33	2.64	14.13	2.05
ஆப்கானிஸ்தான்	30.77	1.02	27.87	0.91	25.63	0.82
துருக்கி	252.30	3.04	263.27	3.2	269.47	3.23
ஐக்கிய இராட்சியம் (அ)	106.77	1.59	107.6	1.61	102.25	1.52
மொரோக்கோ	73.05	2.07	74.23	2.09	75.3	2.09
அயர்லாந்து குடியரசு	9.76	2.00	10.38	2.1	9.89	1.99
தாய்வான்	36.67	1.31	36.55	1.3	36.94	1.32
கட்டார்	4.19	1.51	4.28	1.53	4.28	1.51
இலங்கை	29.16	1.35	29.53	1.36	29.59	1.35
கொங்கொங்	11.85	1.59	12.37	1.65	13.73	1.83
சிலி	20.25	1.09	21.45	1.12	20.74	1.07
சிரியா	10.70	0.60	9.85	0.64	10.9	0.61
எகிப்து	99.86	1.00	98.85	1	100.59	1
ஈராக்	43.50	1.13	43.23	1.11	43.8	1.1
ஈரான்	81.87	1.00	78.23	0.94	73.27	0.87
சீனா	2,152.67	1.55	2289	1.64	2489	1.78
இந்தியா	1,083.33	0.84	1091	0.83	1096.73	0.81
சிஐஎஸ்	245.33	0.83	239.23	0.82	237.75	0.82
பாகிஸ்தான்	190.81	0.89	216.34	1.01	234.9	1.08
அமெரிக்கா	120.96	0.37	114.09	0.35	112.54	0.34
ஜப்பான்	104.21	0.82	100.05	0.79	97.26	0.77
இந்தோனேசியா	94.33	0.35	95.33	0.36	95.67	0.35
பங்களாதேஷ்	82.83	0.50	85.17	0.51	88.17	0.52
போலந்து	37.37	0.98	38.78	1.02	39.49	1.04
ஜேர்மனி	28.07	0.34	24.93	0.3	23.82	0.29

மூலம்: வருடாந்த ITC புள்ளிவிபரவியலுக்கான கையேடு - 2022 மொத்தம் : மில்லியன் கிலோகிராம் தனிநபருக்கு: கிலோகிராம்

சர்வதேச தேயிலை விற்பனைகள்

நிறைவுற்ற 2021 ஆம் வருடத்தில், கொழும்பு ஏலத்தில் கிலோகிராமுக்கான சராசரி விலையான 3.09 அமெரிக்க டொலர்களுடன், 296 மில்லியன் கிலோகிராம் தேயிலை கையாளப்பட்டது. எவ்வாறாயினும், நிறைவுற்ற 2021 இல் மொம்பாசா ஏலங்கள் மற்றும் கொல்கத்தா ஏலங்களில் முறையே 500 மில்லியன் கிலோகிராம் மற்றும் 169 மில்லியன் கிலோகிராம் நிறையுடைய தேயிலைகள் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில், பிரதான ஏலவிற்பனை நிலையங்களை கவனத்திற்கொள்ளுகையில், பல வருடங்களாக கொழும்பு ஏலமானது அதியுயர் சராசரி விலைகளுடன் முன்னிலை வகிக்கின்றது.

நிறைவுற்ற 2021 இல் கொழும்பு ஏலவிற்பனை நிலையத்தில், கிலோகிராமுக்கான சராசரி விலை 3.07 அமெரிக்க டொலர்களை விட அதிகரித்துக் காணப்பட்டதுடன், கடந்த மூன்று வருடங்களாக அதியுயர் சராசரி ஏல விலைகள் 3 அமெரிக்க டொலர்களை விட அதிகமாகவே காணப்பட்டன. மீளாய்வுக்காலத்தில், சிட்டாகொங், கொல்கத்தா, மொம்பாசா மற்றும் குவாஹாட்டி ஆகிய ஒவ்வொரு ஏல நிலையங்களிலும் கிலோகிராமுக்கு இரண்டு அமெரிக்க டொலர்கள் காணப்பட்டதாக மீளாய்வுக் காலத்தில் அறியமுடிந்தது. கொல்கத்தா, இரண்டாவது பெரிய சராசரி ஏல விலையையும், சிட்டாகொங் மூன்றாவது பெரிய சராசரி ஏல விலையையும் கொண்டதாக அமையப்பெற்றுள்ளன.


அட்டவணை 3.13: பிரதான தேயிலை ஏலங்களின் புள்ளிவிபரவியல் (அளவு - மில்லியன் கிலோகிராம், அலகுக்கான விலை- அமெரிக்க டொலர்/கிலோகிராம்)

ஏலவிற்பனை நிலையங்கள்	2018		2019		2020		2021	
	அளவு	விலை	அளவு	விலை	அளவு	விலை	அளவு	விலை
சிட்டாகொங்	79	3.12	85	2.31	82.99	2.05	88	2.32
கொச்சின்	48	1.81	42	1.66	41.52	1.92	48	1.92
கொழும்பு	288	3.60	298	3.07	268.24	3.39	296	3.09
குவாஹாட்டி	177	2.13	150	2.09	162.52	2.69	155	2.49
ஜகார்த்தா	-	-	-	-	-	-	-	-
கொல்கத்தா	159	2.46	168	2.43	132.60	2.91	169	2.86
லிம்பே	9	1.84	9	1.46	5.98	1.44	13	1.38
மொம்பாசா	458	2.43	454	2.04	516.80	1.93	504	1.97

மூலம்: ITC இணையத்தளத்தில் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது

சர்வதேச தேயிலை ஏற்றுமதிகள்

வரைபு 3.7: பிரதான தயிலை ஏற்றுமதியாளர்கள்




மூலம்: வருடாந்த ITC புள்ளிவிபரவியலுக்கான கையேடு - 2022
குறிப்பு: மீள்ஏற்றுமதி தவிர்ந்த இலங்கைத் தரவுகள்

நிறைவுற்ற இல், சர்வதேச தேயிலை ஏற்றுமதிகள், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மில்லியன் 49 கிலோகிராம்களினால் (3%) வீழ்ச்சியடைந்துள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகள் முறையே, 7% மற்றும் 2% ஆல் எதிரான வளர்ச்சியைக்காட்டுகின்றன. கெ ன்னியா அதன் ஏற்றுமதிக்கொள்ளளவுகளை அதிகரித்துள்ளதுடன், கடந்த 2020 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 7% வளர்ச்சியைக் கொண்டுள்ளன. கென்னியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்று பெரிய ஏற்றுமதியாளர்கள், சர்வதேச ஏற்றுமதிகளில் 64% க்கும் அதிகமான பங்குகளை கொண்டுள்ளன.

நிறைவுற்ற2021 இல், முதன்மையான தேயிலை ஏற்றுமதி நாடுகள் அவற்றின் ஏற்றுமதி வருமானங்களுடன் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. தேயிலை ஏற்றுமதியினால் அதிகளவு வருமானமீட்டும் நாடாக சீனாவும், மூன்றாவது பெரிய ஏற்றுமதியாளராக கென்னியாவும் விளங்குகின்றன. இரண்டாவது பெரிய ஏற்றுமதி வருமானம் ஈட்டும் நாடாகத் திகழவும் இலங்கை, தூய இலங்கை தேயிலை ஏற்றுமதிகளுடன் தொழிற்துறையில் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனும் நிலையை தக்கவைக்கக்கூடியதாக அமைந்தது.

வரைபு 3.8: முதல் பத்து நிலையிலுள்ள ஏற்றுமதி வருமானம்



மூலம்: வருடாந்த ITC புள்ளிவிபரவியலுக்கான கையேடு - 2022

4. நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான அணுகுமுறை



நிலையான அபிவிருத்துக்குரிய இலக்குகள் (SGD's) வறுமையை அனைத்துப் பரிமாணங்களிலும் முடிவுக்குகொண்டுவந்து, 2030 ஆம் வருடத்துக்குள், மக்களுக்கு சமமான, நியாயமான மற்றும் பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதற்கான சர்வதேச ஒப்பந்தமாக அமையப்பெற்றுள்ளன.

நிலையான அபிவிருத்துக்குரிய இலக்குகள் (SGD's) மற்றும் உலகத்தை மாற்றியமைப்பதற்கான 169 குறிக்கோள்கள்; நிலையான அபிவிருத்துக்குரிய 2030 ஆம் வருடத்துக்கான நிகழ்ச்சிநிரலானது 2015 செப்ரம்பரில் நடந்தேறிய வரலாற்றியல் ஐக்கியநாடுகள் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்டதுடன் 2016 ஜனவரி, 1 இல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தேசிய அரசுகள் மற்றும் உலகெங்கிலும் வாழும் மில்லியன் கணக்கான மக்களுடன் ஒன்றிணைந்து, தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலை மாற்றியமைத்து, அமுல்படுத்த முன்னோடியில்லாத ஆலோசனை செயன்முறை மூலமாக நிலையான அபிவிருத்துக்குரிய இலக்குகள் உருவாக்கப்பட்டன.

இலங்கை தேயிலை சபையினால் நிறுவப்பட்ட 17 இலக்குகளில், தேயிலைத் தொழிற்துறைக்கு ஒருசில இலக்குகள் மாத்திரம் பொருந்துகின்றன. நிலையான தேயிலைத் தொழிற்துறையினை அடையும் வகையில், இலங்கை தேயிலை சபை மற்றும் அனைத்து பங்குதாரர்களினாலும் ஒவ்வொரு இலக்குகளின் கீழும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1 வறுமை இன்மை

தேயிலைத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்தல் மற்றும் அமுல்படுத்தலினுடாக வறுமையை ஒழிக்க இலங்கை தேயிலை பங்களிப்புச்செலுத்தியது;

- தேயிலையின் தரத்தினை மேம்படுத்தும் வகையில் தேயிலை வளரப்பாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல்.
- பச்சைத் தேயிலையின் தரத்தினை உறுதிப்படுத்தல், சிறிய முயற்சியாளர்களுக்கான நியாயமான விலையை வழங்குதல், பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர்களினூடாக ஏற்றுமதி FOB விலையினைக் குறைத்தலுக்கான நிலையான மேற்பார்வை மற்றும் கண்காணிப்புத் திட்டங்களை முன்னெடுத்தல். தற்போதைய நிலையில், 819 தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் 485,000 சிறிய தேயிலை வர்த்தகர்கள் மற்றும் RPC தோட்டத் தொழிலாளர்கள் உள்ளனர்.
- நிறைவுற்ற ஆம் ஆண்டில், தேயிலை உற்பத்தி குறைவடைந்ததமையானது, கொழும்பு ஏலவிற்பனை விலைகளில் பாரிய அதிகரிப்பைக் காட்டியது.

3 நலமான வாழ்வு

கோவிட் 19 நோய்த்தோற்றுக் காலத்தில், இலங்கையின் தேயிலை வளர்ப்புப் பகுதிகளிலுள்ள அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் நோயாளர்களின் நோயெதிர்ப்பு சக்தியை மெருகூட்டும் நோக்குடன், இலங்கை தேயிலை சபையினால் ரூபா 1.2 5மில்லியன் பெறுமதியான சிலோன் தேயிலைகள் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன.

4 தரமான கல்வி

- இலங்கை தேயிலை சபையிலுள்ள பிரிவுகளின் தலைமை அதிகாரிகளின் வழிகாட்டல்களுடன், ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சி நிகழ்வுகளில் 19 ஊழியர்கள் பங்குபற்றினர்.
- சிலோன் தேயிலை மற்றும் அதன் தரம் மற்றும் தேயிலைத் தொழிற்துறை தொடர்பான தற்போதைய தகவல்கள் தொடர்பான விழிப்புணர்வை மேலும் அதிகரிக்கும் பொருட்டு, "தொறமடலவ" சுயாதீன தொலைக்காட்சி நிகழ்வில் இலங்கை தேயிலை சபையின் ஊழியர்கள் பங்கேற்றனர்.

5 பாலின சமத்துவம்

- இலங்கை தேயிலை சபையில் பாலின வேறுபாடுகள் எதுவுமின்றி, அனைத்து நடவடிக்கைகளிலும் அனைத்து பங்குதாரர்களும் கலந்துகொள்வதற்காக ஊக்குவிக்கப்படுவர். இலங்கை தேயிலை சபையின் ஊழியர்கள் எந்தவிதமான பாலின வேறுபாடுகளுமின்றி தங்களது தொழிற்பாடுகளில் ஈடுபடுவர்.

- நிறைவுற்ற 2022 இல், இலங்கை தேயிலை சபையினால், வட்டியைச் செலுத்தும் சூரியமின்சக்தி மானியத்திட்டம் அறிமுகம்செய்யப்பட்டதுடன், இதன் கீழ், வட்டிக் கட்டணமாக ரூபா 23 மில்லியன்கள் செலுத்தப்பட்டது.





- இலங்கை தேயிலை தொழிற்துறையில், உற்பத்தியிலான புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் பன்முகப்படுத்தலை ஊக்குவிப்பதற்கான மானியத்திட்டத்திலான புதிய திட்டமிடல் செயற்பாடுகள்
- பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக 5 % ஊக்குவிப்புத்தொகையை அறிமுகம்செய்தல் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு செலுத்துவதற்காக ரூபா 572 மில்லியன் தயார்நிலையிலுள்ளது.

- தேயிலைத் தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் திட்டம் அமுல்படுத்தப்பட்டதுடன், இத்திட்டத்தின் கீழ் ரூபா 22.7 மில்லியன்களுடன் 27 தொழிற்சாலைகள் உள்வாங்கப்பட்டன.





- தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தினை மேம்படுத்தி, சர்வதேச அங்கீகாரத்தினை பெறுவதற்கு, தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான HACCP சான்றுதலைப் பெறுவதற்காக மானியத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.
- தேயிலை ஏற்றுமதியாளர் இயந்திர மானியத்திட்டத்துக்கு பங்களிப்புச் செலுத்தல்.

- தேயிலைக் காணிகளுக்கான முறையான நீர்ப்பாசனக் கட்டமைப்பினை நிறுவும்பொருட்டு நீர்ப்பாசன மானியத்திட்டத்தினை அறிமுகம் செய்தல். இத்திட்டத்துக்காக, 2022 ஆம் ஆண்டு திறைசேரியினால் ரூபா 24.5 மில்லியன் வழங்கப்பட்டது.
- உயர் நிழல் மேலாண்மைத்திட்டத்தினை அமுல்படுத்தல்





- கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவியுடன் இலங்கை தேயிலை சபை, எகிப்துக்கான தேயிலை ஏற்றுமதி நிருவனங்களுடன் இணைந்து, அதியுயர் தரம்கொண்ட சிலோன் தேயிலையை விரும்பித் தேடும் நுகர்வோரிடையே சிலோன் தேயிலையை ஊக்குவிக்கும் நோக்குடன், கெய்ரோவின் டேண்டி விற்பனைக்கூடத்தில் சிலோன் தேயிலைக்கான கியோஸ்க் ஒன்றைத் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.
- பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கிடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையிலான, உற்பத்தி இடத்துக்கான விசேட விதியினை (PSR) அறிமுகப்படுத்த, பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் வாகனத் துறை தொடர்பான கூட்டுப் பணிக்குழுவின் 3வது கூட்டத்திற்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.
- பெறுமதிசேர் தேயிலைப் பைகளுக்கான தேயிலை விற்பனை நிலையத்தை கராய்ச்சியில் நிறுவுவதற்கு, பாகிஸ்தானிலுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முன்மொழிவுகள் கராய்ச்சியிலுள்ள தூதரகத்தினால் சேகரிக்கப்பட்டது.

5. நிதியியல் மீளாய்வு

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

சொத்துக்கள்	குறிப்புகள்	2022 (ரூபா.)	2021 (ரூபா.)
நடப்பு அல்லாத சொத்துக்கள்			
ஆதனங்கள், ஆலைகள் மற்றும் உபகரணங்கள்	F	1,613,886,378	908,011,343
முற்பணம் செலுத்தப்பட்ட குத்தகைக்காணி உரிமை	G	2,427,337	2,503,722
அருவச் சொத்துக்கள்	H	28,993,877	24,353,347
		1,645,307,592	**934,868,413**
நடப்பு சொத்துக்கள்			
கையிருப்புக்கள்	I	34,494,977	32,614,625
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள்	J	476,573,193	133,629,022
வைப்புத்தொகை மற்றும் முற்பணங்கள்	K	59,668,267	30,610,919
ஏனைய நிதியியல் சொத்துக்கள்	L	9,881,196,687	8,752,587,569
கடன்கள்	M	1,055,385,399	1,244,653,507
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	N	388,067,757	174,934,865
		11,895,386,281	**10,369,030,507**
மொத்த சொத்துக்கள்		**13,540,693,873**	**11,303,898,919**
பங்குரிமை மூலதனமும், பொறுப்புக்களும்			
பங்களித்த மூலதனம்		672,012,202	672,012,202
தக்க வருவாய்		41,600,571	(172,889,012)
ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி	O	9,869,442,654	9,476,026,219
மீள்மதிப்பீட்டு இருப்பு		1,275,202,496	537,223,481
மொத்த பங்குரிமை மூலதனம்		**11,858,257,923**	**10,512,372,890**
நடப்பு அல்லாத பொறுப்புக்கள்			
ஊழியர் சேமலாபக் கடமைகள்	P	43,699,322	58,344,044
		43,699,322	**58,344,044**
தற்போதைய பொறுப்புக்கள்			
செலுத்தத்தக்க வருமான வரி	Q	163,276,674	22,959,560
வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகள்	R	1,308,577,437	709,462,475
வங்கி மிகைப்பற்று	S	215,852	759,950
வங்கிக் கடன்		166,666,666	-
		1,638,736,629	**733,181,985**
மொத்த பொறுப்புகள்		**13,540,693,873**	**11,303,898,919**

இவ் நிதியியல் கூற்றுக்களின் உள்ளகப் பகுதிகளில், 76 தொடக்கம் 88 வரையான பக்கங்களில் கணக்காய்வுக் கொள்கைகளும், 90 தொடக்கம் 105 வரையான பக்கங்களில் குறிப்புக்களும் உள்ளடங்குகின்றன. நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்குப் பொறுப்பாக பணிப்பாளர் வாரியம் தொழிற்படுகின்றது. இவ் நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் வாரியத்தினால் ஒப்புதழலளிக்ககப்பட்டு

Director Finance
Date: 27.02.2023

Director General
Date: 27.02.2023

Chairman
Date: 27.02.2023

Director
Date: 27.02.2023

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	குறிப்புகள்	2022 (ரூபா.)	2021 (ரூபா.)
வருமானம்	A	797,122,462	616,447,345
செலவுகள்			
தேயிலைப் பிரிவு அபிவிருத்திக்கான செலவுகள்	B	(144,658,596)	(177,021,114)
நிர்வாகச் செலவுகள்	C	(504,880,134)	(449,018,159)
தொழிற்பாட்டு மிகை/ (குறைபாடு)		147,583,732	(9,591,928)
நிதியியல் வருமானம்	D	75,129,356	22,916,904
நிதியியல் செலவுகள்	E	(174,594)	(169,885)
மிகை / (குறைபாடு) வரிவிதிப்புக்கு முன்னர்		222,538,495	13,155,091
வரி வருமானத்தில் செலுத்தப்பட்ட வரி	Q	(12,248,758)	(4,961,058)
வரி விதிப்புக்குப் பின்னரான மிகை / (குறைபாடு)		210,289,737	8,194,033

நிதிக்கூற்றுக்களின் உள்ளகப்பகுதிகளில் 71 தொடக்கம் 84 வரையான பக்கங்களில் கணக்காய்வுக்கொள்கைகளும், 85 தொடக்கம் 90 வரிவான பக்கங்களில் குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

	2022 (ரூபா.)	2021 (ரூபா.)
குறிப்பிட்ட காலத்துக்குரிய மிகை / (குறைபாடு)	210,289,737	8,194,034
உண்மையான மதிப்பீடு	24,704,215	-
மீள்மதிப்பீட்டு மிகை	737,979,015	-
குறிப்பிட்ட காலத்துக்குரிய மிகை / (குறைபாடு)	972,972,967	8,194,034

நிதிக்கூற்றுக்களின் உள்ளகப்பகுதிகளில் 76 தொடக்கம் 88 வரையான பக்கங்களில் கணக்காய்வுக்கொள்கைகளும், 90 தொடக்கம் 105 வரையான பக்கங்களில் குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	பங்களிப்பு மூலதனம் (ரூபா)	ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி (ரூபா)	மீள்மதிப்பீட்டு இருப்பு (ரூபா)	திரட்டப்பட்ட இலாபம்	மொத்தம் (ரூபா)
சனவரி 01, 2020 லான மிகுதி	672,012,202	9,003,547,467	509,766,986	(117,001,094)	10,068,325,560
ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி (குறிப்பு- 0)	-	148,907,390	-	-	148,907,390
சீராக்கல்கள்	-	(1,064,340)	-	411,077	(653,263)
2020 ஆம் ஆண்டுக்கான மிகை	-	-	27,456,495	(21,447,654)	6,008,840
சனவரி 31, 2020 லான மிகுதி	672,012,202	9,151,390,518	537,223,481	(138,037,672)	10,222,588,528
சனவரி 01, 2021 லான மிகுதி	672,012,202	9,151,390,518	537,223,481	(138,037,672)	10,222,588,528
ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி (குறிப்பு- 0)	-	744,046,097	-	-	744,046,097
சீராக்கல்கள்	-	(419,410,396)	-	(43,045,374)	(462,455,769)
2021 ஆம் ஆண்டுக்கான மிகை	-	-	-	8,194,034	8,194,034
சனவரி 31, 2021 லான மிகுதி	672,012,202	9,476,026,218	537,223,481	(172,889,012)	10,512,372,889
சனவரி 01, 2022 லான மிகுதி	672,012,202	9,476,026,219	537,223,481	(172,889,012)	10,512,372,889
ஊக்குவித்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி (குறிப்பு- 0)	-	391,720,699	-	-	391,720,699
சீராக்கல்கள்	-	1,695,736	-	(20,504,369)	(18,808,633)
உண்மையான இலாபம்		-	-	24,704,215	24,704,215
2022 ஆம் ஆண்டுக்கான மிகை	-	-	737,979,015	210,289,737	948,268,752
சனவரி 31, 2022 லான மிகுதி	672,012,202	9,869,442,653	1,275,202,496	41,600,571	11,858,257,923

இந்நிதிக்கூற்றுக்களின் உள்ளகப்பகுதிகளில்,76 தொடக்கம் 88 வரையான பக்கங்களில் கணக்காய்வுக்கொள்கைகளும், 90 தொடக்கம் 105 வரையான பக்கங்களில் குறிப்புக்களும் தரப்பட்டுள்ளன.

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா.)	2021 (ரூபா.)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளி லிருந்தான காசுப்பாய்ச்சல்		
தொழிற்பாட்டுகளிலிருந்தான தேறிய இலாபம்	**222,538,495**	**13,155,091**
கீழ்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்		
தற்பாதுகாப்புக் கருவிகளுக்கான தேய்மானம்	42,208,606	38,154,509
PPE ஐ வெளியகற்றியதாலான இலாபம்/ நஷ்டம்	1,380,288	930
விரய சொத்துக்களுக்கான பதிவழிப்புக்கள்	2,193,170	3,909,037
குத்தகைக் காணிகளுக்கான பதிவழிப்புக்கள்	76,385	76,386
நிலையான சொத்துக்கள்	(691,683,083)	-
உண்மையான இலாபம்	24,704,215	-
மீள்மதிப்பீட்டு ஒதுக்கீடு	737,979,015	-
பணிக்கொடை சீராக்கல்கள்	(12,348,938)	957,006
நிதிச்செலவுகள்	174,594	169,885
நிதி வருமானம்	(75,129,356)	(22,916,904)
சீராக்கல்கள்	(18,808,633)	6,198,261
	10,746,263	**26,549,109**
தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்	**233,284,758**	**39,704,201**
இருப்புக்களின் குறைவு/ (அதிகரிப்பு)	(1,880,352)	2,779,513
வர்த்தகம் மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளின் குறைவு/ (அதிகரிப்பு)	(342,944,171)	(45,309,268)
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளின் குறைவு/ (அதிகரிப்பு)	(29,057,348)	18,737,812
வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் குறைவு/ (அதிகரிப்பு)	599,114,962	68,568,208
செலுத்தத்தக்க வருமானவரி குறைவு/ (அதிகரிப்பு)	128,068,355	(11,654,903)
ஆர் பி சி களுக்கான கடன்	189,268,108	456,092,767
	542,569,554	489,214,129
தொழிற்பாட்டிலிருந்து உருவாகிய பணம்	**775,854,312**	**528,918,331**
செலுத்தப்பட்ட ஊழியர் நன்கொடை	(2,295,785)	(13,074,643)
ஊக்குவித்தல் செயற்பாடுகளுக்கான தேறிய செலவுகள்	391,720,699	743,107,885
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய பணம்	**389,424,914**	**730,033,242**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான (பயன்பாட்டு) காசுப்பாய்ச்சல்	**1,165,279,226**	**1,258,951,571**
முதலீட்டுநடவடிக்கைகளுக்கான (பயன்பாட்டு) காசுப்பாய்ச்சல்		
தற்பாதுகாப்புக் கருவிகளின் (PPE) விற்பனையில் கிடைக்கபெற்ற பணம்	195,532	7,900
நிதி வருமானம்	75,129,356	22,916,904
அருவச் சொத்துக்களை சுவீகரித்தல்	(6,735,492)	(9,578,977)
சொத்துக்கள் மற்றும் உபகரணங்களை சுவீகரித்தல்	(58,074,586)	(112,172,285)
ஊக்குவித்தல் மற்றும் பாராமரிப்பு வரி உள்ளடங்கலாக முதலீடுகள்	(1,128,609,119)	(1,131,297,836)
மூலதன நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்	**(1,118,094,308)**	**(1,230,124,294)**
நிதி நடவடிக்கைகளுக்கான காசுப்பாய்ச்சல்கள்		
நிதிச் செலவுகள்	(174,594)	(169,885)
வங்கிக்கடன்	166,666,666	-
நிதி நடவடிக்கைகளுக்கான தேறிய காசுப்பாய்ச்சல்கள் (பயன்பாட்டு)	**166,492,072**	**(169,885)**
காசு மற்றும் காசுக்குச் சமனானவற்றிலான தேறிய அதிகரிப்பு	**213,676,990**	**23,696,335**
வருடத்தின் ஆரம்பத்திலான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	**174,174,915**	**150,478,579**
வருடத்தின் ஆரம்பத்திலான காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்	**387,851,905**	**174,174,915**

நிதிக்கூற்றுக்களின் உள்ளகப்பகுதிகளில் 71 தொடக்கம் 84 வரையான பக்கங்களில் கணக்காய்வுக் கொள்கைகளும், 85 தொடக்கம் 90 வரையான பக்கங்களில் குறிப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நிதியியல் நிலைமைக் கூற்று
திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

1. பெருநிறுவனத் தகவல்கள்

பொதுவான விடயங்கள்

இலங்கை தேயிலை சபையானது (SLTB), 1976 ஆம் ஆண்டுக்கான 14 ஆம் இலக்க தேயிலைச்சட்டத்தின் கீழ், 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி நிறுவப்பட்டதுடன், இல 17, 1985, இல 44, 1990 மற்றும் இல 29, 2003 மற்றும் இல 44, 2006 ஆகிய பிரிவுகளின் கீழ் திருத்தியமைக்கப்பட்டன. இதன் தலைமைக்காரியாலயம், இல 574 காலி வீதி, கொழும்பு 3 இல் அமையப்பெற்றுள்ளது.

கடந்த 2022, திசம்பர் 31 இல் நிறைவுற்ற வருடத்தின் பன்னிரண்டு மாதங்களுக்கான நிதியியல் கூற்றுக்கள் இலங்கை தேயிலை சபையினால் தயாரிக்கப்பட்டதுடன், அதற்கான அங்கீகாரம் பணிப்பாளர் வாரியத்தினால் 2023, பெப்ரவரி 27 இல் வழங்கப்பட்டது.

பிரதான செயற்பாடுகள்

இலங்கையில் தேயிலைத் தொழிற்துறையினை அபிவிருத்தி செய்தல், ஒழுங்குபடுத்தல் மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கைத் தேயிலையை ஊக்குவித்தல் ஆகியன இலங்கை தேயிலை சபையின் நோக்கங்களாக அமையப்பெற்றுள்ளன. மேலும் தேயிலைத் தொழிற்பேட்டையின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதும் இலங்கை தேயிலை சபையின் பொறுப்பாகும். உற்பத்தி, புதிய பகுதிகளில் பயிரிடுதல், மீள்நடுகை, பழைய தோட்டங்களை மீளக்கட்டமைத்தல், தொழிற்சாலைகளை நிறுவுதல் மற்றும் அவற்றினை தொழிற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளினூடாக தேயிலைத் தொழிற்துறையின் செயற்பாடுகளை சீர்செய்யும் பொறுப்புக்களுக்கான அங்கீகாரத்தினைக் கொண்டுள்ளது. அத்துடன் ஏலத்தினை வழிநடத்தல், தர நிர்ணயத்தினை கண்காணித்தல் மற்றும் தேயிலை விற்பனைகள், ஏற்றுமதிகள், களஞ்சியப்படுத்தல் மற்றும் கப்பலுக்கு அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளும் சீரமைக்கப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்களை முகாமை செய்தல் மற்றும் தேயிலை உற்பத்தி சந்தைப்படுத்தலுடன் தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் போன்றனவும் இலங்கை தேயிலை சபையினால் சீரமைக்கப்படுகின்றன.

2.தயாரிப்பின் அடிப்படை

2.1 கடந்த 2012 ஆம் ஆண்டு சனவரி 01 இல் அல்லது அதன் பின்னரான நிதியாண்டுப் பகுதியில், SLAS (SL-FRS மற்றும் LKAS) ஐ தயாரித்தல் மற்றும் அதனை அமுல்படுத்துவதற்கான அடிப்படை ஆரம்பமாகியது.

இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட, SLFRS மற்றும் LKAS ஐ உள்ளடக்கிய இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கமைவாக நிதியியல் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.

2.2 அளவீட்டின் அடிப்படை

தரம் மற்றும் ஏனைய சான்றுதழ்களை வழங்குதல்	-	17,900
தேயிலை இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்	29,081,969	33,734,131
இறக்குமதி விண்ணப்பப்படிவங்களை விற்பனை செய்தல்	15,160	12,920
தொழிற்சாலையைப் பதிவுசெய்தல்	-	1,000,000
களஞ்சியசாலைகளைப் பதிவுசெய்தல்	575,000	725,000
களஞ்சியசாலைகளைப் புதுப்பித்தல்	3,050,000	2,440,000
தேயிலை உற்பத்தியாளர்களைப் பதிவுசெய்தல்	330,000	330,000
நிராகரிக்கப்பட்ட தேயிலைக் கொள்வனவுக்கான அனுமதிப்பத்திரம்	42,115,069	46,523,615
தேயிலை இறக்குமதியாளர்களைப் பதிவுசெய்தல்	20,000	475,000
வங்கிப் பிணையை விடுவிப்பதற்கான அனுமதிப்பத்திரம்	414,000	453,000
தேயிலை மாதிரிகளை சுவைத்தலினூடாக ஈட்டும் வருமானம்	815,500	949,960
தேயிலைப் பொதிகள் / ஏனைய தேயிலை மூலங்களைப் பதிவு செய்தல்	314,500	375,000
தேயிலைத் தொழிற்சாலை பதிவுகளைப் புதுப்பித்தல்	4,550,000	4,300,800
தேயிலை இறக்குமதியாளர்களைப் புதுப்பித்தல்	515,000	110,465
உள்ளூர்ப் பொதியாளர்களை பதிவுசெய்தல்	401,800	846,930
தேயிலைத் தொழிற்சாலை பதிவுகளைப் புதுப்பித்தல்	785,225	-
GMP சான்றுதழ் கட்டணம்	2,364,500	1,237,500
தேயிலை மாதிரிகளை பரிசோதிக்கும் கட்டணம்	1,439,864	818,327
	159,546,286	163,952,167

நிதியியல் நிலைமைக் கூற்று
திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
03. வர்த்தக நடவடிக்கைகளிலிருந்தான தேறிய வருமானம்		
தேயிலை விற்பனைகள்	16,792,380	6,809,891
ஏற்றுமதியாளர் பொதி விற்பனைத் தரகு	6,744,081	4,227,002
ஏகபோக வாடகை	-	108,333
துணிப்பை விற்பனைகள்	91,080	50,504
நாணய மாற்றிலான வித்தியாசம்	1,097	1,315
வெளிநாட்டு நாணய விற்பனையிலான வருமானம்	27,365	-
	23,656,003	**11,197,045**
தேயிலைக்கான செலவு	(11,728,029)	(4,460,834)
வெற்றுப்பெட்டிகளுக்கான செலவு	-	(557,823)
கொண்டுசெல்லும் பொதிகளுக்கான செலவு	-	(738,942)
ஊழியர் பணிக்கொடை	(1,004,304)	(185,325)
கடனட்டைக்கான தரகு	(723,505)	(238,992)
வர்த்தக நடவடிக்கைகளினாலான தேறிய இலாபம்	**(10,200,165**	**5,015,129**
04. நுவரேலியா விற்பனை நிலையம் மற்றும் உல்லாச விடுதி		
விற்பனை நிலையம் - வாடகை வருமானம் மற்றும் விற்பனைத் தரகு	682,954	500,342
உல்லாச விடுதி	331,000	34,350
	1,013,954	**534,692**
05. ஏனைய வருமானம்		
ஊழியர் கடன்களுக்கான வட்டி	1,545,236	1,612,404
பல்வேறு வருமானம்	4,993,316	2,391,409
விற்பனைப் புள்ளிவிபரவியலின் சாரம்சம்	117,786	87,350
வழங்குனர்களைப் பதிவுசெய்தல்	458,000	266,000
செய்தி மடல்	108,000	414,000
விளம்பரங்கள், குறிப்பேடுகள் மற்றும் ஏனையவற்றை விற்பனை செய்தல்	12,135	7,342
நிலையான சொத்துக்களின் வெளியகற்றல்	1,380,288	-
தேயிலை ஏற்றுமதியாளர் விபரக்குறிப்பு/ விளம்பரங்களை பதிவுசெய்தல்	27,000	-
பகுப்பாய்வு செலவுகள்	14,500	-
பரீட்சை செலவுகள்	-	173,000
	8,656,261	**4,951,505**
06. நிர்வாகச் செலவீனங்கள்		
6.1 **தனிப்பட்ட ஊதியங்கள்**		
சம்பளங்கள்	123,334,154	130,404,590
ஏனைய கொடுப்பனவுகள் (இடைக்கால/ ஏனையவை)	20,820,170	4,156,736
மேலதிக நேரக் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள்	7,718,512	8,526,646
தினசரி ஊதியக் கொடுப்பனவுகள்	6,287,691	3,953,875
COL கொடுப்பனவுகள்	23,533,120	24,361,165
அலுவலகத்துக்குப் பின்னரான செலவீனங்கள் - ஏற்றுமதிகள்	-	48,825
ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கள்	19,331,151	22,960,283
ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கள்	4,484,233	4,588,831
ஊழியர் பணிக்கொடை	12,355,278	957,006
	217,864,309	**199,957,957**

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
6.2 ஏனைய நிர்வாகச் செலவீனங்கள்		
அங்கத்தவர் சந்தாக்கட்டணம் (தொழில்சார்)	95,663	67,000
ஊழியர் வெகுமதிகள்	6,325,000	4,000,000
மருத்துவ நன்மைகள்/ தனிநபர் விபத்துக் காப்புறுதி	40,657,400	31,947,683
ஊழியர்களுக்கான தேநீர்	3,239,792	1,718,701
ஊழியர்களுக்கான பொதியிடப்பட்ட தேயிலை வழங்கல்	9,019,111	5,653,420
ஊழியர் நலன்புரி	2,475,150	1,620,946
இறப்பு நன்கொடைகள்	750,000	750,000
விளையாட்டுக்கள்/ பொழுதுபோக்கு வசதிகள்	250,000	-
ஊழியர் சொத்துக் கடன்களுக்கான வட்டி	769,106	786,252
ஊழியர்களுக்கான பயிற்சிகள்/ கருத்தரங்குகள்/ செயலமர்வுகள்	640,030	1,099,990
வாரிய/ குழு உறுப்பினர்களுக்கான கட்டணங்கள்	514,500	2,000,500
வாரியகுழுக் கூட்டங்களுக்கான செலவுகள்	161,225	80,835
பகுப்பாய்வு ஆய்வுகூடம்/ நுகரக்கூடியவை	3,926,390	4,494,140
பரீட்சைக் கட்டணங்கள்	144,561	525,815
விநியோகிஸ்தர் வைப்புப்பணத்தை மீள்செலுத்தல்	-	5,000
உசாத்துணை சேவைக்கட்டணங்கள்	356,305	1,395,300
நேர்முகப்பரீட்சை வாரியக் கட்டணம்	26,390	68,280
	69,350,623	56,213,862
07. பிரயாணச் செலவீனங்கள்		
பிரயாணச் செலவீனங்கள் (உள்ளூர்)	21,002,386	17,400,923
	21,002,386	17,400,923
08. வழங்கல்கள் மற்றும் தேவைகள்		
அலுவலக உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தேவைகளை அச்சிடுதல்	7,568,552	9,774,702
எரிபொருள் மற்றும் எண்ணெய்கள்	9,819,488	4,197,406
பொறியியல், மின்னியல் மற்றும் பொதுப் பண்டங்கள்	360,772	217,401
புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்கள்	631,930	785,481
சீருடைகள்	1,829,935	1,593,478
	20,210,677	16,568,468
9. நிலையான சொத்துக்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்		
வாகனங்களை பழுதுபார்த்தல்/ பராமரித்தல்	3,425,900	1,755,636
ஆலைகள் மற்றும் இயந்திரங்களை பழுதுபார்த்தல் / பராமரித்தல்	4,294,267	371,434
கட்டடங்களை பழுதுபார்த்தல் / பராமரித்தல்	12,933,901	5,515,279
அலுவலக உபகரணங்களை பழுதுபார்த்தல் / பராமரித்தல்	15,364,569	7,368,266
தளபாடங்கள் மற்றும் பொருத்துகளை பழுதுபார்த்தல் / பராமரித்தல்	42,014	363,647
ஏனைய பொதுப்பயன்பாட்டு சேவைகள்	52,151	65,359
சுத்திகரிப்பு சேவைகள்	7,844,314	6,700,061
ஆய்வுகூட அங்கீகாரம் மற்றும் உபகரண பரமரிப்புக்கள்	504,391	402,763
	44,461,507	22,542,445

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
10. பொதுவசதிகள் மற்றும் ஏனைய செலவீனங்கள்		
ஊடக அறிவித்தல்கள்	8,941,992	5,909,996
தொலைபேசி, தொலைநகல் மற்றும் இணையம்	6,955,944	9,352,273
அஞ்சல்	1,452,232	958,194
மின்சாரம்	10,095,444	8,665,618
வீதங்கள் மற்றும் வரிகள்	1,535,626	1,476,416
வாடகை	10,283,695	10,141,495
காப்புறுதிக்கட்டணம் - கட்டடங்கள் மற்றும் வாகனங்கள்	1,239,478	1,240,675
பாதுகாப்பு சேவைகள	12,568,734	11,826,486
தணிக்கைக் கட்டணம்	1,228,100	1,000,000
சட்ட கட்டணங்கள்	945,040	360,957
ஏனைய கட்டணங்கள்	1,457,947	655,843
தேயிலை மாதிரி பரிசோதனைக் கட்டணங்கள்	3,037,012	4,592,792
நீர் வழங்கல் மற்றும் வெப்பமாக்கல்	1,038,038	811,498
தேயிலை சுவைத்தல் வாரியத்துக்கான கட்டணம்	3,506,532	2,104,380
சில்லறை செலவுகள்	680,111	550,097
பிரயாண மற்றும் வாகன வாடகைக் கட்டணங்கள்	-	70,000
வாகனங்களுக்கான குத்தகை வாடகை	22,231,371	19,928,976
காணிகளுக்கான குத்தகை வாடகை	480,000	620,400
வெளியகற்றலினால் ஏற்படும் இழப்புக்கள்	-	931
கோவிட் - 19 னாலான செலவீனங்கள்	1,199,275	15,564,842
நுவெலிரேயா செலவீனங்கள்	207,099	29,750
	89,083,669	95,861,619
11. பங்குகள்		
11.1 ஆய்வுகூடம்		
ஆய்வுகூட நுகர்வுப்பொருட்கள்	11,797,799	10,947,475
	11,797,799	10,947,475
11.2. நுகர்வுப்பொருட்கள்		
அலுவலக உபகரணங்கள்	8,279,224	6,723,205
ஊக்குவித்தல் பொருட்கள்	818,272	2,017,917
	9,097,496	8,741,122
11.3 தேயிலை மற்றும் ஏனைய பங்குகள்		
தேயிலை - பிரதான விற்பனைக்கூடம்	6,455,499	3,239,036
தேயிலை - விற்பனைக் நிலையம்	266,463	228,440
ஊழியர் தேயிலை	711,710	601,140
வெறுமையான பெட்டிகள்	4,288,556	6,314,183
எடுத்துச்செல்லும் பைகள்	79,994	74,956
கழுத்துப் பட்டிகள்	45,000	33,400
	11,847,221	10,491,154

நிதியியல் நிலைமைக் கூற்று
திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
11.4 கொண்டுசெல்லுதற்குரிய பொருட்கள்	1,752,461	2,434,872
	1,752,461	2,434,872
	34,494,977	32,614,625
12. பெறத்தக்கவைகள்		
NIPM வாகனங்களுக்கான கடன்	1,333,333	-
பெறத்தக்க மானியங்கள்	53,505,130	37,713,740
கடனாளிகள் - கிரிக்கெட் மேலங்கி	-	679,123
கடனாளிகள் கட்டுப்பாடு	811,372	4,200,041
பெறத்தக்க வருமானம்	1,303,359	2,615,679
பொதியிடப்பட்ட தேயிலை விற்பனைகள்	328,607	638,597
குறைபாடுகள்	367,790	195,463
	57,649,591	**46,042,643**
12.1 தூதரகக் கணக்கு		
சீனா	84,764	84,764
ஜப்பான்	-	472,024
பிரான்ஸ்	-	389,602
போலந்து	-	405,645
அவுஸ்திரேலியா	47,810	28,295
	132,574	1,380,330
12.2 தேயிலை ஊக்குவித்தல் அலகு - நடைமுறைக் கணக்குகள்		
ஐக்கிய அரபு இராட்சியம்	10,713,769	9,623,369
மொஸ்கோ	9,330,450	3,971,946
சீனா	3,446,805	1,038,059
	23,491,024	14,633,374
13. கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்		
தேயிலைத் தரகர்களுக்கு வழங்கப்பட்ட நிதி வசதிகள்	322,043,365	-
ஒருங்கிணைந்த கடன்கள் - TCD	5,251,360	5,784,906
ஒருங்கிணைந்த கடன்கள் - HO	33,405,543	31,310,803
முற்பணம்- களியாட்டம்	435,650	446,900
ஊழியர் தேயிலை மீட்டெடுப்புக்கள்	46,110	148,650
ஊழியர் கடனாளிகள்	16,500	18,337
முற்கொடுப்பனவுகள் - சிறிய தேயிலை உற்பத்தியாளர்களுக்குரிய அபிவிருத்தி அதிகாரசபை	33,470,665	33,470,666
முற்கொடுப்பனவுகள்	619,352	-
கடன்கள் மற்றும் முற்பணம் - மொஸ்கோ	11,459	392,415
	395,300,004	71,572,677

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
14. வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்		
வைப்புக்கள்	6,269,386	6,182,536
முத்திரை வைப்பு	160,000	160,000
பொதி அஞ்சல் வைப்பு	44,940	44,940
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் - ஐக்கிய அரபு இராட்சியம்	-	249,130
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் - மொஸ்கோ	-	66,510
வைப்புக்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் - சீனா	372,369	691,801
முற்கொடுப்பனவுகள்	48,273,744	10,161,541
அணிதிரட்டலுக்கான முற்பணம்	4,547,828	13,054,461
	59,668,267	30,610,919
15. முதலீடுகள்		
நிலையான வைப்பு - இ.தே.சபை	536,983,997	406,500,000
பெறத்தக்க நிலையான வட்டி - இ.தே.சபை	21,285,498	7,691,644
நிலையான வைப்பு - ஊக்கு. மற்றும் பரா. வரி	9,145,424,351	8,138,139,498
பெறத்தக்க நிலையான வைப்பு வட்டி - ஊக்கு. மற்றும் பரா. வரி	174,524,300	197,367,714
வீட்டுக் கடன் வைப்புக்கள் - எஸ்.எம்.ஐ.பீ	2,978,541	2,888,712
	9,881,196,687	8,752,587,568
16. காசு மற்றும் காசுக்குச் சமனானவை		
16.1 **காசு**		
நாளந்த செலவுப் பணஈர்ப்பு - முத்திரை	10,000	10,000
நாளந்த செலவுப் பணஈர்ப்பு - நிர்வாகம்	25,000	25,000
கையிலுள்ள விற்பனைகளின் சேகரிப்பு	727,371	609,980
	762,371	644,980
16.2 **வங்கி மிகுதிகள்**		
BOC - கொள்ளுப்பிட்டி, 2வது கிளை	144,157,678	62,237,032
BOC - பெருநிறுவனம் (தலைமைக் காரியாலயம்)	23,000	385,192
BOC - பம்பலப்பிட்டி	28,484,916	639,779
BOC - பெருநிறுவன (TCD)	6,807,022	6,360,656
BOC - சுதந்தர சதுர்க்கம்	124,764,637	1,037,195
BOC - தேயிலை மாளியம்	18,048,224	93,105,339
மக்கள் வங்கி	49,777,984	14,250
	372,063,461	163,779,443

நிதியியல் நிலைமைக் கூற்று

திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
16.3 BOC இலங்கை வங்கி பிராந்திய அலுவலக நடைமுறைக் கணக்குகள்		
காலி	535,556	524,201
மாத்தறை	166,650	371,819
இரத்தினபுரி	847,887	1,330,979
மத்துகம	222,569	492,173
பண்டாரவளை	547,919	198,679
கம்பளை	77,475	45,621
நுவரெலியா	208,766	228,517
	2,606,822	3,191,989
16.4 BOC இலங்கை வங்கி பிராந்திய அலுவலக சேகரிப்புக் கணக்குகள்		
கம்பளை	9,466,261	3,293,896
மத்துகம	2,078,288	2,529,398
இரத்தினபுரி	-	21,254
நுவரெலியா	43,498	
மாத்தறை	-	16,940
	11,588,047	5,861,488
16.5 பிராந்திய அலுவலக நடைமுறைக் கணக்குகள்		
இரத்தினபுரி	113,400	-
காலி	-	93,381
கம்பளை	290,829	112,151
மத்துகம	306,502	-
நுவரெலியா	188,377	108,820
பண்டாரவளை	147,950	1,142,613
	1,047,058	1,456,965
	388,067,757	174,934,864
17. கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள்		
17.1 வர்த்தக செலுத்தத்தக்கவைகள்		
செலுத்தத்தக்கவைகள்	7,486,740	16,713,008
கடன் வழங்குனர் கட்டுப்பாடு	139,325	1,375,920
கடனுக்கான தேயிலை முற்பதிவு	24,643	24,642
கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள் - சீனா	-	39,530
கடன் வழங்குனர்கள் மற்றும் விதிகள் - மொஸ்கோ	5,563	508,669
செலுத்தத்தக்க பச்சை இலை மானியம்	-	912,230
	7,656,271	19,573,999

நிதியியல் நிலைமைக் கூற்று
திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
17.2 ஏனைய செலுத்தத்தக்கவைகள்		
பொதுவான வைப்புக்கள்	220,454,440	220,410,000
மீள்செலுத்தக்கூடிய ஒப்பந்த வைப்புக்கள்	32,739,613	36,609,795
SLTB இன் உத்தியோகபூர்வ பொதியாளர்	7,985,021	3,321,121
ஊழியர் கடன் வழங்குனர்கள்	6,327,395	4,092,127
நிலுவைகள் - பச்சை இலை வைப்பு	92,245,738	8,935,370
Cusdec வைப்பு	161,400	161,400
தக்கவைப்பு ஊக்கத்தொகை - விற்பனை நிலையம்	93,985	18,532
செலுத்தத்தக்க VAT வரி	3,288,923	1,917,595
	363,296,515	275,465,939
17.3 முன்கூட்டிய ரசீதுகள்		
நுவரேலியா - விற்பனை நிலையம்	1,620,000	1,620,000
வர்த்தகக் கண்காட்சி	24,275,448	18,600,000
அனுமதிப்பத்திரக் கட்டணம்	7,920,100	7,697,000
நிராகரிக்கப்பட்ட தேயிலை	887,500	915,000
களஞ்சியசாலைகளைப் புதுப்பித்தல்	1,280,000	1,990,000
தரகர்களை நியமிப்பதற்கான அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,250,000	1,750,000
தேயிலைப் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்	225,000	150,000
தேயிலை ஏற்றுமதியாளர்களைப் புதுப்பித்தல்	32,057,500	36,250,000
தேயிலைப் பொதியாளர்களைப் புதுப்பித்தல்	2,255,000	2,560,000
தேயிலைக் களஞ்சியசாலைகளை பதிவுசெய்தல்	135,000	75,000
தேயிலை ஏற்றுமதியாளர்களைப் பதிவுசெய்தல்	250,000	150,000
உள்ளூர் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்	20,000	70,000
தேயிலை ஏற்றுமதியாளர்களைப் புதுப்பித்தல்	395,000	440,000
SLTB ஊழியர்களுக்கான மருத்துவக்காப்புறுதி வைப்பு	910,600	711,200
முன்கூட்டிய ரசீதுகள் (தேயிலைத் தொழிற்சாலை பதிவுகளை புதுப்பித்தல்)	1,695,000	1,375,000
முன்கூட்டிய ரசீதுகள் (தேயிலைத் இறக்குமதியாளர்களை பதிவுசெய்தல்)	-	10,000
முன்கூட்டிய ரசீதுகள் (உள்ளூர் பொதியாளர்களைப் பதிவுசெய்தல்)	192,500	211,900
முன்கூட்டிய ரசீதுகள் (ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வரிகள்)	46,694,389	40,553,780
விற்பனை நிலையம் - வாடகை வைப்பு	960,000	1,680,000
வைப்பு - BMF	345,742	345,743
	123,368,778	117,154,623
17.4 திரட்டப்பட்ட செலவுகள்		
திரட்டப்பட்ட செலவுகள்	25,098,260	12,266,405
திரட்டப்பட்ட செலவுகள் - P & M வரி	610,706,415	44,514,203
	635,804,675	56,780,608

நிதியியல் நிலைமைக் கூற்று
திசம்பர் 31, 2022 இல் உள்ளவாறானது

	2022 (ரூபா)	2021 (ரூபா)
17.5 திரட்டப்பட்ட செலவுகள்		
பிரயாணம்	5,643,701	4,284,097
தணிக்கைக் கட்டணம்	2,228,100	1,894,000
கருவிகள் மற்றும் அலுவகலத் தேவைகளை அச்சிடுதல்	1,051,670	139,332
எரிபொருள் மற்றும் மசகு எண்ணைகள்	664,385	307,910
பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்கள்	247,550	21,590
பராமரிப்பு செலவுகள்	680,701	114,164
அஞ்சல் மற்றும் தொடர்பாடல்	780,965	607,514
மின்சாரம் மற்றும் குடிநீர்	1,080,078	755,492
வாடகை மற்றும் உள்ளூர் வரிகள்	150,000	55,000
சுத்திகரிப்பு சேவைகள்	644,729	745,152
பாதுகாப்பு சேவைகள்	1,075,623	1,055,979
மருத்துவ நன்மைகள்	3,255,588	3,707,880
கொவிட் 19 செலவுகள்	-	2,005,234
மேலதிக நேர வேலை மற்றும் நாள் வேதனம்	1,609,328	1,099,563
பாரிய மற்றும் நடுத்தர அளவிலான தேயிலைத்தோட்ட செய்கையாளர்களுக்கான நீர் தெளிப்புக் கட்டமைப்புக்கள்	9,031,600	20,310,800
உயிரியல் உரத்திட்டத்துக்கான மானியத் திட்டம்	51,300,000	58,700,000
சூரிய மின்கட்டமைப்புக்களை பொருத்துவதற்கான மானியத் திட்டம்	-	2,777,142
பொறியியல் முறைமையுடனான புதிய மரநடுகைத் திட்டத்துக்கான மானியத் திட்டம்	26,708,400	38,085,000
ஊடக அறிக்கை மற்றும் விளம்பரங்கள்	3,223,486	-
மாதிரி தேயிலைத் தோட்டத்துக்கான மானியத் திட்டம்	21,154,461	30,876,857
GMP - ஈரப்பதன்மானி மானியத் திட்டம்	2,500,000	500,000
தேயிலை நாற்றுப்பண்ணை அபிவிருத்தி செலவுகளுக்கான மானியத்திட்டம்	45,025,000	67,775,000
T200 பசளைத்திட்டம்	-	2,921,700
ஏற்றுமதியாளர் பொறியியல் கூறுகளுக்கான மானியத்திட்டம்	395,833	1,747,900
	178,451,198	240,487,306
18. RPC கடன் மிகுதிகள்		
RPC களியாட்டக்கடன்		
எல்கடுவ பிளாண்டேசன்ஸ் பிஎல்சி		8,760,399
		8,760,399

ஆடிட்டர் ஜெனரல் அறிக்கை - 2020

(ஆடிட்டர் ஜெனரல் அறிக்கையின் தமிழ் வடிவம்)

தலைவர்,
இலங்கை தேயிலை சபை.

தேசிய கணக்காய்வுச் சட்ட இலக்கம் 19, 2018 , பிரிவு 12 இன் பிரகாரம், இலங்கை தேயிலை சபையின் நிறைவுற்ற 2022, திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான, நிதியியல் கூற்றுக்களுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபரின் அறிக்கை மற்றும் ஏனைய சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள்.

1. நிதியியல் கூற்றுக்கள்

1.1. தகுதிவாய்ந்த கருத்துக்கள்

இலங்கை தேயிலை சபையின் 2022 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவுகளுக்கான கூற்று, உரிமை மாற்றங்களுக்கான கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களில் பொளிப்பினை உள்ளடக்கிய 2022 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் இலக்க உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு சேர்த்து வாசிக்கப்படும். எனது அறிக்கையானது, அரசியலமைப்பின் 154(6) ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம் பாராளுமண்றத்தில் அட்டவணைப்படுத்தப்படும்.

எனது அறிக்கையில், "தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை" எனும் தலைப்பின் கீழே விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகளைத் தவிர, 2022 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய, இலங்கை தேயிலை சபையின் நிதியியல் நிலைமை மற்றும் நிதியியல் செயற்பாடுகள் மற்றும் வருடத்துக்கான காசுப்பாய்ச்சல், ஆகியன இலங்கை கணக்காய்வு தரங்களுக்கமைய உண்மையானதும், நியாயமானதுமாக விளங்குகின்றது.

1.2. தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

(அ) ஆதனங்களான, கணனி உபகரணங்கள், நீர் மற்றும் மின்சார உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள், அலங்கார உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், மரத்தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஆகியன ரூபா 132,903,015 பெறுமதியுடையவையாக அமைவதுடன், வருடத்தின் இறுதியில் முழுமையாக தேய்மானமடைந்த நிலையில் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவதுடன், இலங்கையின் 16 வது கணக்கியல் தரநிர்ணயத்தின் 51 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், மேற்குறிப்பிட்ட உபகரணங்களின் வினைத்திறனான வாழ்வுக்காலம் மீளக்கணிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வின் கீழ், இலங்கை தேயிலை சபையின் வருடத்துக்கான முதலீட்டு வருமானத்துக்குரிய வரிச் செலவுகள் அடையாளங்காணப்பட்ட நிலையில், வட்டி வருமானமான ரூபா. 10,493,150 வரி வருமானத்தில் சேர்க்கப்படவில்லையென்பதுடன், நிதியியல் கூற்றுக்களில் வரிச் செலவுகள் மற்றும் செலுத்தத்தக்க வரிச் செலவுகளில் ரூபா 2,518,356 குறையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கியின் இரண்டாவது கிளையிலுள்ள வங்கிக்கணக்கு இல. 1633709 மற்றும் பம்பலப்பிட்டி இலங்கை வங்கிக்கிளையின் வங்கிக்கணக்கு இல. 718391 போன்றவற்றுக்கு வாடிக்கையாளர்களினால் ரூபா 2,602,782 மற்றும் ரூபா 4,900,294 நேரடியாக வைப்பிலிடப்பட்டுள்ளதுடன், அவற்றுக்கான வருமான மூலங்களை அடையாளங்காண முடியாதுள்ளது. அத்துடன், கடந்த வருடத்தில் வருமான மூலம் அடையாளங்காணப்படாத வருமானமாக ரூபா. 4,326,882 காணப்படுகின்றது. இதனடிப்படையில், மீளாய்வின் கீழ் வருடத்துக்கான வருமானம் நிதியியல் கூற்றுக்களில் ரூபா 11,829,958 குறையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) நிதியியல் கூற்றுக்களில் ஆய்வுகூட வருமானமாக ரூபா 19,802,796 குறிப்பிடப்பட்டிருந்தும், ஆய்வுகூடத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இது ரூபா 38,577,200 ஆகக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, இவற்றுக்கிடையிலான வித்தியாசம் ரூபா 18,774,404 ஆக அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இவ் ஆய்வுகூட வருமானத்திலுள்ள வித்தியாசத்தினை சீரமைக்க அல்லது திருத்துவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும், ஆய்வுகூடம் மற்றும் நிதியியல் பிரிவினால் முன்னெடுக்கப்படவில்லை.

(உ) கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கிக்கிளையின் 78285018 எனும் வங்கிக்கணக்கு இலக்கத்தையுடைய நடைமுறைக்கணக்கின் கீழ் ரூபா 1,078,533 பெறுமதியான காசோலையானது வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதமாகியும், இன்னும் குறித்த வங்கிக்கு

சமர்ப்பிக்கப்படவில்லை, இதற்கமைய FR 396 (d) இன் பிரகாரம், எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இது 2019 ஆம் ஆண்டிலிருந்து சரிபார்க்கப்பட்ட திகதியிலிருந்து பின்னர் நிகழும்.

(ஊ) ரஷ்யாவின் மொஸ்கோ நகரில், 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 முதல் 10 வரையான திகதிகளில், ஒழுங்குசெய்யப்பட்ட "Prodexpo 2023" கண்காட்சியில் கலந்துகொள்வதற்கான, வீசா மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காக, ரஷ்ய தூதரகத்துக்கு ரூபா 10,437,337 வழங்கப்பட்டிருந்ததுடன், இது மீளாய்வின் கீழ் இவ்வருடத்துக்கான செலவுகளில் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2023 ஆம் ஆண்டு, ஒழுங்குசெய்யப்பட்ட "Prodexpo 2023" கண்காட்சியில் கலந்துகொள்ளவுள்ள ஏற்றுமதியாளர்களிடமிருந்து செலவுகளில் 50% மான பங்கு ரூபா 11,771,399 மீளப்பெறப்பட்டதுடன், இத்தொகை முற்பணமாக பெறப்பட்டதாக பதியப்படுவதற்குப் பதிலாக, மீளாய்வு வருடத்துக்குரிய செலவுக்கணக்கில் வரவாகக் காட்டப்பட்டது.

(ஏ) கம்பளை பிராந்திய அலுவலகக் கட்டடத்தின் பெறுமதி ரூபா 8,500,000 கடந்த வருடத்துக்குரிய காணி மதிப்பீட்டின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வின் கீழ் இவ்வருடத்தில் கட்டடக்கணக்குக்கு மாற்றப்பட்டது. இப்பெறுமதியானது கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டதாக இவ்வருடத்துக்கான நிதியியல் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(ஐ) காணிகள் ஆணையாளர் நாயகத்தினால், மேல் மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட இல. 4/10/37833 உடைய கடிதத்தின் பிரகாரம், களுத்துறை பிராந்திய அலுவலகத்தினால், இலங்கை தேயிலை சபைக்காகப் பராமரிக்கப்படும் ரூட் 1 மற்றும் 20 பேர்ச் அளவுடைய காணியை, நீண்டகால குத்தகை அடிப்படையில் 2014 ஆம் ஆண்டிலிருந்து 30 வருடங்களுக்கு வழங்குவதற்கான சட்டசபை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகக் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கான குத்தகை ஒப்பந்தம் இன்னும் கையொப்பமிடப்படவில்லை.

(ஒ) இலங்கை தேயிலை சபையினால் நுவரெலியா பிராந்திய அலுவலகம் பராமரிக்கப்படுகின்றபோதிலும், அக்காணிக்கான உரிமை களனி வெலி நிறுவனத்தினால் நுவரெலியா பிரதேச செயலாளரினூடாக சட்டபூர்வமாக சபைக்கு மாற்றப்படவில்லையென்பதுடன், சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் பெறுமதி ரூபா 148,013,695 ஆக அமைந்திருந்தது.

நான், இக்கணக்காய்வினை, இலங்கை கணக்கியல் தரநியமங்களுக்கமைவாக நிறைவேற்றியுள்ளேன். நிதியியல் கூற்றுக்குரிய கணக்காய்வுகளுடன் தொடர்புடையதாக, "கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்" எனும் தலைப்பின்கீழ் மேலும் விபரிக்கப்படுவது, கணக்கியல் தரநியமங்களுக்குக் கீழான எனது கடமையாகும். கணக்காய்வு நடவடிக்கைக்காகப் பெற்றுக்கொண்ட ஆதாரங்கள், எனது தரமான கருத்துக்களை முன்வைக்கப் போதுமானதாகவும், பொருத்தமானதாகவும் அமைந்திருந்ததென நம்புகின்றேன்.

1.3. இலங்கை தேயிலை சபையின் வருடாந்த அறிக்கை 2022 இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்கள்

இதில், இக்கணக்காய்வு அறிக்கையின் நிறைவில், 2021 ஆம் ஆண்டு இலங்கை தேயிலை சபையின் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள, நிதியியல் கூற்றுக்களில் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத, இக்கணக்காய்வின் நிறைவில் என்னிடம் ஒப்படைக்கப்படவுள்ள ஆவணங்கள் உள்ளடங்குகின்றன. ஏனைய தரவுகளுக்குப் பொறுப்பாக மேலாண்மைக்குழு தொழிற்படும்.

நிதியியல் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்களில் ஏனைய விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பவில்லை என்பதுடன், அவை தொடர்பில் எந்தவிதமான சான்றுதழ்களோ, கருத்துக்களோ தெரிவிக்கப்படவில்லை.

நான், எனது கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடங்கள், அவ்விடயங்கள் நிதியியல் கூற்றுக்களுடன் அளவியல் ரீதியாக பொருந்தும் தன்மை அல்லது கணக்காய்வு செயற்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்களினால் பெறப்பட்ட அறிவு தொடர்பில் பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நான், இலங்கை தேயிலை சபையின், 2022 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையினை வாசிக்கையில், அளவுகள் தொடர்பில் பிழையான கருத்துக்கள் கண்டறியப்படுகையில், அவற்றினைத் திருத்தும்வகையில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடுதல் அவசியமாகும். இன்னும், அப்பிழைகள் திருத்தப்படாவிடின், சட்டத்தின் பிரிவு 154 (6) இன் பிரகாரம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் அட்டவணைப்படுத்தப்படும்.

1.4. நிதியியல் கூற்றுக்களில் நிர்வாகம் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புகள்

இலங்கை கணக்கியல் தரநியமங்களுக்கேற்ப, நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் வெளிப்படுத்தல் மற்றும் மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அளவு தவறான அறிக்கைகளிலிருந்து விடுபட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்குத் தேவையான உட்கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் ஆகியன மேலாண்மை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இலங்கை தேயிலை சபையின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதில், தொடர்ச்சியான செயற்பாட்டின் சாத்தியத்தன்மையை தீர்மானிப்பது தலைமை நிர்வாகத்தின் பொறுப்பாகும். மாற்றுவழிகள் எதுவும் கிடைக்காத நிலையில், சபையைக் கலைக்க அல்லது அதன் தொழிற்பாடுகளை இடைநிறுத்த நிர்வாகம் முடிவுசெய்யும் சந்தர்ப்பங்களைத் தவிர, தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்கு வைப்பதும் மற்றும் சபையின் தொடர்ச்சியான இருப்புத் தொடர்பான விபரங்களை வெளியிடுவதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களின் அறிக்கையிடல் செயற்பாடுகளின் பொறுப்பானது ஆளும் தரப்பினருடையதாகும்.

தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பகுதிப்பிரிவு 16 (1) க்கமைய, சபையின் வருடாந்த நிதியியல் கூற்றுக்களை சரியான நேரத்தில் தயாரிக்க, சொந்த வருமானம், செலவீனங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பொருத்தமான முறையில் பராமரிப்பது அவசியமாகும்.

1.5. நிதியியல் கூற்றுக்களில் நிர்வாகம் மற்றும் ஆளும் தரப்பினரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமான நிதியியல் கூற்றுக்களும், மோசடிகள் மற்றும் பிழைகள் காரணமாக, தவறான கூற்றாக அமைவதைத் தவிர்த்து, எனது கருத்துக்களை உள்ளடக்கிய தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதற்கான நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உத்தரவாதமானது அதியுயர் காப்புறுதி உத்தரவாதமாக அமைந்திருந்தும், இலங்கை கணக்கியல் தரநியமங்களின் பிரகாரம் தணிக்கை செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது, எவ்வேளையிலும் அளவுசார் தவறான கூற்றுக்கள் வெளிப்படுத்தப்படும் என உறுதியளிக்கவில்லை. மோசடிகள் மற்றும் பிழைகள், தனித்தனியாக அல்லது கூட்டாக ஏற்படும் விளைவுகளால் அளவுசார் தவறான கூற்றுக்கள் ஏற்படலாம். அத்துடன், இவ் நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு, பொருளாதார முடிவுகளை எடுக்கும் பயனாளிகளுக்கு தாக்கங்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்கியல் தரநியமங்களுடன் தணிக்கையின் ஒரு பகுதியாக, தொழிற்திறனுள்ள தீர்மானங்கள் மற்றும் தொழிலிலான கேள்வித் திறனுடன், இக் கணக்காய்வினை நடத்தியுள்ளேன். மேலுமாக;

- மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக உருவாகக்கூடிய, நிதியியல் கூற்றுக்களின் பிழையான அளவுடைய கருத்துக்களினால் ஏற்படும் அபாயத்தினை அடையாளங்கண்டு, ஆராயும் போது, அந்நிலைமைகளில் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம், மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய அபாயங்களைத் தவிர்ப்பதற்காக, போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதன் அடிப்படையில் எனது கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு மோசடியால் ஏற்படும் விளைவானது, ஒரு தவறான அறிக்கை, மற்றும் உள்கூட்டுகள், போலியான கையொப்பம், திட்டமிட்டு தவிர்ப்பது அல்லது உட்கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பது போன்றவற்றினால் ஏற்படும் மோசடியின் விளைவைக் காட்டிலும் கடுமையானதாகும்.

- நிலைமைகளுக்கேற்ப, பொருத்தமான கணக்காய்வு செயற்பாடுகளை திட்டமிடுவதற்கு, சபையின் உட்கட்டுப்பாடுகள் குறித்து புரிந்துணர்வுகள் பெறப்பட்டாலும், உட்கட்டுப்பாட்டின் செயல்திறன் தொடர்பான கருத்தை வெளிப்படுத்துவது இதன் நோக்கமாக அமையாது.

- கணக்கியல் கொள்கைகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் நிர்வாகத்தினால் உருவாக்கப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளின் பொருத்தமானதன்மை ஆகியன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் மற்றும் பதவிநிலைகள் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மையின் அளவில் தொடர்பில், முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு முடிவுகளை ஆதாரமாகக்கொண்டு, கணக்கியல் நடவடிக்கைகளுக்காக, நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையைப் பயன்படுத்துவதற்கான சரியான தன்மை குறித்த முடிவுகள் எடுக்கப்பட்டன. இதில் அளவிடக்கூடிய நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நான் முடிவு செய்தால், நிதிக்கூற்றுக்களினால் உருவாக்கப்பட்ட வெளிப்பாடுகள் தொடர்பில், எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக அமையாத பட்சத்தில், எனது கருத்து மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிகழ்வுகள் மற்றும் பதவி நிலைகளினால், தொடர்ச்சியான இருப்பினை நீக்க முடியும்.

- வெளிப்பாடுகளுடன் கூடிய நிதியியல் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்துகை, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன், அதற்கான அடிப்படையான பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகள் நிதியியல் கூற்றுக்களில் சரியான மற்றும் நியாயமான முறையில் சேர்க்கப்பட்டுள்ளனவா என்பது பற்றிய மதிப்பீடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

எனது கணக்காய்வின் போது அடையாளங்காணப்பட்ட, குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள், உள் கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் ஏனைய தரவுகளினூடாக ஆளும் கட்சிகளுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பிரகாரம், பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் சிறப்பு சட்டப்பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 12 (a) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய "தகுதியுடைய கருத்துக்கான அடிப்படைகள்" எனும் தலைப்பின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள விபரங்களின் விளைவுகள் தவிர்ந்த, ஏனைய கணக்காய்வு செயற்பாடுகளுக்குத் தேவையான அனைத்து தரவுகள் மற்றும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், பொருத்தமான நிதியியல் அறிக்கைகள், எனது தேர்வில் வெளிப்படுத்தப்பட்டது போன்று, சபையினால் பராமரிக்கப்படும்.

2.1.2. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 6 (1) (d) (III) க்கமைய, சபையின் நிதியியல் கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் பொருந்துவதாக அமைந்துள்ளன.

2.1.3. கடந்த வருடத்தில், தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 6 (1) (d) (IV) இன் தேவைப்பாடுகளுக்கமைய, வெளிப்படுத்தப்பட்ட நிதியியல் கூற்றுக்களில், 1.2 (a) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர்ந்த, கடந்த வருடத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நிதியியல் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. இது பின்பற்றப்பட்ட செயற்பாட்டு முறைமைகள், பெறப்பட்ட ஆதாரங்கள் மற்றும் அளவுசார் உண்மைகள் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்தமையினால், பின்வரும் கருத்துக்களை முன்வைப்பதற்கு, எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை;

2.2.1. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 , பிரிவு 12 (d) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, இலங்கைத் தேயிலை சபையின், நிர்வாகக்குழுவின் எந்தவொரு உறுப்பினரும், நேரடியாகவோ அல்லது இலங்கை தேயிலை சபையின் ஈடுபாட்டுடனோ எந்தவொரு ஒப்பந்தத்தினூடாகவோ, வழக்கமான வணிக அமைப்பிற்கு வெளியே, ஒப்பந்தமொன்றினைப் பேணுதல்.

2.2.2. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன், பிரிவு 12 (f) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த, இலங்கை தேயிலை சபையின், ஆளும் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனுமொரு குறிப்பிட்ட எழுதப்பட்ட சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது சிறப்பு உத்தரவுகளுக்கமைவாக முன்னெடுக்கப்பட்டது.

சட்டங்கள், விதிகள் / உத்தரவுகள் பற்றிய குறிப்பு	அவதானிப்புக்கள்
(அ) கொள்முதல் வழிகாட்டியின் பிரிவு 4.3.1	இலங்கை தேயிலை சபையின் புதிய கட்டடத்துக்கான மத்திய குளிரூட்டல் கட்டமைப்பினை நிறுவுதல், தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் சேவைகளுக்காக ஒப்பந்தப்பெறுமதியாக ரூபா 32,182,460 காட்டப்பட்டிருந்தும், அதற்குரிய விரிவான ஆய்வறிக்கை தயாரிக்கப்படவில்லை.

2.2.3. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பிரிவு 12 (g) இன் தேவைகளுக்கமைய, சபையின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளுக்கு பொருந்தாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.2.4. தேசிய கணக்காய்வுச் சட்டம் இல 19, 2018 இன் பிரிவு 12 (h) இன் தேவைகளுக்கமைய, சபையின் வளங்கள் சிக்கனமாகவும், திறமையாகவும், திறம்படவும் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகளைத் தவிர, கொள்வனவுகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கை தேயிலை சபையின் நுவெரேலியா பிராந்திய அலுவலகத்தின் தேயிலை விற்பனை நிலையத்தின் தொழிற்பாடுகள், ஒப்பந்தத்தினூடாக தனியார்த் தரப்பினருக்கு ஆறு மாதங்களுக்கு ரூபா 8,162,296 க்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. தனியார் தரப்பினரின் வியாபார நடவடிக்கைகளும் சிறப்பாக தொழிற்படுத்தப்பட்டன. இதனடிப்படையில், இவ் ஒப்பந்தமானது மீளச் செலுத்தக்கூடிய திறன் தொடர்பிலான பாரிசீலனையை மேற்கொள்ளாமல் வழங்கப்பட்டமையினால், கடந்த 2009 லிருந்து, 2022 திசம்பர் 31 வரையான காலப்பகுதிக்குரிய, நுவெரேலியா தேயிலை நிலையத்தினால் தேயிலை சபைக்கு செலுத்தப்படவேண்டிய குத்தகைத் தொகையான ரூபா 2,298,572 அறவிடப்படமுடியாமலுள்ளது.

2.3. ஏனைய விபரங்கள்

(a) பச்சைத் தேயிலைக் கொழுந்து வழங்குனர்களுக்கு செலுத்துவதற்காக, தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களினால், தேயிலை சபையில் 2022 ஆம் ஆண்டு 31 ஆம் திகதியில் ஒருதொகைப்பணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வின் கீழ் வருட முடிவு வரைக்கும் ரூபா 92,245,738 வைப்புக்கள் முறையாக செலுத்தப்படவில்லையென்பதுடன், 10 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்பாக ரூபா 6,508,027 அமைந்திருந்தது.

(b) தேயிலைத் தொழிற்துறைக்கான தகவல் தொழினுட்ப கட்டமைப்பினை நிறுவுவதற்கான அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி கடந்த 2016 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்று, இதற்காக கடந்த 2018 ஜூலை 3 சபையின் விற்பனை மற்றும் ஊக்குவித்தல் நிதியிலிருந்து ரூபா 220,000,000 பெறப்பட்டிருந்தது. இத்தொகையானது இரண்டு வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்துடன், இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு தனியார் நிறுவனத்துடனான ஒப்பந்தம் 2020 செப்டம்பர் 30 அன்று கைச்சாத்திடப்பட்டது. இதனடிப்படையில், இத்திட்டத்தினை இரண்டு வருடம், ஆறுமாத காலத்துக்குள், ரூபா 53,964,995

செலவில் முழுமையாக நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டிருந்தும், இச்செயற்பாடானது 2023 ஏப்பிரல் 30 நிறைவுசெய்யப்பட்டது. இத்தொகையானது அதிக கணிப்புக்களின் கீழ் பெறப்பட்டதுடன், மேலும் ரூபா 166,035,005 பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், இப்பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் செலுத்தத்தக்க ஏனைய செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(c) நீர்ம நிறப்பிரிகை பொருண்மை நிறமாலைமானி, ரூபா 32,132,088 செலவில் கடந்த 2009 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தும், அது எதிர்பார்க்கப்பட்ட நியமங்களுக்கமைவாக இல்லாமையினால் இன்றுவரை பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை. இக்கொள்வனவில் முறைகேடுகள் நடந்துள்ளமையை கவனத்திற்கொண்டு, அதே காலப்பகுதியில் ஆய்வுகூடத்தில் பணியாற்றிய உதவிப் பணிப்பாளருக்கெதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்யப்பட்டது. இதற்கான முறையான விசாரணை நிறைவுசெய்யப்பட்டு, 2022 செப்டம்பர் 22 அன்று பணிப்பாளரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், பணிப்பாளர் சபையினால் குற்றப்பத்திரிகையின் காரணத்தன்மை மற்றும் பக்கசார்பற்ற நிலை ஆராயுமாறு சுயாதீனமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன், அந்நாள் வரை இதுதொடர்பில் முறையான விசாரணையை முன்னெடுத்து, தேவையான ஒழுக்க நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையில், குறித்த உதவிப் பணிப்பாளர் வருட இறுதியில் பணியிலிருந்து ஓய்வுபெற்றதுடன், அவருக்கான பணிக்கொடையாக ரூபா 1,559,775 உம் சபையினால் செலுத்தப்பட்டுள்ளது. விசாரணைக்காக சபையினால் ரூபா 205,454 செலவுசெய்யப்பட்டுள்ளது.

(d) கந்தானையில் அமையப்பெற்றுள்ள ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான சிலோன் தேயிலை அருங்காட்சியகத்தின் உரிமையை, இலங்கை தேயிலை சபைக்கு மாற்றுவதற்கான கலந்துரையாடல்கள் நிறைவுபெற்று தீர்மானங்கள் எடுக்கப்பட்ட நிலையில் 2012 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி நடந்தேறிய பொது நிறுவனங்களுக்குரிய குழுவின் கட்டளைப்படி, ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபைக்கு 2003 செப்டம்பர் 19 இல் வழங்கப்பட்ட கடன் தொகையான ரூபா 25,000,000 மீளக் கிடைக்கப்பெறவேண்டிய நிலையில், இத்துடன் பத்து வருடங்கள் நிறைவேறியும், இன்னும் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. மேலும், ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபையிலுள்ள ஊழியர்களுக்கான சம்பளத்தினை வழங்கும் வகையில், இலங்கை தேயிலை சபையினால் 27.02.2020 ஆம் திகதியன்று கடன் தொகையாக ரூபா 10,000,000 கடனாக வழங்கப்பட்டதுடன், இதில் ரூபா 1,000,000 மாத்திரமே மீளப்பெறப்பட்டுள்ளது.

(e) சிறிய தேயிலை எஸ்டேட் உரிமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப்பயணங்களுக்காக ரூபா 317,232 உம், களுபோவிட்டியான தேயிலைத்தொழிற்சாலையின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப்பயணங்களுக்காக ரூபா 79,200 உம், செலவுசெய்யப்பட்ட நிலையில், அவை 3 தொடக்கம் 4 வரையான வருடகாலத்தில் கிடைக்கப்பெறவேண்டிய மிகுதியாக நிதியியல் கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருந்தும், மீளாய்வு வருடத்தின் இறுதியில், இத்தொகையினை மீள அறவிடுவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

(f) கடந்த 2017 இல் சர்வதேச தேயிலை விருந்தினர் களியாட்டங்களுக்காக தூதரகங்களுக்கு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 51,604,457 தொகையில், 15 நாடுகளிடமிருந்து அறவிடவேண்டிய தொகையாக ரூபா 918,679 மிகுதியாகக் காணப்படுவதுடன், சீனா, அமெரிக்கா மற்றும் மொஸ்கோ தூதரகங்களிடமிருந்து கிடைக்கப்பெறவேண்டிய மொத்தம் ரூபா 868,578 தொகையானது, இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் குறித்த தூதரகங்களிடமிருந்து அறவிடப்பட்டது. எவ்வாறாயினும், தணிக்கை தினம் வரைக்கும் குறித்த அமைச்சிடமிருந்து அக்குறித்த தொகையினை மீள அறவிடுவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(g) கடந்த 2019 இல், பிராந்திய தோட்டத்தொழிற்துறை நிறுவனங்களின் ஊழியர்களுக்கான தீபாவளிப் பண்டிகை முற்பணங்களை வழங்குவதற்காக சபையினால், சபையின் தேயிலை ஊக்குவித்தல் நிதியிலிருந்து ரூபா 8,760,400 எல்கடுவை தோட்டத்தொழிற்துறை நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இவ் முற்பணத்தொகை வழங்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்தும், கடந்த 2022 திசம்பர் 31 வரைக்கும் இத்தொகையை சபைக்கு திருப்பி அறவிடுவதற்குரிய எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(h) இந்து-இலங்கை சுதந்தர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்தர வர்த்தக ஒப்பந்தத்தின் (PSFTA) கீழ், முன்னுரிமை கட்டண விகித ஒதுக்கீடு காணப்படினும், கடந்த 2022 இல் கணிசமானளவு பயன்பாடுளைப் பதியமுடியாமல் போனது. இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான மொத்த ஏற்றுமதிகள் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் முறையே 32% மற்றும் 100% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தன.

(i) கடந்த 2011 ஆம் வருடத்தில், இலங்கை தேயிலைக்கான சர்வதேச உற்பத்திப்பங்கு மொத்த உற்பத்தியில் 18% ஆக அமைந்திருந்ததுடன், இலங்கை தேயிலையின் ஏற்றுமதிகள் படிப்படியாக அதிகரிக்கவில்லையென்பதுடன், இலங்கைத் தேயிலையின் சர்வதேச உற்பத்திப் பங்கானது வருடத்துக்கு 3.88% வீழ்ச்சியடைவதாக, சர்வதேச தேயிலைக் குழாமின் இலவச நாளிதழில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(j) தேயிலை சபையில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 335 ஆக அமைகையில், 2022 திசம்பர், 31 திகதியில் உண்மையான பணியாளர்களின் எண்ணிக்கை 246 ஆகும். இதனடிப்படையில், அதியுயர் மேலாண்மைக்குரிய பிரதி பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்), பணிப்பாளர் (ஊக்குவிப்புக்கள்) மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம்) உள்ளடங்களாக 89 பதவி வெற்றிடங்கள் (03 வருடங்கள் தொடக்கம் 06 மாதங்கள் வரை) நிலவியதுடன், இப்பதவி வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கைகளை மாற்றியமைக்கவோ எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(k) இலங்கை தேயிலை சபையின் புதிய கட்டடத்துக்கான மத்திய குளிரூட்டல் கட்டமைப்பினை நிறுவுதல், தொழிற்படுத்தல் மற்றும் பராமரித்தல் சேவைகளுக்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 13,462,663 மற்றும் ரூபா 10,684,706 செலுத்தப்பட்டிருந்தும், குறிப்பிட்ட வருடங்களில் பட்ஜெட் ஒதுக்கீடுகள் முறையாக ஒதுக்கப்படாத காரணத்தினால் முறையான பட்ஜெட் கட்டுப்பாட்டு நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை.

(l) இலங்கை தேயிலை சபையினால் பராமரிக்கப்படும் ஊக்குவிப்புக்கள் மற்றும் விற்பனை வரி நிதியிலிருந்து பணத்தினை அனுப்பும் பகுப்பாய்வில், நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் ஜனத்தா எஸ்டேட் அபிவிருத்தி சபைக்குக் கடனாக வழங்கப்பட்ட ரூபா 1,055,625,000 தொகையானது 2022 திசம்பர் 31 ஆம் திகதி வரை மீள அறவிடப்படவில்லை.

(m) வருடாந்த அறிக்கை 2022 இன் பிரகாரம், 34 வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்காக பட்ஜெட்டிலிருந்து ரூபா 200,000,000 ஒதுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இவ்வருடத்துக்குள் பங்குபற்றிய வர்த்தகக்கண்காட்சிகளுக்காக மொத்தமாக ரூபா 104,201,553 செலவுசெய்யப்பட்டிருந்தது. இக்கண்காட்சி நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குவது மற்றும் கண்காட்சிகளில் கலந்துகொள்ளும் ஏற்றுமதியாளர்களை தெரிவுசெய்வதில் கவனம் செலுத்தல் தொடர்பில் முறையான கண்காணிப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கண்காட்சி நிகழ்வுகளில் நிறைவில், ஏற்றுமதியாளர்களின் முன்னேற்றம், முன்வைக்கப்பட்ட ஓடர்கள் மற்றும் அவற்றுக்கான பெறுமதிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் வகையில், மதிப்பீட்டுத் தாள்கள் வழங்கப்பட்டு, தகவல்கள் திரட்டப்படும். இந்நிலையில், ஏற்றுமதியாளர்களின் உண்மையான ஏற்றுமதி வளர்ச்சி மதிப்பிடப்படாமையினால், ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட நிதிகள் வினைத்திறனான முறையில் பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து தணிக்கையின் போது திருப்திகரமாக அமையப்பெறவில்லை.

(n) கடந்த 2014 ஆம் ஆண்டு சாத்தியக்கூற்றுக் கற்கைகள் எதுவுமின்றி "ரீ மோமண்ட்" எனப்பெயரிடப்பட்ட கொழும்பு தேயிலை விற்பனை நிலையத்தினை வினைத்திறனற்ற முறையில் நிறுவியமையினால், சபைக்கு ரூபா 62,603,006 நஷ்டம் ஏற்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. இந் நடவடிக்கையுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, 2016 திசம்பர் 06 எனத் திகதியிடப்பட்ட கடிதத்தினூடாக, தோட்டத்தொழிற்துறை அமைச்சின் செயலாளரினால், தலைவருக்கு அனுப்பப்பட்டது. இதற்காக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பது பொறுத்தமற்றதெனப் பணிப்பாளர் வாரியத்தினால் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே, மீளாய்வின் கீழ் ஆண்டின் இறுதியிலும், இதற்குப் பொறுப்பான தரப்பினருக்கெதிராக எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(o) தேயிலை கட்டுப்பாட்டு சட்டம் இல 51, 1957 இன் கீழ், தேயிலைத் தொழிற்சாலைகளை பதிவுசெய்தல் மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகளை விருத்திசெய்தல் போன்ற நடவடிக்கைகள் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும். மீளாய்வின் கீழ், 76 தொழிற்சாலைகளிலிருந்து அனுமதியளிக்கப்பட்ட அளவுகளுக்கதிகமாக 11,630,711 Kg எடையுள்ள தேயிலை பறிமுதல் செய்யப்பட்டது.

டபிள்யூ.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

இலங்கை தேயிலை வாரியம்

574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை
பி.ஒ. பெட்டி: 1750, கொழும்பு, இலங்கை
தொலைபேசி: 011 2582121 / 011 2583687

அவசர தொலைபேசி எண்: 011 2587814
தொலைநகல்: 011 2582122

மின்னஞ்சல்: **teaboard@pureceylonte.com**
இணையதளம்: : **www.pureceylontea.com**
இணையதளம்: **www.pureceylontea.com**

தலைவர்

தொலைபேசி: 011 2587814/2590968
தொலைநகல்: 011 2585701
மின்னஞ்சல்: **chairman@pureceylontea.com**

பொது இயக்குனர்

தொலைபேசி: 011 2587814/2508991
தொலைநகல்: 011 2582122
மின்னஞ்சல்: **dgsltb@pureceylontea.com**

தேயிலை ஆணையர் பிரிவு

தேயிலை ஆணையர்
தொலைபேசி: 0112580182/2580152/2502485/
2584845/2587814/2587773
தொலைநகல்: 011 2580161
மின்னஞ்சல்: **tcd@pureceylontea.com**

தேயிலை ஊக்குவிப்பு பிரிவு

இயக்குனர் (தேயிலை ஊக்குவிப்பு)
தொலைபேசி: 0112583343/2587814/2581418/
2580169
தொலைநகல்: 011 2587341
மின்னஞ்சல்: **promotion@pureceylontea.com**

தேயிலை ஏற்றுமதி பிரிவு

துணை தேயிலை ஆணையர் (ஏற்றுமதி)
தொலைபேசி: 011 2502485/2584845/2587814/
2504090/2587773
தொலைநகல்: 011 2584844
மின்னஞ்சல்: **exports@pureceylontea.com**

பகுப்பாய்வு ஆய்வகம்

இயக்குனர் (ஆய்வகம்)
தொலைபேசி: 011 2587814/2581576
தொலைநகல்: 011 2581576
மின்னஞ்சல்: **lab@pureceylontea.com**

பிராந்திய அலுவலகங்கள்

பதுரலிய

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
281, வத்துறன வீதி, பதுரலிய
தொ.பேசி/ தொ.நகல்: 034-2247444
ஈ-மெயில்: **atcmathugama@pureceylonte.com**

பண்டாரவளை

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
விசாக்கா மாவத்தை, புதிய பதுளை வீதி,பண்டாரவளை
தொ.பேசி/ தொ.நகல்: 057-2222812
ஈ-மெயில்: **atcbandarawela@pureceylonte.com**

காலி

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
59/A, உயர் டிக்ஸன் வீதி,
தொ.பேசி/ தொ.நகல்: 091-2232052
ஈ-மெயில்: **atcgalle@pureceylontea.com**

கம்பளை

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
140, அம்பகமுவ வீதி, கம்பொல
தொ.பேசி/ தொ.நகல்: 081-2352279
ஈ-மெயில்: **atcgampola@pureceylonte.com**

மாத்தறை

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
23, அழுத்மாவத்தை, உயன்வத்தை,மாத்தறை
தொ.பேசி/ தொ.நகல்: 041-2222636
ஈ-மெயில்: **atcmatara@pureceylonte.com**

நுவரெலியா

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
10, நானுஓயா சாலை, காலே காலா, நுவரா எலியா
தொ.பேசி/ தொ.நகல்: 052234658
ஈ-மெயில்: **atcgampola@pureceylonte.com**

இரத்தினபுரி

உதவித் தேயிலை ஆணையாளர்
பிராந்திய அலுவலகம்
இலங்கை தேயிலை சபை
61/1, புதிய நகரம், இரத்தினபுரி,
தொ.பேசி/ தொ.நகல்: 045-2222136
ஈ-மெயில்: **atcrathnapura@pureceylonte.com**

சர்வதேசக் கிளைகள்

ரஷ்யா

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் பிரிவு - ரஷ்யா/ சிஐஎஸ்

மூன்றாவது செயலாளர் (ஊக்குவித்தல் உத்தியோகத்தர்)சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் அலகுஇலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தூதரகம்
24, ஸ்கெப்கினா வீதி,
மொஸ்கோ 129090 ரஷ்யா
தொ.பேசி: 007 495-688-1620
495-68811651/495-688-1463
தொலைநகல்: 007-495-688-1757
ஈ-மெயில்: **tea@srilankaembassy.ru**

சீன

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் பிரிவு - சீனா

மூன்றாவது செயலாளர் (தேயிலை ஊக்குவித்தல்)
சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் அலகு
இலங்கையின் தூதரகம்,
இல 3, ஜெலான் ஹுவ லு,
பீஜின்க் - 100600
மக்களின் ஜனநாயக சோஷலிசக் குடியரசு
தொ.பேசி : 00-86-10-65322919
தொலைநகல்: 00-86-10-65325426
ஈ-மெயில்: **ceylontea@slemb.com**

ஐக்கிய அரபு இராட்சியம்

அமைச்சர் (தேயிலை ஊக்குவிப்பு) - M.E./Gulf/N.A

சிலோன் தேயிலையின் ஊக்குவித்தல் அலகு
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் துணைத் தூதரகம்
த.பெ.இலக்கம்: 51528,
துபாய், ஐக்கிய அரபு இராட்சியம்
தொ.பேசி: 00971 4 3987871
தொ.பேசி (நேரடி): 00971 4 3989349
தொலைநகல்: 00971 4 3987872
ஈ-மெயில்: **ctbureau@emirates.net.ae**
ceylonteadubai@gmail.com
ceylonte@eim.



இலங்கை தேயிலை சபை,
574, காலி வீதி,
கொழும்பு 03,
இலங்கை.

தொலைபேசி : +94 11 2587814
தொலைநகல் : 94 11 2587341
ஈ மெயில் : teaboard@pureceylontea.com
வலையமைப்பு: www.srilankateaboard.lk